# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2026.09.22 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)

# பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாப்பதற்கான

**இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே புரியப்பட்ட பயங்கரவாதச் செயல்களிலிருந்தும், பயங்கரவாதத்துடன் இணைந்த வேறு தவறுகளிலிருந்தும் மற்றும் பயங்கரவாதம் என்ற தவறாகவமைகின்ற குறித்தசில குறித்துரைக்கப் பட்ட செயல்களிலிருந்தும் இலங்கையின் தேசியப் பந்தோபஸ்தையும் இலங்கை மக்களையும் பாதுகாப்பதற்காகவும்; இலங்கைக்கு வெளியே பயங்கரவாதத்துக்காக ஆயத்தஞ்செய்வதற்கு இலங்கைக் குடியரசின் ஆள்புலத்தையும் அதன் மக்களையும் பயன்படுத்துவதனைத் தடுப்பதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும்; பயங்கரவாதச் செயலொன்றை அல்லது பயங்கரவாதத்துடன் இணைந்த வேறேதேனும் தவறைப் புரிந்துள்ள எவரேனுமாளைக் கண்டுபிடிப்பதற்காகவும், அடையாளங்காண்பதற் காகவும், பற்றுவதற்காகவும், கைதுசெய்வதற்காகவும், தடுத்துவைப்பதற்காகவும், புலனாய்வு செய்வதற்காகவும், அவருக்கெதிராகக் குற்றவழக்குத்தொடுப்பதற்காகவும் மற்றும் அவரைத் தண்டிப்பதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை நீக்கு வதற்காகவும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானவொரு சட்டமூலம்**

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்களால்
பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 404.00 தபாற் செலவு : ரூபா 150.00

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

## பிரிவுகளின் பட்டியல்


| | | |
|---|---|---|
| *பிரிவு* | | *பக்க இல.* |
| | முன்னுரை | 1 |
| 1. | சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும் | 3 |


பாகம் I

**சட்டத்தின் ஏற்புடைமை**


| | | |
|---|---|---|
| 2. | சட்டத்தின் ஏற்புடைமை | 3 |


பாகம் II

**தவறுகளும் தண்டங்களும்**


| | | |
|---|---|---|
| 3. | பயங்கரவாதம் என்ற தவறு | 6 |
| 4. | பயங்கரவாதம் என்ற தவறுக்கான தண்டம் | 10 |
| 5. | பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதற்கு எத்தனித்தல் முதலியவற்றுக்கான தண்டம் | 11 |
| 6. | தடைசெய்யப்பட்ட ஒழுங்கமைப்பொன்றுடன் இணைந்த தவறுகள் | 11 |
| 7. | குறித்துரைக்கப்பட்ட செயல்கள் | 12 |
| 8. | பயங்கரவாதத்துடன் இணைந்த செயல்கள் | 13 |
| 9. | பயங்கரவாதத்தை ஊக்குவித்தல் | 14 |
| 10. | பயங்கரவாத வெளியீட்டைப் பரப்புதல் | 15 |
| 11. | பிரிவுகள் 9 மற்றும் 10 இன் நோக்கத்துக்கான கூற்றும் வெளியீடு | 16 |
| 12. | பயங்கரவாதத்துக்கான பயிற்சி | 17 |
| 13. | பிரிவுகள் 6, 7, 8, 9, 10 அல்லது 12 என்பவற்றின் கீழான தவறுகளைப் புரிவதற்கான தண்டம் | 19 |
| 14. | பிரிவுகள் 6, 7, 8, 9, 10 அல்லது 12 என்பவற்றின் கீழான தவறுகளைப் புரிவதற்கு எத்தனித்தல் முதலியனவற்றுக்கான தண்டம் | 19 |
| 15. | தகவலை வழங்கத் தவறுதல் தவறொன்றாகவிருத்தல் | 19 |

*பிரிவு* *பக்க இல.*

16. இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுதல் முதலியன தவறொன்றாதல் 21

17. ஆதனத்தை இழப்பித்தல்மூலம் குற்றப்பணத்தை அறவிடுதல் 22

18. தவறுகள் பிடியாணையின்றிக் கைதுசெய்யத்தக்கனவாகவிருத்தல் 22

## பாகம் III

## தேடுதல், கைதுசெய்தல், தடுத்துவைத்தல் மற்றும் தவறுகளைப் புலனாய்வுசெய்தல்

19. பொலிசு அலுவலரொருவரின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் விசாலித்தல் 22

20. நிறுத்துவதற்கும் தேடுகையிடுவதற்குமான தத்துவம் 23

21. கைதுசெய்யப்படும் நேரத்தில் வழங்கப்படவேண்டிய தகவல் 24

22. அந்தரங்கத் தன்மைக்கு உரிய கவனஞ்செலுத்தி கைது, தேடுகை மற்றும் வினவுகை செய்யப்படுதல் 25

23. பொலிசு அலுவலரொருவரினால் கைதுசெய்யப்படும்போதான நடவடிக்கைமுறை 26

24. ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவரினால் அல்லது கரையோரக் காவல் அலுவலரொருவரினால் கைதொன்று செய்யப்படும்போதான நடவடிக்கைமுறை 26

25. கைது பற்றிய அறிவிப்பு 28

26. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரொருவரை நீதிவானொருவர் முன்னிலைக்குக் கொணர்தல் 30

27. தடுத்துவைத்தற் கட்டளை மற்றும் தடுத்துவைத்தலின் அதிகபட்சக் காலப்பகுதி 32

28. மேல் நீதிமன்றத்தின் அங்கீகாரத்துடன் மட்டும் இரண்டு மாதங்களுக்கப்பால் தடுத்துவைத்தல் நீடிக்கப்படுதல் 34

29. சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்படலாம் 36

30. சுயாதீனப் பரிசீலனைக் குழுவினைத் தாபித்தல் 36

31. நீதிவான் மருத்துவப் பரிசோதனைக்குச் சந்தேகநபரைப் பணித்தல் 38

32. தடுத்துவைத்தற் கட்டளையொன்றுக்குட்படும் சந்தேகநபரொருவர், அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் நிலைமைகளின்கீழ் அங்கீகரிக்கப்பட்டவொரு தடுத்துவைத்தல் இடத்தில் இடப்படுதல் 40

*பிரிவு* *பக்க இல.*

33. நீதிவான் அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடத்தைப் பார்வையிடுதல் 40

34. சந்தேகநபர் மனிதாபிமானமுறையில் நடாத்தப்படுதல் 42

35. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குத் தடுத்துவைத்தல் பற்றிய அறிவிப்பு 42

36. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடத்தைப் பார்வையிடுதல் 43

37. புலனாய்வுகளைப் பூர்த்திசெய்தலும் சந்தேகநபர்களை விடுவித்தலும் 43

38. பொலிசு அலுவலர் விளக்கமறியலிலுள்ள அல்லது மறியற்சாலையிலுள்ள சந்தேகநபருக்கான அணுக்கத்தைக் கொண்டிருத்தல் 44

39. விளக்கமறியலின் போதான அல்லது மறியற்சாலைக் கட்டுக்காப்பின் போதான தடுத்துவைத்தல் 45

40. விளக்கமறியலில் அல்லது தடுத்துவைத்தலில் உள்ள சந்தேகநபர் சட்டத்தரணியொருவரை அணுகக் கூடியவராகவிருத்தல் 48

41. குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்புடைமை 49

## பாகம் IV

## இச்சட்டத்தின்கீழான புலனாய்வுகளுக்கு வசதியளிப்பதற்குக் குறித்தசில அலுவலர்களின் தத்துவங்களும் கடமைகளும்

42. இச்சட்டத்தின்கீழான தவறுகள் புரியப்படுவதனைத் தடுப்பதற்குக் குறித்தசில அலுவலர்களுக்குள்ள கடமை 49

43. கூட்டுப் புலனாய்வுகள் 50

44. புலனாய்வுகளுக்கு வசதியளிப்பதற்கான தத்துவங்கள் 51

45. ஒரு வாகனம், கலம் முதலியனவற்றை நிறுத்துவதற்கு வலோற்காரத்தைப் பயன்படுத்துதல் 54

46. ஏதேனும் வாகனம், கலன் முதலியவற்றின் கட்டுப்பாட்டைக் கையேற்றல் 55

*பிரிவு* *பக்க இல.*

47. கலன், வானூர்தி முதலியனவற்றின் புறப்பட்டுச் செல்லுகை அல்லது கடற்பயணம் என்பவற்றை இடைநிறுத்துதல் அல்லது தாமதித்தல் 55

48. மருத்துவப் பரிசோதனைகள் 57

49. ஓர் அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு அல்லது வேறு நிபுணருக்குப் பொருட்களைச் சமர்ப்பித்தல் 57

50. இலங்கைக்கு வெளியிலான புலனாய்வு 58

51. பொலிசார் பொதுமக்கள் பாதுகாப்புக்கான பணிப்புரைகளை வழங்கலாம் 58


## பாகம் V

## குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுத்தலைப் பின்போடுதலும் குற்றவழக்குத்தொடுப்பையும் விளக்கத்தையும் இடைநிறுத்துதலும்


52. குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுப்பதனைப் பின்போடுதல் 61

53. குற்றவழக்குத்தொடுப்பை இடைநிறுத்துதல் 64

54. விளக்கம் முடிவுறும் வரையிலான தடுத்துவைத்தல் 68

55. இச் சட்டத்தின்கீழான வழக்கு நடவடிக்கைகள் நீதிமன்றத்தில் முன்னுரிமை கொண்டிருத்தல் 69


## பாகம் VI

## கூற்றுக்களின் ஏல்தகவு


56. நீதிவான் கூற்றுக்களைப் பதிதல் 69

57. நீதிவானொருவருக்கு அளிக்கப்பட்ட கூற்றுக்கள் 72

58. ஒரு நீதிவானுக்கு அளிக்கப்பட்ட கூற்றொன்றின் ஏல்தகவுக்காகத் திருப்திசெய்யப்படவேண்டிய முந்நிபந்தனைகள் 72

*பிரிவு* *பக்க இல.*

பாகம் VII

**நானாவிதக் கட்டளைகள்**

59. தடைசெய்தற் கட்டளைகள் 73
60. மட்டுப்பாட்டுக் கட்டளைகள் 76
61. தடைசெய்யப்பட்ட இடங்கள் தொடர்பான கட்டளைகள் 79

பாகம் VIII

**தண்டனைத்தீர்ப்பளித்தல் வழிகாட்டுநெறிகள்**

62. தீங்குபெருக்குகின்ற காரணிகள் 81
63. தணிக்கின்ற காரணிகள் 81

பாகம் IX

**பொது ஏற்பாடுகள்**

64. மத்திய தரவுத்தளத்தைத் தாபித்துப் பேணுதல் 84
65. சிறுவர்கள் கட்டளைச்சட்டம் ஏற்புடையதாதல் 84
66. அலுவலர்கள் முதலியவர்களைப் பாதுகாத்தல் 84
67. ஆட்கள் குழுக்களினாலான தவறுகள் 84
68. ஒழுங்குவிதிகள் 85
69. பணிப்புகள் 87
70. இச்சட்டம் வேறு எழுத்திலான சட்டங்களிலும் மேலோங்கி நிற்றல் 87
71. நீதிமுறைப் பரிசீலனை 87
72. 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தை நீக்குதல் 88
73. நிலைபெயர்கால ஏற்பாடுகளும் பேணல்களும் 88
74. பொருள்கோடல் 91
75. ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல் 97

| *பிரிவு* | *பக்க இல.* |
|---|---|
| **முதலாம் அட்டவணை** | 97 |
| பொருத்தனைகள் | |
| **இரண்டாம் அட்டவணை** | 99 |
| கைதுசெய்தலும் கட்டுக்காப்பும் பற்றிய அறிவிப்பு | |
| **மூன்றாம் அட்டவணை** | 99 |
| இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் கைதுசெய்தல்பற்றிய அறிவிப்பு | |
| **நான்காம் அட்டவணை** | 100 |
| பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்குக் கைதுசெய்தல் பற்றிய அறிவிப்பு | |
| **ஐந்தாம் அட்டவணை** | 101 |
| தடுத்துவைத்தற் கட்டளை | |

பயங்கரவாதத்திலிருந்து அரசைப்
பாதுகாப்பதற்கான

ச.வ.-ஓ 37/2026

**இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே புரியப்பட்ட பயங்கரவாதச் செயல்களிலிருந்தும், பயங்கரவாதத்துடன் இணைந்த வேறு தவறுகளிலிருந்தும் மற்றும் பயங்கரவாதம் என்ற தவறாகவமைகின்ற குறித்தசில குறித்துரைக்கப்பட்ட செயல்களிலிருந்தும் இலங்கையின் தேசியப் பந்தோபஸ்தையும் இலங்கை மக்களையும் பாதுகாப்பதற்காகவும்; இலங்கைக்கு வெளியே பயங்கரவாதத்துக்காக ஆயத்தஞ்செய்வதற்கு இலங்கைக் குடியரசின் ஆள்புலத்தையும் அதன் மக்களையும் பயன்படுத்துவதனைத் தடுப்பதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; பயங்கரவாதச் செயலொன்றை அல்லது பயங்கரவாதத்துடன் இணைந்த வேறே தேனும் தவறைப் புரிந்துள்ள எவரேனுமாளைக் கண்டுபிடிப்பதற்காகவும், அடையாளங்காண்பதற்காகவும், பற்றுவதற்காகவும், கைதுசெய்வதற்காகவும், தடுத்துவைப்பதற்காகவும், புலனாய்வு செய்வதற்காகவும், அவருக்கெதிராகக் குற்றவழக்குத்தொடுப்பதற்காகவும் மற்றும் அவரைத் தண்டிப்பதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை நீக்குவதற்காகவும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானவொரு சட்டம்.**

முன்னுரை

இலங்கை மக்களின் உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் உரிய ஏற்றங்கீகாரத்தையும் மதிப்பையும் உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காகவும் ஆள்புல ஒருமைப்பாட்டையும் இலங்கை மக்களின் இறைமையையும் பாதுகாப்பதற்காகவும் தேசியப் பந்தோபஸ்தைக் காத்தல் தலையாய முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளதென இலங்கை அரசாங்கம் கருதுகின்றதாதலாலும்:

அத்துடன், பொதுமக்களின் காப்பைப் பாதுகாத்தல் என்பது, சட்டவாட்சிக் கோட்பாடுகளுக்கிணங்கவும், அரசியலமைப்பின்கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும், சர்வதேச மனித

PL 15913 - 470 (2026/08)

உரிமைகள் சாதனங்களின்கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டவாறு, சுதந்திரம், ஆளுக்கான பாதுகாப்பு, நியாயமான விளக்கம் மற்றும் எதேச்சையான தடுத்துவைத்தலிலிருந்தான சுதந்திரம் என்பவற்றுக்கான உரிமைகள் முழுமதிப்புடனும் பின்தொடரப்படுதல் வேண்டுமென ஏற்றங்கீகரிக்கப்படுகின்றதாதலாலும்:

அத்துடன், இலங்கை அரசாங்கம், ஏனைய இறைமை கொண்டுள்ள நாடுகளையும் அவற்றின் மக்களையும் பயங்கரவாதச் செயல்களின் கொடுமையிலிருந்து பாதுகாப்பதற்கு உறுதிபூண்டுள்ளதாதலாலும்:

அத்துடன், சர்வதேசத் தரநெறிகளினதும் நியமங்களினதும், உள்நாட்டுத் தேவைகளினதும் அடிப்படையின்மீது, பயங்கரவாதத்துக்கெதிராகக் குற்றவியல் நீதியை நிருவகிப்பதற்கான பயனுள்ள முறைமையொன்றை வலுவுறுத்துவதனூடாக உள்நாட்டு மற்றும் சர்வதேசப் பயங்கரவாதத்தை அடியோடு அழிப்பதற்கும் தடுப்பதற்கும் இலங்கை உறுதி பூண்டுள்ளதாதலாலும் விரும்புகின்றதாதலாலும்:

அத்துடன், ஏதேனும் பயங்கரவாதச் செயலையும் தொடர்புபட்ட செயல்களையும் எதிர்த்தல் தொடர்பான எந்தச் சர்வதேசச் சாதனங்களுக்கு இலங்கை கையொப்பமிடுநர் ஒன்றாக வந்துள்ளதோ அந்தச் சர்வதேசச் சாதனங்களுக்கு உள்நாட்டுச் சட்டப்பயனைக் கொடுப்பதற்கான சட்டங்களையாக்குவதற்கு இலங்கை கடப்பாட்டின்கீழ் உள்ளதாதலாலும்:

அத்துடன், பயங்கரவாதமானது, அதன் பல்வேறு வடிவங்களிலும் வெளிப்படுத்தல்களிலும் தேசங்கள் என்ற சமுதாயத்தின் சமாதானத்துக்கும் பந்தோபஸ்துக்கும் ஒரு பாரிய அச்சுறுத்தலாக உள்ளதாதலாலும்; அத்துடன் இலங்கையையும், அதன் மக்களையும், அவர்களின் ஆதனங்களையும் பயங்கரவாதச் செயல்களிலிருந்தும் தொடர்புபட்ட செயல்களிலிருந்தும் பாதுகாத்தல் இலங்கை அரசாங்கத்தின் முதன்மைக் கடமையொன்றாக உள்ளதாதலாலும்:

அத்துடன், பயங்கரவாதமானது, இலங்கையின் இறைமையையும் ஆள்புல ஒருமைப்பாட்டையும் பாரதூரமாக அச்சுறுத்தியும், இலங்கைப் பிரசைகளுக்கு இறப்பையும் பாரதூரமான ஊறுகளையும் விளைவித்தும், இலங்கையின் பொது மற்றும் தனியார் ஆதனங்களுக்குப் பெருமளவிலான சேதத்தை ஏற்படுத்தியும், தேசிய அபிவிருத்தியைச் சுணக்கியும் உள்ளதாதலாலும்:

ஆகவே இப்பொழுது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப் படுவதாகுக:-

**1.** (1) இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாப்பதற்கான சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

(2) இப்பிரிவு தவிர்ந்த இச்சட்டத்தின்கீழ் ஏற்பாடுகள், (இச்சட்டத்தில் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறானதுமான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள், சட்டமூலமானது எத் தேதியன்று பாராளுமன்றச் சட்டமொன்றாக வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

## பாகம் I

### சட்டத்தின் ஏற்புடைமை

**2.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், பின்வருவோருட்பட, இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்: - சட்டத்தின் ஏற்புடைமை

(அ) இலங்கைக் குடியரசின் ஆள்புலத்தினுள் அல்லது அதற்கு வெளியே, இச்சட்டத்தின்கீழான தவ

றொன்றைப் புரிகின்ற எவரேனும் இலங்கைப் பிரசை;

(ஆ) (i) இலங்கையில் முழுமையாக அல்லது பகுதியளவில்;

(ii) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது அவற்றின்மீது;

(iii) இலங்கையின் வான்வெளியில்;

(iv) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அல்லது இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அதனால் பயன்படுத்தப்படும் ஒரு வானூர்தியின்மீது அல்லது கலத்தின்மீது அல்லது அது தொடர்பில்;

(v) இலங்கைக் குடியரசின் ஆள்புல நீர்ப் பரப்புகளும் வான்வெளியும் உட்பட, இலங்கைக் குடியரசின் ஆள்புலத்தினுள்ளான ஒரு வானூர்தியின்மீது அல்லது கலத்தின்மீது அல்லது அது தொடர்பில்;

(vi) முழுமையாக அல்லது பகுதியளவில் இலங்கையின் இராஜதந்திர அல்லது தூதரகத் தூதுக்குழுவொன்றின் வளவுகளினுள், அல்லது அத்தகைய வளவுகள் தொடர்பில், அல்லது இலங்கையின் தூதரக அலுவலகமொன்றினுள், அல்லது அத்தகைய இராஜதந்திர அல்லது தூதரகத் தூதுக்குழுத் தலைவரின் வதிவிடத்தில் அல்லது எவரேனும் இராஜதந்திர அல்லது தூதரக அலுவலரின் அல்லது அத்தகைய தூதுக்குழுவின் வேறெவரேனும் ஊழியரின் வதிவிடத்தில்;

(vii) முழுமையாக அல்லது பகுதியளவில் இலங்கை அரசாங்கத்தின் நியதிச்சட்டச் சபையொன்றின் இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள அலுவலக வளவுகளினுள், அல்லது அத்தகைய வளவுகள் தொடர்பில், அல்லது அத்தகைய நியதிச்சட்டச்சபையின் ஊழியரொருவரின் வதிவிடத்தினுள்,

இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள்; அத்துடன்

(இ) (i) ஒரு சர்வதேச அமைதி பேணும் அல்லது கண்காணிக்கும் தூதுக்குழுவில் பிரித்தமர்த்தப்பட்ட பிரசையொருவர் உட்பட இலங்கைப் பிரசையொருவர் தொடர்பில்;

(ii) அரசுக்குச் சொந்தமான ஓர் ஆதனம் தொடர்பில்,

இலங்கைக் குடியரசின் ஆள்புலத்தினுள் அல்லது அதற்கு வெளியே இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள்.

(2) இப்பிரிவின் நோக்கத்துக்காக, “அரசுக்குச் சொந்தமான ஆதனம்” என்பது, பின்வருவனவற்றுக்குச் சொந்தமான ஆதனத்தையும் உள்ளடக்கும்: -

(அ) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களுக்கும் நியதிச்சட்ட நிதியங்களுக்கும் அல்லது சபைகளுக்கும்;

(ஆ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது அதன்கீழ் இலங்கை அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்ட தொழில்களுக்கும் வேறு பொறுப்பு முயற்சிகளுக்கும்; அத்துடன்

(இ) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட

அல்லது கூட்டிணைக்கப்பட்ட எக்கம்பெனியில் அரசாங்கம் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத் தாபனம் ஐம்பது சதவீதமான அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருக்கின்றதோ அக்கம்பெனிக்கும்.

## பாகம் II

### தவறுகளும் தண்டங்களும்

பயங்கரவாதம் என்ற தவறு

**3.** (1) பின்வரும் நோக்கத்துக்காக, அரசியல் அல்லது இலட்சியம் சார்ந்த குறிக்கோளொன்றை முன்னெடுத்துச் செல்வதற்கென (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட விளைவொன்றை ஏற்படுத்துகின்ற ஏதேனும் செயலை வேண்டுமென்று அல்லது அறிந்துகொண்டு புரிகின்ற எவரேனுமாள் பயங்கரவாதம் என்ற தவறைப் புரிகின்றார் :-

(அ) பொதுமக்களின் அல்லது ஆட்கள் குழுவொன்றின் மத்தியில் பயங்கரவாத நிலைமையொன்றை உருவாக்குதல்; அல்லது

(ஆ) ஏதேனும் செயலைச் செய்வதற்கு அல்லது செய்வதலிருந்து தவிர்ப்பதற்கு அரசாங்கமொன்றை, அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பொன்றைத் தகாதமுறையில் வலுக்கட்டாயப் படுத்துதல்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விளைவொன்று பின்வருமாறாதல் வேண்டும்: -

(அ) ஆளொருவரின் இறப்பு;

(ஆ) கடுங்காயம்;

(இ) பணயக்கைதியாக எடுத்தல்;

(ஈ) உயிராபத்துக்கான அல்லது கணிசமானளவிலான பொருளாதார இழப்புக்கான சாத்தியக் கூறொன்றை விளைவிக்கின்றதான, ஏதேனும் பொதுப் பயன்பாட்டிடத்துக்கு, ஏதேனும் பொது ஆதனத்துக்கு, ஏதேனும் பொது அல்லது தனியார் போக்குவரத்து முறைமைக்கு அல்லது ஏதேனும் உட்கட்டமைப்பு வசதிக்குப் பாரதூரமான சேதம்;

(உ) உயிராபத்துக்கான அல்லது கணிசமானளவிலான பொருளாதார இழப்புக்கான சாத்தியக் கூறொன்றை விளைவிக்கின்றதான, சூழலுக்கான பாராதூரமான அல்லது நீண்டகாலச் சேதம்;

(ஊ) உயிராபத்துக்கான அல்லது கணிசமானளவிலான பொருளாதார இழப்புக்கான சாத்தியக் கூறொன்றை விளைவிக்கின்றதான பொது மக்களின் அல்லது பொதுமக்களுள் ஒரு பிரிவி னரின் உடனலத்துக்கும் காப்புக்கும் பாராதூர மான அபயாம்;

(எ) உயிராபத்துக்கான அல்லது கணிசமானளவிலான பொருளாதார இழப்புகான சாத்தியக்கூறொன்றை விளைவிக்கின்றதான இலங்கைக்குக் குறித் தளிக்கப்பட்ட செயற்களங்களின் அல்லது இலங்கைக்குக் குறித்தளிக்கப்பட்ட அத்தகைய செயற்களங்களுடன் பதிவுசெய்யப்பட்ட வலைத் தளங்களின் முக்கிய தகவல் உட்கட்மைப்பு அல்லது இணயச் சூழல் உட்பட ஏதேனும் இலத்திரனியல் அல்லது தன்னியக்கமாக்கப்பட்ட அல்லது கணனிமயமாக்கப்பட்ட முறைமையின் அல்லது வலையமைப்பின் இயலாமை, அவற்றின் அழிவு, அவற்றுக்கான பரந்தளவிலான சேதம் அல்லது அவற்றுடனான தலையீடு;

(ஏ) உயிராபத்துக்கான அல்லது கணிசமானளவிலான பொருளாதார இழப்புக்கான அல்லது தேசிய

அல்லது சர்வதேச முக்கியத்துவம்வாய்ந்த கலாச்சாரஞ்சார் மரபுரிமையின் பாரதூரமான இழப்புக்கான சாத்தியக்கூறொன்றை விளை விக்கின்றதான உருவ கலாசாரஞ்சார் ஆதனங் களுக்கான அழிவு;

(ஐ) உயிராபத்துக்கான அல்லது கணிசமானளவிலான பொருளாதார இழப்புக்கான சாத்தியக் கூறொன்றை விளைவிக்கின்றதான, சமிக்ஞைக் கடத்துகை மற்றும் வேறேதேனும் அலைவரிசை அடிப்படையிலான கடத்துகை முறைமை உட்பட, ஏதேனும் இலத்திரனியல், ஒப்புமை, எண்ணிம அல்லது வேறு கம்பியுடன் இணைக்கப்பட்ட அல்லது கம்பியிலாக் கடத்துகை முறைமைக்குப் பரந்தளவிலான முட்டுக்கட்டை அல்லது அவற்றுக்கான சேதம் அல்லது அவற்றுடனான தலையீடு; அல்லது

(ஒ) முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட பொருத்தனைகளுள் எவற்றினதும் நோக்கெல்லை யினுள் அல்லது வரைவிலக்கணத்தினுள் இயைபான சட்டவாக்கத்தில் தவறொன்றாக அமைகின்ற செயலொன்று.

(3) இரண்டாம் உட்பிரிவின் நோக்கத்திற்காக –

"பயணக்கைதியாக எடுத்தல்" என்பது, ஆளொருவரைக் கொல்லுவதற்கான, ஊறுபடுத்துவதற்கான அல்லது அவரைத் தொடர்ந்து தடுத்துவைப்பதற்கான அச்சுத்தலொன்றுடன் சேர்த்து அவ்வாளைக் கைப்பற்றுதல் அல்லது தடுத்துவைத்தல் என்று பொருளாகும்;

"பொதுப் பயன்பாட்டிடம்" என்பது, எந்தப் பெருவழி மற்றும் எந்த வேறேதேனும்

வளவு அல்லது இடத்திற்கு முக்கியமான நேரத்தில் பொதுமக்கள், உரிமையாகவோ அல்லது வேறுவகையாகவோ, அணுக்கத்தைக் கொண்டிருக்கின்றனரோ அல்லது கொண்டிருக்க அனுமதிக்கப்படுகின்றனரோ அந்த ஏதேனும் பெருவழியையும் மற்றும் வேறெவையேனும் வளவுகளையும் அல்லது இடத்தையும் உள்ளடக்குகின்றது.

(4) ஆளொருவர் –

(அ) ஏதேனும் எதிர்ப்பில், பரிந்துரைப்பில் அல்லது மறுதலிப்பில் ஈடுபடுகின்றார் அல்லது ஏதேனும் வேலைநிறுத்தத்தில், கதவடைப்பில் அல்லது வேறு கைத்தொழில் நடவடிக்கையில் ஈடுபடுகின்றார் என்ற நிகழ்வு ;அல்லது

(ஆ) எழுத்திலான சட்டத்துக்கிணங்க மனிதபிமான ஒழுங்கமைப்புகளிலான மனிதாபிமான மற்றும் மருத்துவச் செயற்பாடுகளை வழங்குவதில் ஈடுபடுகின்றவர் என்ற நிகழ்வு,-

(i) அத்தகைய ஆள் ஓராம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறாக உட்கருத்துடன் அல்லது அறிவுடன் அத்தகைய ஆள் ஏதேனும் செயலைப் புரிகின்றாரென அல்லது அச்செயலைப் புரிவதற்கு எத்தனிக்கின்றாரென உடந்தையளிக்கின்றாரென, சதிசெய்கின்றாரென, அல்லது ஆயத்தஞ் செய்கின்றாரென; அல்லது

(ii) அத்தகைய ஆள் இரண்டாம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட விளைவொன்றை விளைவிப்பதற்கு அத்தகைய ஆள்

உட்கருதுகின்றாரென, அல்லது அறிந்து கொண்டு அதனை விளைவிக்கின்றாரென,

ஊகிப்பதற்குப் போதிய அடிப்படையாக அதன் காரணமாகவே இருக்கின்றதில்லை.

**பயங்கரவாதம் என்ற தவறுக்கான தண்டம்**

4. (அ) மூன்றாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியுடன் சேர்த்துவாசிக்கப்படும் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தவறைப் புரிகின்ற எவரேனுமாள் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஆயுட்கால மறியற்றண்டனைவரை நீடிக்கக்கூடிய மறியற்றண்டனைக்காலத்தினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) மூன்றாம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ) அல்லது (ஐ) என்னும் பந்திகளுடன் சேர்த்துவாசிக்கப்படும் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தவறைப் புரிகின்ற எவரேனுமாள், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது இருபதாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான கடூழிய மறியற்றண்டனைக்கும் இருபது மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றிற்கும் ஆளாதல் வேண்டும்;

(இ) மூன்றாம்பிரிவின்(2)ஆம்உட்பிரிவின்(ஓ)என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, இயைபான சட்டவாக்கத்தில் விதித்துரைக்கப்பட்டவாறு அதே மறியற்றண்டனைக் காலத்துக்கு, குற்றப் பணத்துக்கு, அல்லது இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்:

ஆயின், அச்சட்டவாக்கத்தின்கீழ் அத்தகைய தவறுக்காக மரணதண்டனைத்தீர்ப்பு விதித்துரைக் கப்படுமிடத்து, அத்தகைய தண்டனைத்தீர்ப்பு, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஆயுட்கால மறியற்றண்டனை வரை நீடிக்கக்கூடிய மறியற் றண்டனைக் காலமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதற்கு எத்தனித்தல் முதலிய வற்றுக்கான தண்டம்

**5.** (1) மூன்றாம் பிரிவின்கீழ் பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதற்கு எத்தனிக்கின்ற, உடந்தையளிக்கின்ற, அல்லது சதிசெய்கின்ற, அல்லது 3 ஆம் பிரிவின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு ஆயத்தநிலையான ஏதேனும் செயலைச் செய்கின்ற எவரேனுமாள் அத்துடன் அத்தகைய எத்தனிப்பின், உடந்தை யின், சதியின் அல்லது ஆயத்தநிலையின் விளைவாக 3 ஆம் பிரிவின்கீழான பயங்கரவாதம் என்ற தவறு புரியப்படின், அத்தகைய ஆள், பயங்கரவாதம் என்ற தவறுக்காக விதிக்கப் பட்ட அதே தண்டத்துக்கு ஆளாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய எத்தனிப்பு, உடந்தை, சதி அல்லது ஆயத்தநிலையின் விளைவாக, 3 ஆம் பிரிவின்கீழான பயங்கரவாதம் என்ற தவறு புரியப்படாவிடின், அத்தகைய ஆள், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, பதினைந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற் றண்டனைக்கும் பதினைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.

தடைசெய்யப்பட்ட ஒழுங்கமைப் பொன்றுடன் இணைந்த தவறுகள்

**6.** இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே, வேண்டுமென்று –

(அ) தடைசெய்யப்பட்ட ஒழுங்கமைப்பொன்றைச் சேர்கின்ற;

(ஆ) தடைசெய்யப்பட்ட ஒழுங்கமைப்பொன்றுக்காக எவரேனுமாளை ஆட்சேர்க்கின்ற;

(இ) தடைசெய்யப்பட்டவோர் ஒழுங்கமைப்புக்கு நிதிகளை, நிதிச்சேவைகளை, ஆதனங்களை, சாதனங்களை, பயிற்சியை, ஏற்பாட்டியல்சார் உதவிகளை அல்லது வேறு பொருள்வகையான ஆதரவுகளை அல்லது வளங்களை வழங்குகின்ற; அல்லது

(ஈ) ஒரு தடைசெய்யப்பட்ட ஒழுங்கமைப்பை ஒழுங்கு படுத்துகின்ற, வசதிப்படுத்துகின்ற, அதன் ஏதேனும் செயற்பாட்டில் பங்குபற்றுகின்ற, அல்லது அதனைப் பணிக்கின்ற,

எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிகின்றார்:

ஆயின் –

(i) பொருள்வகையான ஆதரவை அல்லது முனைப்பான பங்குபற்றுகையை வழங்காமல், அபிப்பிராயம், நம்பிக்கை அல்லது அனுதாபத்தை வெறுமனே தெரிவித்தல் அல்லது கருத்துத் தெரிவித்தற் சுதந்திரத்தை, ஒருங்குசேர்வதற்கான சுதந்திரத்தை, அல்லது ஒன்று கூடுவதற்கான சுதந்திரத்தை அமைதியாகப் பிரயோகித்தல் தவறொன்றாக அமைதலாகாது; அத்துடன்

(ii) இவ்வுட்பிரிவிலுள்ளதெதுவும், சட்டத்திற் கிணங்க சட்டத்தரணியொருவர் அவரது உயர்தொழில்சார் கடமைகளை நிறைவேற் றுவதிலிருந்து அவரை மட்டுப்படுத்துவதாகப் பொருளமைத்துக்கொள்ளப்படுதலாகாது.

**7.** (அ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குப் பலி யாக்கப்பட்டவரொருவர் தொடர்பாக அல்லது இச்சட்டத்தின்கீழான தவறொன்று குறித்துரைக் கப்பட்ட செயல்கள்

புரியப்பட்டமைக்கான சாட்சியொருவர் தொடர்பாக, 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப் பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் III ஆம் பாகத்தின்கீழான (பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமெதிரான தவறுகள்) தவறொன் றைப் புரிகின்ற; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய் யப்பட்ட பயங்கரவாதம் என்ற தவறைப் புரிதல், புரிய எத்தனித்தல், அதற்கு உடந்தையளித்தல், சதிசெய்தல் அல்லது அதனை ஆயத்தஞ்செய்தல் என்ற நோக்கத்துக்காகப் பொருளொன்றை அல்லது வஸ்துவொன்றை உடைமையில் வைத் திருக்கின்ற,

எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

பயங்கரவாதத் துடன் இணைந்த செயல்கள்

**8.** (1) ஆளொருவர் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளார் என அறிந்துகொண்டு அத்தகைய ஆளுக்குப் புகலிடமளிக்கும், அவரை மறைத்துவைக்கும், அல்லது அவரை அடையாளங்காண்பதை, கைதுசெய்வதை, கட்டுக்காப்பில் எடுப்பதை அல்லது தடுத்துவைப்பதைப் பிழையாக தடுக்கும், தடங்கல்செய்யும் அல்லது அதனோடு தலையிடும் எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

(2) ஏதேனும் இரகசியமான தகவல், இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவற்கு, புரிவதனை எத்தனிப்பதற்கு, அதற்கு உடந்தையளிப்பதற்கு, சதிசெய்வதற்கு அல்லது அதனை புரிவதனை ஆயத்தஞ்செய்வதற்கு வேறெவரேனுமாளினால் பயன்படுத்தப்படுமென அறிந்துகொண்டு அல்லது நம்பு வதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டிருந்து-

(அ) ஆளொருவருக்கு அத்தகைய தகவலை வழங்கும் உட்கருத்தை உடையவராகவிருந்து அத்தகைய தகவலைச் சேகரிக்கின்ற; அல்லது

(ஆ) ஆளொருவருக்கு அத்தகைய தகவலை வழங்குகின்ற,

எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்:

ஆயின், இவ்வுட்பிரிவிலுள்ளதெதுவும் அத்தகைய தகவலைச் சேகரித்தல் அல்லது வழங்குதலில் பொதுமக்களின் அக்கறை, அதிலிருந்து விளையக்கூடியதான சாத்தியமுள்ள தீங்கைவிடக் கூடுதலாக இருக்குமிடத்து, அத்தகவலைச் சேகரிப்பதிலிருந்து அல்லது வழங்குவதிலிருந்து ஆளொரு வரைத் தடுப்பதாகப் பொருளைமைத்துக் கொள்ளப்படு தலாகாது.

பயங்கரவாதத்தை ஊக்குவித்தல்

**9.** (1) பயங்கரவாதம் என்ற தவறைப் பொதுமக்கள் அல்லது பொதுமக்களின் எவரேனும் பிரிவினர் புரிவதற்கு, புரிவதனை எத்தனிப்பதற்கு, அதற்கு உடந்தையளிப்பதற்கு, சதிசெய்வதற்கு அல்லது புரிவதனை ஆயத்தஞ்செய்வதற்கு அவர்களை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஊக்குவிக்கும் உட்கருத்துடன் ஏதேனும் கூற்றை வெளியிடுகின்ற அல்லது வெளியிடச் செய்கின்ற, அல்லது ஏதேனும் சொல்லை அல்லது சொற்களைப் பேசுகின்ற, அல்லது ஏதேனும் சைகையை அல்லது புலப்படத்தக்க குறிப்பீட்டைச் செய்கின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

(2) பயங்கரவாதம் என்ற தவறொன்றைப் பொதுமக்கள் அல்லது பொதுமக்களின் எவரேனும் பிரிவினர் புரிவதற்கு, புரிவதனை எத்தனிப்பதற்கு, அதற்கு உடந்தையளிப்பதற்கு, சதிசெய்வதற்கு அல்லது புரிவதனை ஆயத்தஞ்செய்வதற்கு அவர்களை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஊக்குவிக்கும் அறிவுடன் ஏதேனும் கூற்றை வெளியிடுகின்ற

அல்லது வெளியிடச் செய்கின்ற, அல்லது ஏதேனும் சொல்லை அல்லது சொற்களைப் பேசுகின்ற, அல்லது ஏதேனும் சைகையை அல்லது புலப்படத்தக்க குறிப்பீட்டைச் செய்கின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

**10.** (1) பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதற்கு, புரிவதனை எத்தனிப்பதற்கு, அதற்கு உடந்தையளிப்பதற்கு, சதிசெய்வதற்கு, அல்லது புரிவதனை ஆயத்தஞ்செய்வதற்குப் பொதுமக்களை, பொதுமக்களின் ஒரு பிரிவினரை அல்லது எவரேனுமாளை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஊக்குவிக்கும் உட்கருத்துடன் அல்லது அறிவுடன் - (பயங்கரவாத வெளியீட்டைப் பரப்புதல்)

(அ) ஒரு பயங்கரவாத வெளியீட்டைப் பகிர்ந் தளிக்கின்ற அல்லது சுற்றிவழங்குகின்ற;

(ஆ) ஒரு பயங்கரவாத வெளியீட்டைக் கொடுக் கின்ற, விற்பனைசெய்கின்ற அல்லது கடனாகக் கொடுக்கின்ற;

(இ) ஒரு பயங்கரவாத வெளியீட்டை விற்பனைக்காக முனைகின்ற;

(ஈ) ஒரு பயங்கரவாத வெளியீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு, வாசிப்பதற்கு, கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு அல்லது அதனைக் கொள்ளுவதற்கு ஏனையோரை இயலச்செய்கின்ற சேவை யொன்றை அவர்களுக்கு வழங்குகின்ற;

(உ) ஒரு பயங்கரவாத வெளியீட்டின் உள்ளீடுகளைக் கடத்துகின்ற; அல்லது

(ஊ) பயங்கரவாத வெளியீடொன்றைத் தனதுடைமை யில் வைத்திருக்கின்ற,

எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக "ஒரு பயங்கரவாத வெளியீடு" என்பது, பின்வருமாறான ஒரு வெளியீடாகவுள்ளதாகப் பொருள்படும்:-

(அ) பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதற்கு, புரிவதனை எத்தனிப்பதற்கு, அதற்கு உடந்தையளிப்பதற்கு, சதிசெய்வதற்கு, அல்லது புரிவதனை ஆயத்தஞ்செய்வதற்கு நேரடியான அல்லது நேரடியாகவல்லாத ஏவிவிடுகையாகவுள்ளது; அல்லது

(ஆ) பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதில் அல்லது புரிவதனை எத்தனிப்பதில், அதற்கு உடந்தையளிப்பதில், சதிசெய்வதில், அல்லது புரிவதனை ஆயத்தஞ்செய்வதில் பயனுள்ளதாகவுள்ளது.

(3) இப்பிரிவிலுள்ளதெதுவும், ஊடகவியல், கல்விசார் அல்லது அறிவியல் ஆராய்ச்சி, கல்வி, கலைசார், வெளிப்படுத்துகை, சட்ட வழக்குநடவடிக்கைகள், அல்லது பொதுமக்களின் நலன்கருதி தகவலைப் பரப்புதல் என்பன உட்பட, நல்லெண்ணத்துடனும் சட்டமுறையானவொரு நோக்கத்துக்காகவும் ஏதேனும் வெளியீட்டைச் சேகரித்தல், உடைமைகொள்ளுதல், அணுகுதல் அல்லது பரப்புதல் என்பவற்றுக்கு ஏற்புடையதாதலாகாது.

பிரிவுகள் 9 மற்றும் 10 இன் நோக்கத்துக்கான கூற்றும் வெளியீடும்

**11.** (1) ஒன்பதாம் மற்றும் 10 ஆம் பிரிவுகளின் நோக்கத்துக்காக, விடயத்துக்கேற்ப, ஒரு "கூற்று", "சொல்", "சைகை", "புலப்படத்தக்க குறியீடு" அல்லது "வெளியீடு" என்பது, பின்வருமாறு அமைகின்றதும் நல்லெண்ணத்துடன் மற்றும் சட்டமுறையானவொரு நோக்கத்துக்காக அளிக்கப் பட்டதுமான ஒரு கூற்றை, சொல்லை, சைகையை, புலப்படத்தக்க குறியீட்டை அல்லது செய்யப்பட்டதுமான ஒரு வெளியீட்டை உள்ளடக்குதலாகாது:-

(அ) ஊடகவியலாளாகளினால் ஆன அல்லது ஊடக ஒழுங்கமைப்புகளினால் நியாயமான மற்றும் செம்மையான அறிக்கையிடுகை, விளக்கவுரை அல்லது பகுப்பாய்வு;

(ஆ) கல்விசார், அறிவியல் அல்லது கல்வி ஆராய்ச்சி அல்லது கலந்துரையாடல்;

(இ) மனித உரிமைகள் ஆவணப்படுத்துகை, பரிந்துரைப்பு அல்லது பொதுமக்கள் அக்கறைத் தொடர்பாடல் என்பன உட்பட, குடியியற் சமூக ஒழுங்கமைப்புகளின் பணி;

(ஈ) நீதிமுறை அல்லது நிருவாக வழக்கு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட சட்ட மதியுரை, அல்லது பிரதிநிதித்துவம்;

(உ) பழிப்பு, நையாண்டி அல்லது படைப்பாக்கம் என்பன உட்பட, கல்விசார், இலக்கிய, கலா சாரஞ்சார் அல்லது மதஞ்சார் வெளிப்படுத்துகை;

ஊ) சட்ட முறையான அரசியற் கருத்தாடல் உட்பட, ஓர் அபிப்பிராயத்தின், நம்பிக்கையின், விமர்சனத்தின் அல்லது மறுதலிப்பின் வெளிப் படுத்துகை; அல்லது

(எ) பொதுமக்கள் அக்கறைகொண்டுள்ள விடயங்கள் மீது பொதுமக்களின் நன்மைக்கான தகவலை அறிவித்தல் அல்லது பரப்புதல்.

(2) ஐயத்தை தவிர்ப்பதற்காக, பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதனைத் தூண்டிவிடும் உட்கருத்தில்லாமலும் அத்தகையவொரு தவறுபற்றிய உண்மையான மற்றும் புறவயமான அபாயத்தை உருவாக்காமலும், அபிப்பிராயம், நம்பிக்கை, அனுதாபம், விமர்சனம் அல்லது மறுதலிப்பு என்பவற்றை வெறுமனே வெளிப்படுத்தலானது இச்சட்டத் தின்கீழான தவறொன்றாக அமைதலாகாது.

பயங்கரவாதத் துக்கான பயிற்சி

**12.** (1) ஆளொருவர் அறிவுறுத்தலை அல்லது பயிற்சியை வழங்குகின்ற நேரத்தில், அவ்வறிவுறுத்தலை அல்லது பயிற்சியைப் பெறுகின்ற ஆள், அத்தகைய ஆள் எந்தத் தேர்ச்சிகளில் அறிவுறுத்தப்படுகின்றாரோ அல்லது பயிற்சியளிக்கப்படுகின்றாரோ அந்தத் தேர்ச்சிகளை

3 ஆம் பிரிவின்கீழ் பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதற்காக, புரிவதனை எத்தனிப்பதற்காக, அதற்கு உடந்தையளிப்பதற்காக, சதிசெய்வதற்காக அல்லது புரிவதனை ஆயத்தஞ்செய்வதற்காக அல்லது அது சம்பந்தமாகப் பயன்படுத்துவதற்கு உட்கருதுகின்றார் அல்லது பயன்படுத்துவதற்கு உட்கருதும் சாத்தியத்தைக் கொண்டுள்ளார் என அறிந்துகொண்டு அல்லது நம்புவதற்கான காரணங்களை உடையவராக இருந்துகொண்டு அவ்வாள் அறிவுறுத்தலை அல்லது பயிற்சியை வழங்குமிடத்து, அத்தகைய ஆள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

(2) ஆளொருவர் அறிவுறுத்தல் அல்லது பயிற்சிபெறுகின்ற நேரத்தில், அத்தகைய ஆள் எந்தத் தேர்ச்சிகளில் அறிவுறுத்தப் படுகின்றாரோ அல்லது பயிற்சியளிக்கப்படுகின்றாரோ அந்தத் தேர்ச்சிகளைப் பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதற்காக, புரிவதனை எத்தனிப்பதற்காக, அதற்கு உடந்தையளிப்பதற்காக, சதிசெய்வதற்காக அல்லது புரிவதனை ஆயத்தஞ்செய்வதற்காக அல்லது அது சம்பந்தமாகப் பயன்படுத்துவதற்கு உட்கருதி அவ்வாள் அறிவுறுத்தல்களை அல்லது பயிற்சியைப் பெறுகின்றவிடத்து, அத்தகைய ஆள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக “அறிவுறுத்தல் அல்லது பயிற்சி” என்பது, பின்வருவனவற்றிலான அறிவுறுத்தல் அல்லது பயிற்சி என்று பொருளாகும்: -

(அ) சுடுபடைக்கலன்களை, வெடிப்பொருட்களை அல்லது இரசாயன, உயிரியியற்சார் அல்லது அணு ஆயுதங்களைத் தயாரிப்பதில் அல்லது பயன்படுத்துவதில்; அல்லது

(ஆ) பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதன் நோக்கத்துக்காக அல்லது அதுசம்பந்தமாகப் பயன்படுத்துவதில் அல்லது எதனையும் செய்வதற்காக ஏதேனும் முறையை அல்லது

தொழினுட்பத்தை வடிவமைப்பதற்காக அல்லது இசைவாக்குவதற்காக.

பிரிவு 6, 7, 8, 9, 10 அல்லது 12 என்ப வற்றின் கீழான தவறுகளைப் புரிவதற்கான தண்டம்

**13.** பிரிவு 6, 7, 8, 9, 10 அல்லது 12 இன் கீழான தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள் மேல் நீதிமன்றத் தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது பதினைந்தாண்டு களை விஞ்சாதவொரு காலத்துக்கான கடூழிய மறியற் றண்டனைக்கு அல்லது பதினைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

பிரிவு 6, 7, 8, 9, 10 அல்லது 12 என்பவற் றின்கீழான தவறுகளைப் புரிவதற்கு எத்தனித்தல் முதலியவற் றுக்கான தண்டம்

**14.** (1) பிரிவு 6, 7, 8, 9, 10 அல்லது 12 இன் கீழான தவறொன்றைப் புரிவதற்கு எத்தனிக்கின்ற, உடந்தையளிக் கின்ற அல்லது சதிசெய்கின்ற, அல்லது அத்தகைய பிரிவின் கீழான தவறொன்றைப் புரிவதற்கு ஆயத்த நிலையான ஏதேனும் செயலைச் செய்கின்ற எவரேனுமாள், மற்றும் அத்தகைய எத்தனிப்பு, உடந்தை, சதி அல்லது ஆயத்தத்தின் விளைவாகப் பிரிவு 6, 7, 8, 9, 10 அல்லது 12 இன் கீழான தவறொன்று புரியப்படின், அத்தகைய ஆள் அத்தகைய தவறுக்காக விதிக்கப்பட்ட அதே தண்டத்துக்கு ஆளாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய எத்தனிப்பு, உடந்தை, சதி அல்லது ஆயத்தத்தின் விளைவாகப் பிரிவு 6, 7, 8, 9, 10, அல்லது 12 இன் கீழான தவறொன்று புரியப்படாதிருப்பின், அத்தகைய ஆள் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது பத்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்குக் கடுழீய மறியற்றண்டனைக்கு அல்லது பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற் றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

தகவலை வழங்கத் தவறுதல் தவறொன்றாக விருத்தல்

**15.** (1) (அ) வேறெவரேனுமாள் –

(i) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு ஆயத்தஞ்செய்கின்றார்,

எத்தனிக்கின்றார், உடந்தையளிக்கின்றார் அல்லது சதிசெய்கின்றார்; அல்லது

(ii) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளார்,

என அறிந்துகொண்டு அல்லது நம்புவதற்கான காரணங்களை உடையவராகவிருந்து, ஒரு பொலிசு அலுவலருக்கு அத்தகைய தகவலை வழங்கத் தவறுகின்ற அல்லது பொய்யான அல்லது பிழை வழியுய்க்கும் தகவலை வழங்கு கின்ற எவரேனுமாள்; அல்லது

(ஆ) பயங்கரவாதம் என்ற தவறொன்றை அல்லது பயங்கரவாதத்துடன் இணைந்த தவறொன்றைப் புரிந்துள்ளாரென அவர் அறிந்துள்ள எவரேனுமாள் எங்குள்ளார் என்பது தொடர்பான ஏதேனும் தகவலைத் தனதுடைமையில் வைத்திருந்து, அத்தகைய தகவலை ஒரு பொலிசு அலுவலருக்கு வழங்கத் தவறுகின்ற அல்லது பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தகவலை வழங்குகின்ற எவரேனுமாள்,

இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றா ரென்பதுடன் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மீது ஏழாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஏழு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு தகவலை வழங்கத் தவறியமைக்கு அவருக்கு நியாயமான சாக்கொன்று இருந்ததென எண்பிப்பது (1)ஆம் அவ்வுட் பிரிவின்கீழான தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவருக்கான எதிர்வாதமாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய “நியாயமான சாக்கு” பின்வருவனவற்றை வழங்கத் தவறியமையை உள்ளடக்குகின்றது:-

(அ) சட்டப்படி பாதுகாக்கப்பட்ட தகவல்;

(ஆ) உயர்தொழில்சார் இரகசியத்தன்மையினால் வேவப்பட்ட தகவல்; அத்துடன்

(இ) சுயகுற்றஞ்சாட்டுதற் சான்றாக அமைகின்ற தகவல்.

இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுதல் முதலியன தவறொன்றாதல்

**16.** (அ) இச்சட்டத்தின் நியதிகளின்படி விடுக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஒரு சட்டமுறையான பணிப்புரை, கட்டளை, பணிப்பு அல்லது ஒழுங்கு விதிக்கு வேண்டுமென்று முரணாகச் செயலாற்றுகின்றவரும் அல்லது அதனை மீறிச் செயலாற்றுகின்றவரும்;

(ஆ) இச்சட்டத்தின் நியதிகளின்படி விடுக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்டவொரு பணிப்புரை, கட்டளை, பணிப்பு அல்லது ஒழுங்குவிதிக்கு இணங்கியொழுகுவதற்கு வேண்டுமென்று தவறுகின்றவரும் அல்லது அசட்டை செய்கின்றவரும்;

(இ) இச்சட்டத்தின்கீழான புலனாய்வொன்றை நடாத்துகின்றவொரு பொலிசு அலுவலரினால் அவரிடம் கேட்கப்பட்டவொரு கேள்விக்குப் பதிலிறுப்பாகத் தகவலை வழங்குவதற்கு வேண்டுமென்று தவறுகின்றவரும் அல்லது பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தகவலை வழங்குகின்றவரும்:

ஆயின், எவ்வாறாயினும், எவரேனும் ஆள், சுயகுற்றஞ்சாட்டுதலாகவுள்ள இப்பந்தியின் கீழான ஏதேனும் கூற்றை அளிப்பதற்கு வலுக் கட்டாயப்படுத்தப்படுதலாகாது;

(ஈ) இச்சட்டத்தின்கீழ் விடுக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட சட்டமுறையானவொரு பணிப்புரையை, கட்டளையை அல்லது பணிப்பை நடைமுறைப்படுத்துவதனை வேண்டுமென்று தடுக்கின்றவரும் அல்லது தடங்கல் செய்கின்றவரும்; அல்லது

(உ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை வலுவுறுத்துவதனை வேண்டுமென்று தடுக்கின்றவரும் அல்லது அதற்கு முட்டுக்கட்டையிடுகின்றவரும்,

ஆன அத்தகைய எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படு வதன்மீது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

ஆதனத்தை இழப்பித்தல் மூலம் குற்றப் பணத்தை அறவிடுதல்

**17.** இச்சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் குற்றப் பணம் கொடுப்பனவிலான தவறுகையில் செலுத்தப் படாதுள்ளவிடத்து, மேல் நீதிமன்றம், குற்றப்பணத் தொகையின் பெறுமதிக்குச் சமமாகவுள்ளதென அது கருதுகின்றவாறாக, தவறுகை புரிந்தவரின் அத்தகைய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் குடியரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம். குற்றப்பணத்தொகைக்கு விஞ்சுதலாக அத்தகைய ஆதனத் தின் விற்பனையிலிருந்து தேறிப்பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகை, ஆதனமானது எவ்வாளிடமிருந்து இழப்பிக் கப்பட்டதோ அவ்வாளுக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

தவறுகள், பிடியாணை யின்றிக் கைதுசெய்யத் தக்கனவாக விருத்தல்

**18.** இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட் பட பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் III

## தேடுதல், கைதுசெய்தல், தடுத்துவைத்தல் மற்றும் தவறுகளைப் புலனாய்வுசெய்தல்

பொலிசு அலுவல ரொருவரின் தத்துவங் களையும் கடமைகளை யும் பணி களையும் விசாலித்தல்

**19.** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், சந்தேகநபரொருவரைத் தேடுதலும் கைதுசெய்தலும் தொடர்பாகக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின்கீழ் பொலிசு அலுவலரொருவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட எல்லாத் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் ஏற்றமாற்றங்களுடன், 24 ஆம் பிரிவின்

(1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்டவொரு தவறு தொடர்பாக ஆயுதந்தாங்கிய படைகளின் எவரேனும் உறுப்பினருக்கும் கரையோரக் காவல் அலுவலரொருவருக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**20.** (1) இச்சட்டத்தின்கீழானவொரு தவறு புரியப் பட்டமை பற்றிய நியாயமான சந்தேகம் உள்ளவிடத்து, (இப்பாகத்தில் "கைதுசெய்யும் அலுவலர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒரு பொலிசு அலுவலர், ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் அல்லது கரையோரக் காவல் அலுவலர் 24 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடு களுக்கமைய, - நிறுத்துவதற்கும் தேடுகையிடு வதற்குமான தத்துவம்

(அ) எவரேனும் சந்தேகநபரை, ஏதேனும் வாகனத்தை, கலத்தை, புகையிரதத்தை, ஆளில்லா வாகனத் தை, அல்லது வானூர்தியை நிறுத்தித் தேடுகை யிடலாம்;

(ஆ) அத்தகைய சந்தேகநபரை வினவலாம்;

(இ) எவையேனும் வளவுகளினுள் அல்லது காணி யினுள் பிரவேசித்துத் தேடுகையிடலாம்; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரி வதில் பயன்படுத்தப்பட்ட, அதிலிருந்து பெறப் பட்ட, அதனோடு சம்பந்தப்பட்ட அல்லது தொடர்புபட்ட, அல்லது இச்சட்டத்தின்கீழான தவறைப் புரிவதில் பயன்படுத்தப்படுவதாக, அதிலிருந்து பெறப்படுவதாக, அதனோடு சம்பந்தப்படுவதாக அல்லது தொடர்புபடுவதாக நியாயமானமுறையில் சந்தேகிக்கப்பட்ட ஏதேனும் ஆவணத்தை, வஸ்துவை அல்லது பொருளைக் கட்டுக்காப்பினுள் எடுக்கலாம்.

(2) நாற்பத்தேழாம் பிரிவின் (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் ஒரு கலன் அல்லது வானூர்தி தொடர்பாக, இப் பிரிவின்கீழான தத்துவங்களைப்

பிரயோகிப்பதில் இயைபான அதிகாரிகளுக்கு அறிவித்தல் கொடுத்தல் தொடர்பில், ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் நியதிகளின்படி ஒரு பொலிசு அலுவலரினால் அவ்வாறு கட்டுக்காப்பினுள் எடுக்கப்பட்ட சந்தேகநபரின் உடைமையில் அல்லது கைது செய்யப்பட்ட இடத்தில் அல்லது அத்தகைய கைது செய்தலைப் பின்பற்றிக் கண்டெடுக்கப்பட்ட எல்லாப் பொருட்களும் உட்பட அத்தகைய ஏதேனும் ஆவணம், வஸ்து அல்லது பொருள், உடனடியாக, இயைபான பொலிசு அலுவலர் எந்தப் பொலிசு நிலையத்தைச் சேர்ந்துள்ளாரோ அந்தப் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் முன்னிலைக்குக் கொணர்தல் வேண்டும், அல்லது மிகக்கிட்டிய பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் முன்னிலைக்குக் கொணர்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் நியதிகளின் படி ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவரினால் அல்லது கரையோரக் காவல் அலுவலரொருவரினால் கட்டுக்காப்பினுள் அவ்வாறு எடுக்கப்பட்ட சந்தேகநபரின் உடைமையில் அல்லது கைது செய்யப்பட்ட இடத்தில் அல்லது அத்தகைய கைது செய்தலைப் பின்பற்றி கண்டெடுக்கப்பட்ட எல்லாப் பொருட்களும் உட்பட, ஏதேனும் ஆவணம், வஸ்து அல்லது பொருள், மிகக்கிட்டிய பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு உடனடியாகக் கையளிக் கப்படுதல் வேண்டும்.

(5) மூன்றாம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், அது தொடர்பான அறிக்கையொன்றை நீதிவானுக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்; அந்நீதிவான், அவ்வாறு கட்டுக் காப்பினுள் எடுக்கப்பட்ட ஏதேனும் ஆவணம், வஸ்து அல்லது பொருளின் உடைமை அல்லது விடுவிப்புத் தொடர்பாகத் தோதான கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

கைதுசெய் யப்படும் நேரத்தில் வழங்கப்பட வேண்டிய தகவல்

**21.** (1) கைதுசெய்யப்படும் நேரத்தில் அவ்வாறு கைது செய்யப்படுகின்ற ஆளுக்கு, கைதுசெய்யும் அலுவலர் பின்வருவனவற்றைத் தெரிவித்தல் வேண்டும்: -

(அ) கைதுசெய்கின்ற அலுவலரின் ஆளடையாளம்;

(ஆ) கைதுசெய்வதற்கான காரணம்; அத்துடன்

(இ) எழுத்திலான ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு சந்தேகநபர் ஒரு சட்டத் தரணியை அணுகுவதற்கான உரிமை.

(2) ஓராம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தகவல்களைச் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில், எந்த மொழி சந்தேகநபரினால் விளங்கிக்கொள்ளப்படுகின்றதோ அந்த மொழியில் வழங்குவதற்கு நியாயமான ஒவ்வொரு வழிமுறையும் எடுக்கப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறு கைதுசெய்யும் நேரத்தில் அத்தகைய தகவல்களைச் சந்தேகநபருக்கு வழங்குவது செயல்முறைக்குகந்ததாக இராதவிடத்து, அத்தகைய தகவல்கள் செயல்முறைக்கு கந்தவரை விரைவாகச் சந்தேகநபரினால் விளங்கிக் கொள்ளப்படும் மொழியொன்றில் அவருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

அந்தரங்கத் தன்மைக்கு உரிய கவனஞ் செலுத்தி கைது, தேடுகை மற்றும் வினவுகை செய்யப்படுதல்

**22.** (1) ஒவ்வொரு கைதும் சந்தேகநபரின் அந்தரங்கத் தன்மைக்கு உரிய கவனஞ்செலுத்திச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) எவரேனும் பெண் சந்தேகநபரின் வினவுகையும் கைதும் ஒரு பெண் கைதுசெய்யும் அலுவலரினால் அல்லது ஒரு பெண் அலுவலரின் சமுகத்தில் நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக சாத்தியமான ஒவ்வொரு வழிமுறையும் எடுக்கப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் எவரேனுமாளைத் தேடுகையிடு வதனைச் செய்விப்பதற்கு அவசியமேற்படும்போதெல்லாம், அத்தகைய தேடுகை அவ்வாளின் அந்தரங்கத்தன்மையை முறையாகக் கருத்திற்கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும்.

(4) ஒரு பெண்ணின் தேடுகையிடுதலைச் செய்விப்பது அவசியமாகவுள்ளபோதெல்லாம் அத்தகைய தேடுகை வேறொரு பெண்ணினால் நடாத்தப்படுதல் வேண்டும்.

பொலிசு அலுவலரொருவரினால் கைதுசெய்யப் படும் போதான நடவடிக்கை முறை

**23.** (1) இச்சட்டத்தின்கீழ் கைதொன்றைச் செய்கின்ற பொலிசு அலுவலரொருவர், அவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை, உடனடியாக அத்தகைய பொலிசு அலுவலர் எந்தப் பொலிசு நிலையத்தைச் சேர்ந்துள்ளாரோ அந்தப் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின் முன்னிலைக்குக் கொணர்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அத்தகைய முன்னிலைக்குக் கொணருதல் செயல்முறைக்குகந்ததாக இராதிருக்குமிடத்து, அத்தகைய பொலிசு அலுவலர் அவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை மிகக்கிட்டிய பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின் முன்னிலைக்குக் கொணர்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் நியதிகளின்படி கைதொன்றைச் செய்வதற்கு ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவரின் அல்லது கரையோரக் காவல் அலுவலர் ஒருவரின் உதவியை பெற்றுக்கொள்வது, அல்லது கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை ஒரு பொலிசு நிலையத்திற்குக் கொண்டு செல்வதற்கு அத்தகைய உதவியைப் பெற்றுக்கொள்வது பொலிசு அலுவலரொருவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பின ரொருவரினால் அல்லது கரையோரக் காவல் அலுவலரொரு வரினால் கைதொன்று செய்யப்படும் போதான நடவடிக்கை முறை

**24.** (1) ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவர் அல்லது கரையோரக் காவல் அலுவலரொருவர், பின்வரும் விதிவிலக்கான சூழ்நிலைகளில் தேடுதல் மற்றும் கைதுசெய்தல் தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்:-

(அ) பொலிசு அலுவலரொருவர் அவ்விடத்தில் சமுகமாயிராதவிடத்தும், பொலிசு அலுவலரொருவரின் உடனடிச் சமூகத்தைப் பெறுவது நியாயமானமுறையில் செயல்முறைக்குகந்ததாக விராதவிடத்தும்;

(ஆ) உடனடிப் பயங்கரவாதச் செயலைத் தடுப்பதற்கு நியாயமானது உடனடி நடவடிக்கைகளைத் தேவைப்படுத்துமிடத்து; அல்லது

(இ) சட்டமுறையான அதிகாரத்தின்கீழ் பொது ஒழுங்கைப் பேணுகின்ற அல்லது பயங்கர வாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளை நடாத்து கின்ற நோக்கத்துக்காக ஆயுந் தாங்கிய படைகள் ஓர் இடப்பரப்பில் பிரித்தமர்த்தப்படுமிடத்து.

(2) இச்சட்டத்தின்கீழான கைதொன்றைச் செய்கின்ற ஆயுதந்தாங்கிய படைகளின் ஓர் உறுப்பினர் அல்லது ஒரு கரையோரக் காவல் அலுவலர் அவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை உடனடியாகவும் மற்றும் எப்பட்சத்திலும் இருபத்திநான்கு மணித்தியாலங்களை விஞ்சாதவொரு காலப்பகுதியினுள்ளும் மிகக்கிட்டிய பொலிசு நிலையத் துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அதற்கெனக் காலத் துக்குக்காலம் பெயர்குறிக்கப்பட்டவொரு பொலிசு அலுவலருக்கு கையளிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், கைதுசெய்த ஆளின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற் பட்ட காரணங்களின் நிமித்தம் மிகக்கிட்டிய பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு இவ்வுட் பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் நியதிகளின்படி அவ்வாறு கைதுசெய்யப்படுகின்ற சந்தேகநபரை கையளித்தல் செயல்முறைக்கு உகந்ததல்லாதிருக்குமிடத்து, அத்தகைய சந்தேகநபர் அடுத்து மிகக்கிட்டிய பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்குக் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(3)(அ) கைதுசெய்த ஆயுதந்தாங்கிய படைகளின் ஓர் உறுப்பினர், உடனடியாக, இயைபான ஏவுகின்ற அலுவலருக்கு அல்லது ஏவுகின்ற அலுவலரினால் அதற்கென அதிகாரமளிக்கப்படுகின்ற வேறெவரேனும் ஆணைபெற்ற அலுவலருக்கு அக்கைதுசெய்தலை அறிவித்தல் வேண்டும்.

(ஆ) கைதுசெய்த கரையோரக் காவல் அலுவலரொருவர், உடனடியாக, கரையோரக் காவல் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது கரையோரக் காவல் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதற்கென அதிகார மளிக்கப்படுகின்ற வேறெவரேனும் அலுவலருக்கு அக் கைதுசெய்தலை அறிவித்தல் வேண்டும்.

(4) விடயத்துக்கேற்ப, ஏவுகின்ற அலுவலர் அல்லது கரையோரக் காவல் பணிப்பாளர் தலைமையதிபதி, அல்லது ஏவுகின்ற அலுவலரினால் அல்லது கரையோரக் காவல் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகார மளிக்கப்படுகின்ற எவரேனும் அலுவலருக்கு, அத்தகைய கைதுசெய்தல்பற்றி, சந்தேகநபர் எந்தப் பொலிசு நிலையத் திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு கையளிக்கப் படவுள்ளாரோ அந்தப் பொலிசு நிலையத்திற்குப் பொறுப் பாகவுள்ள அலுவலருக்கு அல்லது அதற்கெனப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் பெயர்குறிக்கப்பட்ட ஒரு பொலிசு அலுவலருக்கு உடனடியாகத் தெரிவித்தல் வேண்டும்.

(5) இப்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரைக் கையளிக்கின்ற நேரத்தில், கைதைச்செய்த ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் அல்லது கரையோரக் காவல் அலுவலர், அத்தகைய கைதுசெய்தல் தொடர்பான சூழ்நிலைகளை எடுத்துக்கூறி, பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அத்தகைய அலுவலருக்குக் கூற்றொன்றை அளித்தல் வேண்டும்.

கைது பற்றிய அறிவிப்பு

**25.** (1) எவரேனும் சந்தேகநபர் இச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்படுமிடத்து, கைதுசெய்கின்ற அலுவலர், உடனடியாக அல்லது எவ்விடயத்திலும் கைதுசெய்தலிலிருந்து இருபத்தி நான்கு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல், அத்தகைய கைதுசெய்தல் பற்றிய நிகழ்வை ஒப்புக்கொண்டு, பொருளளவில் இரண்டாம் அட்டவணையிற்றரப்பட்டுள்ள

படிவத்தில் அத்தகைய சந்தேகநபரின் நெருங்கிய உறவினருக்கு அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டும்:

ஆயின், எவரேனும் சந்தேகநபர் கட்டுக்காப்பினுள் எடுக்கப்பட்டு இவ்வுட்பிரிவிற் குறித்துரைக்கப் பட்டவாறு அறிவித்தலொன்றை வழங்குதல் இயலாத தாகவுள்ளவிடத்து, கைதுசெய்கின்ற அலுவலர் ஒரு பொலிசு அலுவலரொருவராகவிருப்பின், அது ஏன் இயலாததாகவுள்ளது என்பதற்கான காரணங்களை, கொடுத்துத் தகவற் புத்தகத்தில் ஒரு பதிவீட்டைச் செய்தலும், கைதுசெய்கின்ற அலுவலர் ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவராகவிருப்பின், அல்லது கரையோரக்காவல் அலுவலரொருவராகவிருப்பின் அத்தகைய அறிவித்தலை வழங்குதல் ஏன் இயலாததாகவுள்ளதென்பதற்கான காரணங் களை, சந்தேகநபர் எந்தப் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்குக் கையளிக்கப்பட்டாரோ அந்தப் பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அறிக்கையிடுதலும் கைதுசெய்கின்ற அலுவலரின் கடமையாதல் வேண்டுமென்பதுடன் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், அதற்கான காரணங்களுடன் சேர்த்து, தகவற் புத்தகத்தில் அத்தகைய நிகழ்வுபற்றிய பதிவீடொன்றைச் செய்தலும் வேண்டும்.

(2) அத்தகைய சந்தேகநபரின் நெருங்கிய உறவினர் சமுகமளித்திராதிருப்பின், கைதுசெய்கின்ற அலுவலர், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவிப்பு எந்தவோர் ஆளுக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டுமோ அந்தவோர் ஆளின் ஆளடையாளம் மற்றும் அவர் எங்குள்ளார் என்பன பற்றிச் சந்தேகநபரிடம் விசாரித்தல் வேண்டுமென்பதுடன், சந்தேகநபர் அத்தகைய தகவல்களை வழங்கினால், அத்தகைய ஆளுக்கு அறிவிப்பைச் சேர்ப்பிப்பதற்கான இயன்ற எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுதலும் வேண்டும். சொல்லப் பட்ட அறிவிப்பின் பிரதியொன்று சந்தேகநபருக்குச் சேர்ப்பிக் கப்படுதல் வேண்டும்.

(3) சந்தேகநபர் எந்தப் பொலிசு நிலையத்தில் கட்டுக்காப் பில் வைக்கப்பட்டுள்ளாரோ அந்தப் பொலிசு நிலையத்திற்குப்

பொறுப்பாகவுள்ள அலுவலர், செயல்முறைக்குகந்தவரை விரைவாகவும், எப்பட்சத்திலும் சந்தேகநபர் அவர் முன்னிலைக்குக் கொணரப்பட்டதிலிருந்து அல்லது கையளிக்கப் பட்டதிலிருந்து இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமலும் பொருளளவில் மூன்றாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் அத்தகைய கைதுசெய்தல்பற்றி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன், பொருளளவில் நான்காம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்படுகின்ற பிரதிநிதிக்கு அறிவித்தலும் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவர், நீதிவானொருவர்முன்னர் அத்தகைய சந்தேகநபரை நிறுத்தாமல் விடுவிக்கப்படுதலாகாது என்பதுடன் அத்தகைய விடுவிப்புப்பற்றி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குத் தெரிவிக்கப்படுதலும் வேண்டும்.

கைதுசெய்யப் பட்ட சந்தேகநபரொருவரை நீதிவானொருவர் முன்னிலைக்குக் கொணர்தல்

**26.** (1) (அ) இச்சட்டத்தின் நியதிகளின்படி பொலிசு அலுவலர் ஒருவரினால் கைதுசெய்யப்பட்டுள்ளவரும் கட்டுக் காப்பில் வைக்கப்பட்டுள்ளவருமான சந்தேகநபரொருவர், உடனடியாக எப்பட்சத்திலும் அத்தகைய கைதுசெய்தல் நேரத்திலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் மிகக்கிட்டிய நீதிவான் முன்னிலைக்குக் கொணரப் படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) பிரிவு 24 இன் நியதிகளின்படி ஆயுந் தாங்கிய படைகளின் உறுப்பினரொருவினால் அல்லது கரையோரக் காவல் அலுவலரொருவரினால் கைதுசெய்யப் பட்டுள்ள சந்தேகநபரொருவர், அப்பிரிவின்கீழ் அத்தகைய சந்தேகநபர் ஒருபொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவல ரிடம் அல்லது பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவல ரொருவரிடம் உடனடியாக கையளிக்கப்பட்ட நேரத்திலிருந்து எப்பட்சத்திலும் நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் மிகக்கிட்டிய நீதிவான் முன்னிலைக்குக் கொணரப் படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சந்தேகநபரொருவர் ஒரு நீதிவான் முன்னிலைக்குக் கொணரப்படுவதன்மேல், மேலதிகப் புலனாய்வை நடாத்துகின்ற நோக்கத்துக்காகச் சந்தேகநபரின் மேற்கொண்ட நீடித்த கட்டுக்காப்பு அவசியமானதெனப் புலனாய்வை நடாத்துகின்ற பொலிசு அலுவலர் நம்புவதற்கு நியாயமான ஏதுக்களை அவர் கொண்டுள்ளவிடத்து, நீதிவானானவர், எழுத்தில் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக, இருபத்திநான்கு மணித்தியாலங்களை விஞ்சாத மேலதிகக் காலப்பகுதிக்கு அத்தகைய சந்தேகநபர் பொலிசுக் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கலாம்.

(3) சந்தேகநபர், (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிவானொருவர் முன்னிலைக்குக் கொணரப்படும் போதும்-

(அ) இருபத்தேழாம் பிரிவின்கீழ் தடுத்துவைத்தற் கட்டளை ஒன்று முதற்றடவைக்கென இரண்டு மாதக் காலப்பகுதியொன்றுக்கு வழங்கப் பட்டுள்ளவிடத்தும், சோதனைக்காக நீதிவான் முன்னர் இடப்படுகின்றவிடத்தும், நீதிவான், அத்தகைய தடுத்துவைத்தற் கட்டளைக்குப் பயன்கொடுக்கும் வகையில் கட்டளை ஒன்றை ஆக்குதல் வேண்டும்; அத்துடன் அதன் பிரதியொன்றைத் சந்தேகநபர் எந்த இடத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளரோ அந்த இடத்தின் மீது நியாயாதிக்கங்கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்துக்கு அவர் அனுப்பிவைத்தலும் வேண்டும்; அல்லது

(ஆ) தடுத்துவைத்தற் கட்டளை எதுவும் நீதிவான் முன்னர் இடப்படாதுள்ளவிடத்து, நீதிவான் சந்தேகநபரை விளக்கமறியலில் இடுவதற்கான கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

(4) சந்தேகநபர் எந்த நீதிவான் முன்னிலைக்குக் கொணரப்படுகின்றாரோ அந்த நீதிவான் சந்தேகநபரை

இரகசியமான முறையில் நேரடியாகச் சந்தித்து, அவரது நல்வாழ்வு பற்றிக் கவனஞ்செலுத்துதல் வேண்டும் என்பதுடன் சந்தேகநபர் வழங்கக்கூடிய ஏதேனும் கூற்றைப் பதிதலும் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட இரகசியமான முறையிலான வழக்குநடவடிக்கைகளில், கைது செய்தலில் பங்குபற்றியிருக்கக்கூடிய அல்லது சந்தேகநபரினால் புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்ட தவறைப் புலனாய்வுசெய்துள்ள எவரேனும் பொலிசு அலுவலர் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

தடுத்துவைத்தற் கட்டளை மற்றும் தடுத்துவைத் தலின் அதிகபட்சக் காலப்பகுதி

**27.** (1) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அல்லது அதற்கெனப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்டவரும் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ளவரான எவரேனும் அலுவலர், இச் சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதில் சம்பந்தப் பட்டிருந்த அல்லது தொடர்புபட்டிருந்த சந்தேகநபர் ஒருவரை (4) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நோக் கத்துக்காகத் தடுத்துவைப்பதற்கான தடுத்துவைத்தற் கட்டளையொன்றுக்காகச் செயலாளருக்கு எழுத்திலான விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல், (4) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுள் எவற்றுக்காகவும் சந்தேகநபர் தடுத்து வைக்கப்படுதல் வேண்டுமென நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளனவெனச் செயலாளர் திருப்திபடுமிடத்து, அவர், அத்தகைய காரணங்களைப் பதிந்தபின்னர், சந்தேக நபரைத் தடுத்துவைப்பதற்கு அதிகாரமளிக்கின்றதும், பொருளளவில் ஐந்தாம் அட்டவணையிற்றரப்பட்டுள்ள படிவத்திலானதுமான தடுத்துவைத்தற் கட்டளையொன்றை வழங்கலாம்.

(3) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட தடுத்துவைத்தற் கட்டளை ஒவ்வொன்றும் ஒருதடவையில் இரண்டுமாதங்

களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கானதாதல் வேண்டு மென்பதுடன் அத்தகைய தடுத்துவைத்தற் கட்டளை களின்கீழான தடுத்துவைத்தலின் கூட்டுமொத்தக் காலப் பகுதியானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் சந்தேகநபரைத் தடுத்துவைக்கும் நோக்கத்துக்காக வழங்கப்பட்ட ஆரம்பத் தடுத்துவைத்தற் கட்டளைத் தேதியிலிருந்து ஓராண்டை விஞ்சுதலுமாகாது.

(4) ஓராம் உட்பிரிவின்கீழானவொரு தடுத்துவைத்தற் கட்டளையானது அதன் வழங்குகைக்கான காரணங்களைக் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன் பின்வரும் நோக்கங் களுள் ஏதேனுமொன்றுக்கு அல்லது அதற்கதிகமானவற்றுக்கு அது அவசியமாகவுள்ளவிடத்து வழங்கப்படுதலும் வேண்டும்:-

(அ) சந்தேகநபர் தொடர்பிலான புலனாய்வை நடாத்துவதனை வசதிப்படுத்துவதற்கு;

(ஆ) இச்சட்டத்தின்கீழான தவறொன்று புரியப் பட்டமை தொடர்பான புலனாய் வொன்றுக்கான விடயப்பொருட்களையும் இயல்திறச் சான்றையும் பெற்றுக்கொள்வதற்கு; அல்லது

(இ) தடுத்துவைத்தலிலுள்ள சந்தேகநபரை வினவு வதற்கு.

(5) இப்பிரிவின்கீழான தடுத்துவைத்தற் கட்டளை யொன்று, 26 ஆம் பிரிவின்கீழ் இயைபான சந்தேகநபர் நீதிவானொருவர் முன்னிலைக்குக் கொணரப்படும் நேரத்தில் வழங்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய தடுத்துவைத்தற் கட்டளையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று சோதனைக்காக நீதிவானின்முன்னர் இடப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழான ஒவ்வொரு தடுத்துவைத்தற் கட்டளையினதும் பிரதியொன்று, அத்தகைய தடுத்த வைத்தற் கட்டளை வழங்கப்பட்டதிலிருந்து நாற்பத் தெட்டு மணித்தியாலக் காலப்பகுதியொன்றினுள் தடுத்து

வைக்கப்பட்டிருக்கும் சந்தேகநபருக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், சந்தேகநபரினால் அதன் ஒப்புக் கொள்ளலானது பெற்றுக்கொள்ளப்பட்டு இயைபான நீதிவான் நீதிமன்றத்தில் கோப்பிடப்படுதலும் வேண்டும்.

(7) தடுத்துவைத்தற் கட்டளையின் பிரதியொன்று, அத்தகைய தடுத்துவைத்தற் கட்டளை வழங்கப்பட்டதிலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலக் காலப்பகுதியொன்றினுள் சந்தேகநபரின் கிட்டிய உறவினருக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், 25 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய பிரதியைச் சேர்ப்பிக்கும் முறைக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

மேல் நீதிமன்றத்தின் அங்கீகாரத் துடன் மட்டும் இரண்டு மாதங் களுக்கப்பால் தடுத்துவைத்தல் நீடிக்கப்படுதல்

**28.** (1) இருபத்தாறாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தடுத்துவைத்தற் காலப்பகுதிக்கப்பால் ஒரு சந்தேகநபரைத் தடுத்துவைப்பது அவசியமாகவுள்ளவிடத்து, அத்தகைய சந்தேகநபர், அக் காலப்பகுதி முடிவுறுவதன்மேல், 27 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட தடுத்துவைத்தற் கட்டளையொன்றுடன்சேர்த்து மேல் நீதிமன்றம் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டும், அத்துடன் இயைபான பொலிசு நிலையப் பொறுப்பதிகாரி சட்டத்துறைத் தலைமையதிபதி ஊடாக அத்தகைய தடுப்புக் கட்டளைக்கு பயன்கொடுக்கும் வகையில் அத்தகைய சந்தேகநபரின் தடுத்துவைப்புக் காலத்தை நீடிப்பதற்கு கட்டளையொன்றுக்கென மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) மேல் நீதிமன்றம், தடுத்துவைத்தற் காலப்பகுதியை நீடிப்பதற்குப் பயன்கொடுப்பதற்கான கட்டளையொன்றுக் கான விண்ணப்பத்திற்கு ஆதரவாகச் செய்யப்பட்ட சமர்ப்பணங்களையும் மற்றும் தடுத்துவைத்தற் கட்டளையின் அத்தகைய நீடிப்புக்கு எதிராகச் சந்தேகநபரினால் அல்லது அவரது சட்டத்தரணியினால் எழுப்பப்பட்ட எவையேனும் ஆட்சேபனைகளையும் பதிதல் வேண்டும்.

(3) புலனாய்வுகளின் நோக்கத்துக்காகச் சமர்ப் பணங்களின் அந்தரங்கத்தன்மையைப் பேணுவது அவசியமாகவுள்ள

விடத்து, அது தொடர்பாக மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்ப மொன்று செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அது தொடர்பான தோதான கட்டளையொன்றை மேல் நீதிமன்றம் ஆக்கலாம்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட சமர்ப் பணங்களைக் கவனத்துட்கொண்டதன்மேல், மேல் நீதி மன்றம்-

(அ) தடுத்துவைத்தற் கட்டளையிற் குறித்துரைக்கப் படக்கூடியவாறான மேலதிகக் காலப்பகுதி யொன்றுக்கு அத்தகைய கட்டளைக்குப் பயன்கொடுப்பதற்கு போதுமான ஏதுக்கள் இருப்பின், கட்டளையை ஆக்கலாம்; அல்லது

(ஆ) அதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு, நீடிக்கப்பட்ட தடுத்துவைத்தற் கட்டளைக்குப் பயன்கொடுப்பதற்கு மறுக்கலாம் என்பதுடன் விசாரணையின்மேல் சந்தேகநபரை விளக்க மறியலில் இடலாம் அல்லது பிணையில் விடுவிக்கலாம்.

(5) சந்தேகநபரின் தடுத்துவைத்தற் கட்டளையொன்றின் ஏதேனும் நீடிப்பை மேல் நீதிமன்றம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழான வழக்கு நடவடிக்கைகள் அரசிய லமைப்பின் 106 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய, இரகசியமான முறையில் நடாத்தப்படலாம்.

(7) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டவொரு தடுத்து வைத்தற் கட்டளையைப் பின்பற்றித் தடுத்துவைக்கப்பட்ட சந்தேக நபரொருவர், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்மைய, ஆகக் குறைந்தது பதினான்கு நாட்களுக்கு ஒரு தடவையேனும் நீதிவானொருவர் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டும்.

**29.** (1) இருபத்தாறாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் விளக்கமறியலில் இடப்பட்ட சந்தேகநபரொருவர் மேல் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்படலாம்:

சந்தேகநபர் பிணையில் விடுவிக் கப்படலாம்

ஆயின் எவ்வாறாயினும், இச்சட்டத்தின்கீழ் ஆயுட்கால மறியற்றண்டணையினால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றைப் புரிகையில் அல்லது புரிந்திருப்பதில் சம்மந் தப்பட்ட சந்தேகநபரொருவர் விதிவிலக்கான சூழ்நிலைகளில் மேல் நீதிமன்றத்தினால் மட்டும் பிணையில் விடுவிக்கப் படலாம்.

(2) சந்தேகநபரொருவர், அவர் முதன்முதலாக விளக்க மறியலில் இடப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டை விஞ்சுகின்ற காலப்பகுதியொன்றுக்கு, இச்சட்டத்தின்கீழானவொரு தவறு தொடர்பில் விளக்கமறியலில் வைத்திருக்கப்படுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப் பகுதியினுள் ஏதேனும் குற்றப்பகர்வு முன்வைக்கப் பட்டிராவிடின், மேல் நீதிமன்றம், சந்தேகநபரைப் பிணையில் விடுத்தல் வேண்டும்.

**30.** (1) இச்சட்டத்தின்கீழான தடுத்துவைத்தற் கட்டளை களைப் பரிசீலனைசெய்வதற்கு (இதனகத்துப்பின்னர் “குழு” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சுயாதீன பரிசீலனைக் குழுவொன்று இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தாபிக் கப்படுதல் வேண்டும்.

சுயாதீன பரிசீலனைக் குழுவினைத் தாபித்தல்

(2) குழுவானது அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் சுயாதீனமானதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் எவரேனு மாளின் அல்லது அதிகாரியின் பணிப்புக்கு அல்லது கட்டுப் பாட்டுக்கு அமைத்ததாகவிருத்தலாகாது.

(3) குழுவானது, அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; அவர்கள் –

(அ) தவிசாளராக இருக்கவேண்டியவரும் உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதியொருவராகப் பதவி வகித்துள்ள வருமான ஆளொருவர்; அத்துடன்

(ஆ) சட்டம், மனித உரிமைகள், பொது நிருவாகம் அல்லது தேசியப் பந்தோபஸ்து என்ற துறைகளில் எண்பிக்கப்பட்ட நேர்மையையும் அனுபவத்தையும் கொண்டுள்ள வேறு ஆட்கள் இருவர்.

(4) இருபத்தேழாம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டவொரு தடுத்துவைத்தற் கட்டளையினால் இன்னலுறும் எவரேனுமாள் அத்தகைய கட்டளையை பரிசீலனை செய்யும்படி குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(5) குழுவானது தடுத்துவைத்தற் கட்டளையின் அவசியத்தன்மை, சட்டத்தன்மை மற்றும் விகிதாசாரத்தன்மை என்பவற்றைப் பரிசீலனை செய்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆற்றுப்படுத்துகையிலிருந்து முப்பது நாட்களினுள் அதன் தீர்மானத்தைச் செய்தலும் வேண்டும்.

(6) ஒரு பரிசீலனையை நடாத்தும் நோக்கத்துக்காக, குழுவானது –

(அ) தடுத்துவைத்தற் கட்டளை தொடர்பான ஏதேனும் ஆவணத்தைக் கோரிப் பரிசோதனை செய்யலாம்;

(ஆ) தகவலை அல்லது சமர்ப்பணங்களை வழங்கும்படி இயைபான அதிகாரிகளைத் தேவைப்படுத்தலாம்;

(இ) ஒன்றில் நேரடியாக அல்லது ஒரு சட்டத்தரணியினூடாக எழுத்திலான அல்லது வாய்மொழிமூலமான முறையீடுகளைச் செய்வதற்கான வாய்ப்பொன்றைத் தடுத்துவைக்கப்பட்ட ஆளுக்கு அளிக்கலாம்; அத்துடன்

(ஈ) நியாயத்தன்மையின் மற்றும் இரகசியதன்மையின் தேவைப்பாடுகளுக்கமைய, தோதானவையென அது கருதுகின்றவாறான அத்தகைய நடவடிக்கை முறைகளைக் கடைப்பிடிக்கலாம்.

(7) பரிசீலனை பூர்த்திசெய்யப்பட்டதன்மேல், தடுத்து வைத்தற் கட்டளையானது, -

(அ) உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்;

(ஆ) குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, வேறுபடுத்தப்படுதல் வேண்டும்; அல்லது

(இ) இல்லாதொழிக்கப்படுதல் வேண்டும்,

எனக் குழுவானது விதந்துரைக்கலாம்.

(8) அமைச்சர், குழுவின் விதப்புரைக்கு உரிய கவனஞ் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், முடிபைக் காரணங் களுடன் சேர்த்து அத்தகைய விதப்புரை பெறப்பட்ட திலிருந்து ஏழு நாட்களினுள் தடுத்துவைக்கப்பட்ட ஆளுக்கு அறிவித்தலும் வேண்டும்.

(9) குழுவினால் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையையும் இப்பிரிவின் பயனுள்ள நடைமுறைப் படுத்தலுக்கு அவசியமான வேறேதேனும் விடயத்தையும் விதித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகளை அமைச்சர் ஆக்கலாம்.

நீதிவான் மருத்துவப் பரிசோதனைக் குச் சந்தேக நபரைப் பணித்தல்

**31.** (1) சந்தேகநபர் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கக்கூடுமென நீதிவான் நம்புவதற்கு நியாயமான ஏதுக்களை எந்நேரத்திலும் அவர் கொண்டுள்ளவிடத்து, நீதிவான்-

(அ) சந்தேகநபரை மருத்துவச் சிகிச்சைக்காகப் பணித்தல் வேண்டும்;

(ஆ) சந்தேகநபர் பரிசோதனைக்காகச் சட்ட மருத்துவ அலுவலர் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டுமெனவும் மற்றும் நீதிவானுக்கு அறிக்கை யிடுதல் வேண்டுமெனவும் பணித்தல் வேண்டும்; அத்துடன்

(இ) சந்தேகநபரின் தடுத்துவைத்தல் இடத்தை மாற்று வதற்கான கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(2) சந்தேகநபர் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்ற நிகழ்தகவு உள்ளதென்பதை வெளிக்கொணர்கின்ற சட்ட மருத்துவ அலுவலரின் அறிக்கையைப் பெற்றதன்மேல், நீதிவான், பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரினால் செய்யப்பட்ட சமர்ப்பணங்களைக் கேட்ட பின்னர், சந்தேகநபரின் தடுத்துவைத்தல் இடத்தை மாற்று வதற்கான ஒரு கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

(3) நீதிவான், (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஒரு கட்ட ளையை ஆக்குகின்றவிடத்து, சந்தேகநபருக்கான அணுக் கத்தை முன்னர் கொண்டிருந்த எவரேனும் பொலிசு அலுவலர் அத்தகைய அணுக்கத்தைக் கொண்டிருத்தலாகாது.

(4) அத்தகைய சந்தேகநபர் தொடர்பிலான புலனாய்வு, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் பணிக்கப் பட்டவாறு அத்தகைய வேறு பொலிசு அலுவலர்களினால் தொடரப்படுதல் வேண்டும்.

(5) நீதிவான், சார்த்தப்பட்ட சித்திரவதையைப் புரிந்துள்ள ஆளுக்கு எதிராகக் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுப்பதற்காகச் சட்டத்துறைத் தலைமையதிபதியை இயலச்செய்வதற்கு, சார்த்தப்பட்ட சித்திரவதை பற்றிய புலனாய்வு ஒன்றைத் தொடங்குவதற்குப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியைப் பணித்தலும் வேண்டும்.

**32.** (1) எந்தச் சந்தேகநபர் தொடர்பில் 27 ஆம் பிரிவின்கீழ் தடுத்துவைத்தற் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்தச் சந்தேகநபரொருவர், அங்கீகரிக்கப்பட்ட தடுத்து வைத்தல் நிலைமைகளின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட தடுத்து வைத்தல் இடமொன்றில் தடுத்துவைக்கப்படுதல் வேண்டும்.

தடுத்துவைத்தற் கட்டளை யொன்றுக்குட் படும் சந்தேகநப ரொருவர், அங்கீகரிக்கப் பட்ட தடுத்து வைத்தல் நிலைமைகளின் கீழ் அங்கீகரிக் கப்பட்டவொரு தடுத்துவைத்தல் இடத்தில் இடப்படுதல்

(2) இப்பிரிவின் நோக்கத்துக்காக-

(அ) சனாதிபதி, பொலிசுப் பரிசோதகர் தலைமை யதிபதியின் விதப்புரையின்மீது, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய எண்ணிக்கையினவான இடங்களை “அங்கீகரிக் கப்பட்ட தடுத்துவைத்தல் இடங்களாகக்” குறித்துரைத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) சனாதிபதி, பொலிசுப் பரிசோதகர் தலைமை யதிபதியினதும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினதும் கலந்தாலோசனையுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அத்தகைய தடுத்துவைத்தல் நிலைமை களைத் “தடுத்துவைத்தலின் அங்கீகரிக்கப்பட்ட நிலைமைகளாகக்” குறித்துரைத்தல் வேண்டும்.

**33.** (1) அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடமொன்று எந்த நீதிவானின் நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளதோ அந்த நீதிவான், அத்தகைய தடுத்துவைத்தல் இடத்திற்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரிக்கு ஏதேனும் முற்கூட்டிய அறிவித்தல் கொடுக்காமல் –

நீதிவான், அங்கீகரிக் கப்பட்ட தடுத்து வைத்தல் இடத்தைப் பார்வை யிடுதல்

(அ) அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடத்தை மாதத்திற்கொருதடவை பார்வையிடுதல் வேண்டும்;

(ஆ) சந்தேகநபர்களை நேர்காணல் செய்தல் வேண்டு மென்பதுடன் அவர்களின் நல்வாழ்வுபற்றிக் கவனஞ்செலுத்துதலும் வேண்டும்; அத்துடன்

(இ) அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடத்தில் பேணப்படுவதற்குத் தேவைப்பட்ட தடுத்துவைத்தல் இடாப்புகள், தடுத்துவைத்தற் கட்டளைகள் மற்றும் வேறு புத்தகங்களையும் ஆவணங்களையும் கோருதலும் சோதனை யிடுதலும் வேண்டும்.

(2) சந்தேகநபரொருவர் எந்த நீதிவான்முன்னர் முதன் முதலில் நிறுத்தப்பட்டாரோ அந்த நீதிவான் அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடமொன்றைப் பார்வையிடுவதற்கும் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் உரித்துடையவராதலும் வேண்டும்.

(3) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடத்திற்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரி, விடயத்துக்கேற்ப, (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நீதிவானிற்கு உடனடியாகவும் தடையற்றவிதத்திலும் அணுக்கத்தை வழங்குதல் வேண்டும்.

(4) சந்தேகநபர் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்பட்டிருக்கக்கூடும் என நீதிவான் அவதானித்தால் அல்லது சந்தேகநபர், சித்திரவதைக்கு அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட் படுத்தப்பட்டார் எனச் சார்த்தினால், நீதிவான், சட்ட மருத்துவ அலுவலர் ஒருவராலான பரிசோதனைக்காகச் சந்தேக நபரை சட்ட மருத்துவ அலுவலர் முன்னிலைக்குக் கொணரப்படுவதற்கும் அவருக்கு அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கும் உடனடியாகக் கட்டளை யொன்றை ஆக்குதல் வேண்டும்.

(5) சந்தேகநபருக்கும் இயைபான பொலிசு அலுவலருக்கும் கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பம் ஒன்றை வழங்கியபின்னர், சந்தேகநபர் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு

அல்லது தண்டனைக்கு உட்பட்டிருக்கலாம் என நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் இருக்கின்றனவென நீதிவான் திருப்திப் படின், அவர் 31 ஆம் பிரிவின் நியதிகளின்படி செயலாற்றுதல் வேண்டும்.

சந்தேகநபர் மனிதாபிமானமுறையில் நடாத்தப் படுதல்

**34.** (1) அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடத்தில் தடுத்துவைக்கப்பட்டவர்களை மனிதாபிமானமுறையில் நடாத்துவதற்குஅவசியமானதேவைப்பாடுகள்வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடம், அவசியமான மேற்பார்வையின்கீழ், தடுத்துவைக்கப்பட்டவரின் கிட்டிய உறவினருக்கும் அவரது சட்டத்தரணிக்கும் அணுகத்தக்கதாதலும் வேண்டும்.

(2) அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடம் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுகுவதில்லையென, இச்சட்டத்தின் ஏற்பாடு களின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடத்தின் சோதனையொன்றில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அல்லது நீதிவானுக்குத் தோன்றுமிடத்து, அத்தகைய நிகழ்வு, தடுத்துவைத்தலின் விடயங்களில், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்குத் தெரிவிக் கப்படுதல் வேண்டும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்குத் தடுத்து வைத்தல் பற்றிய அறிவிப்பு

**35.** (1) எந்த அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடத்தில் ஒரு சந்தேகநபர் தடுத்துவைக்கப்படுகின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், செயல்முறைக்கு உகந்த வரை விரைவாக ஆனால் எப்பட்சத்திலும், தடுத்து வைத்தல் தொடங்குவதிலிருந்து நாற்பத்தெட்டு மணித்தி யாலங்களுக்குப் பிந்தாமல் 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடத்தை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள் பார்வை யிடுவதற்கு அத்தகைய தடுத்துவைத்தல் பற்றி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) தடுத்துவைத்தற் கட்டளையின் பிரதியொன்று செயல்முறைக்குகந்தவரை விரைவாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அங்கீகரிக் கப்பட்ட தடுத்துவைத்தல் இடத்தைப் பார்வையிடுதல்

**36.** இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் ஏதேனும் முன் கூட்டிய அறிவித்தலைக் கொடுக்காமல்-

(அ) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடத்திற்குள் நுழைவதற்கும் அதனை பரிசோதனை செய்வதற்கும்;

(ஆ) அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடத்தில் பேணப்படுவதற்குத் தேவைப்படும் தடுத்துவைத்தல் இடாப்புகள், தடுத்துவைத்தற் கட்டளைகள் மற்றும் வேறு புத்தகங்கள் அத்துடன் ஆவணங்களைக் கோருவதற்கும் சோதிப்பதற்கும்; அத்துடன்

(இ) அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடத்தில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர்களை நேர்காணல் செய்வதற்கும்,

உரித்துடையவராதல் வேண்டும்.

புலனாய்வு களைப் பூர்த்தி செய்தலும் சந்தேக நபர்களை விடுவித்தலும்

**37.** (1) இச்சட்டத்தின்கீழான ஒவ்வொரு புலனாய்வும் அவசியமற்ற தாமதமின்றிப் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான புலனாய்வொன்று பூர்த்தி செய்யப்படுவதன்மேல், அத்தகைய புலனாய்வுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய படிவத்தில், அத்தகைய புலனாய்வு தொடர்பான அறிக்கையொன்றை நீதிவான் நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(3) சந்தேகநபர் இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறைப் புரிந்துள்ளார் அல்லது புரிவதில் தொடர்புபட்டிருந்தார் என்ற சார்த்துதல் எதனையும் அறிக்கை கொண்டிராதிருப்பின், நீதிவான் அத்தகைய சந்தேகநபரை விட்டுவிடுதல் வேண்டும்:

ஆயின், நீதிவான், ஏதேனும் முன்னரான நேரத்தில், இச்சட்டத்தின்கீழ் நீதிமன்றத்தின் முன்னிலைக்குக் கொணரப் பட்ட சந்தேகநபரொருவரை, சட்டத்துறைத் தலைமை யதிபதியின் சம்மதத்துடன், விட்டுவிடலாம்.

(4) இச்சட்டத்தின்கீழான தடுத்துவைத்தற் கட்டளை யொன்று, புலனாய்வு எச்சந்தேகநபர் தொடர்பில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோ அச்சந்தேகநபரொருவர் தொடர்பில் வழங்கப்படுதலோ அல்லது நீடிக்கப்படுதலோ ஆகாது.

(5) இச்சட்டத்தின்கீழ் விட்டுவிடப்பட்ட எவரேனுமாள் தொடர்பிலான புலனாய்வொன்று எந்நேரத்திலும் மீளத் தொடங்கவிருப்பின், அத்தகைய மீளத்தொடங்குகை பற்றியும் மேலதிகப் புலனாய்வு பூர்த்திசெய்யப்பட்டமைபற்றியும் நீதிவானுக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கும் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

பொலிசு அலுவலர் விளக் கமறியலிலுள்ள அல்லது மறியற் சாலையிலுள்ள சந்தேக நபருக்கான அணுக்கத்தைக் கொண்டிருத்தல்

**38.** (1) இச்சட்டத்தின்கீழ் புலனாய்வு ஒன்றை நடாத்து கின்ற ஒரு பொலிசு அலுவலர், நீதிவானினால் வழங்கப்பட்ட கட்டளையொன்றின்அதிகாரத்தின்கீழ் பின்வருவனவற்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்: -

(அ) சந்தேகநபரை நேர்காணல் செய்வதற்கு விளக்கமறியல் கட்டுக்காப்பில் இடப்பட்டுள்ள சந்தேகநபரொருவருக்கான அணுக்கத்தினைக் கொண்டிருப் பதற்கு;

(ஆ) கூற்றுக்களைப் பதிவதற்கு; அத்துடன்

(இ) மேலதிகப் புலனாய்வை நடாத்தும் நோக் கத்திற்காக விளக்கமறியலில் இருந்து சந்தேக நபரை வெளியில் எடுப்பதற்கு:

ஆயின், எவ்வாறாயினும், மறியற்சாலைகள் திணைக் களத்தின் அலுவலரொருவர் இவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சமுகமாக இருத்தல் வேண்டும்.

(2) சந்தேகநபர் ஒருவர் ஏதேனும் தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு மறியற்றண்டனைக்காலம் ஒன்றை அனுபவித்துக்கொண்டிருக்குமிடத்து, இச்சட்டத்தின்கீழ் புலனாய்வொன்றை நடாத்துகின்ற பொலிசு அலுவலர் ஒருவர், நீதிவானினால் வழங்கப்பட்ட கட்டளையொன்றின் அதிகாரத்தின்கீழ், பின்வருவனவற்றுக்கு உரித்துடைய வராதல் வேண்டும்: -

(அ) சந்தேகநபரை நேர்காணல் செய்வதற்கு மறியற் சாலையிலுள்ள அத்தகைய சந்தேகநபருக்கான அணுக்கத்தைக் கொண்டிருப்பதற்கு;

(ஆ) அவரது கூற்றுக்களைப் பதிவதற்கு; அத்துடன்

(இ) மேலதிகப் புலனாய்வை நடாத்தும் நோக்கத் துக்காகச் சந்தேகநபரை மறியற்சாலையிலிருந்து வெளியில் எடுப்பதற்கு:

ஆயின், எவ்வாறாயினும், மறியற்சாலைகள் திணைக் களத்தின் அலுவலர் ஒருவர் இவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சமுகமாக இருத்தல் வேண்டும்.

விளக்கமறியலின் போதான அல்லது மறியற்சாலைக் கட்டுக்காப்பின்போதான தடுத்து வைத்தல்

**39.** (1) ஒரு பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், இச்சட்டத்தின்கீழான அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்காக விளக்கமறியலில் அல்லது மறியற்சாலைக் கட்டுக்காப்பில் வைக்கப்பட்ட எவரேனுமாள் –

(அ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந் துள்ளார்;

(ஆ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு எத்தனித்துள்ளார், உடந்தையளித்துள்ளார் அல்லது சதிசெய்துள்ளார் அல்லது இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதற்கு ஆயத்த நிலையான ஏதேனும் செயலைச் செய்துள்ளார்; அல்லது

(இ) கைதுசெய்யப்படுவதற்கு முன்னர் இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிந்துள்ளார் என்பதுடன் பொலிசு நிலையமொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள அத்தகைய அலுவலர் அத்தகைய நிகழ்வுபற்றி அறிந்திருக்கவில்லை,

என ஒரு பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அத்தகைய அலுவலர் நம்பத்தகு தகவலைப் பெறுகின்ற விடத்து, அவர் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அத்தகைய தகவலை அறிக்கையிடுதல் வேண்டும்.

(2) ஒரு மேல் நீதிமன்ற நீதிபதி, சட்டத்துறைத் தலைமையதிபதியினால் செய்யப்பட்டவொரு விண்ணப்பத்தின்மீது அத்தகைய தகவல் பற்றி உடனடியாக விசாரணைசெய்தல் வேண்டுமென்பதுடன், விசாரணையின் முடிவில், சந்தேகநபருக்கெதிரான சார்த்துதல் உண்மையாகவிருப்பதாகத் தோன்றுகின்றது என அவர் திருப்திப்படுவாராயின், அத்துடன் அவர் மேலதிகப் புலனாய்வுக்காகத் தடுத்துவைத்தலின்கீழ் சந்தேகநபரை வைத்திருப்பது உசிதமானதெனக் கருதுகின்றவிடத்து, தடுத்துவைத்தற் கட்டளையொன்றினை முன்னிலைக்குக் கொணரப்படுவதன்மீது, தடுத்துவைத்தற் கட்டளைக்குப் பயன்கொடுப்பதற்கான கட்டளையொன்றை ஆக்கலாமென்பதுடன் பின்வருவனவற்றுக்காகப் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரை அனுமதிக்கலாம் -

(அ) சந்தேகநபரின் கட்டுக்காப்பினை ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடத்துக்கு இடமாற்றுதல்;

(ஆ) விளக்கமறியல் கட்டுக்காப்பிலிருந்து சந்தேக நபரை அகற்றுதல்;

(இ) அத்தகைய தடுத்துவைத்தற் கட்டளையின் நியதிகளின்படி அத்தகைய சந்தேகநபரைத் தடுத்துவைக்கச்செய்தல்; அத்துடன்

(ஈ) சந்தேகநபர் தனிமைப்படுத்தலில் அல்லது பாதுகாப்பின்கீழ் வைத்திருக்கப்படவேண்டு மெனக் கட்டளையிடுதல்.

(3) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட தடுத்துவைத்தற் கட்டளை -

(அ) செயலாளரினால் வழங்கப்படுதல் வேண்டும்;

(ஆ) ஆறு மாதங்களை விஞ்சாத ஒன்றுதிரண்ட காலப்பகுதிக்காக ஒருதடவையில் இரண்டுவாரக் காலப்பகுதியொன்றுக்காக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) ஒவ்வொரு பதினான்கு நாட்களுக்கும் ஒருதடவை மேல் நீதிமன்ற நீதிபதியினால் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், 35 ஆம், 36 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் அத்தகைய தடுத்துவைத்தற் கட்டளை தொடர்பில் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(4) மேல் நீதிமன்றம், விளக்கமறியல் அல்லது மறியற்சாலைக் கட்டுக்காப்பிலிருந்து தடுத்தவைத்தலுக்குச் சந்தேகநபரின் இடமாற்றத்தை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டும்.

(5) (அ) மறியற்சாலைக் கட்டுக்காப்பிலிருந்த ஆளொருவரினால் இச்சட்டத்தின்கீழ் தடுத்துவைத்தலில் செலவிடப்பட்ட காலப்பகுதி, அத்தகைய ஆளின் தண்டனைத்தீர்ப்புக் காலப்பகுதியின் பாகமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) விளக்கமறியலிற் கட்டுக்காப்பிலிருந்த ஆளொருவரினால் இச்சட்டத்தின்கீழ் தடுத்துவைத்தலில் செலவிடப்பட்ட காலப்பகுதி, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 203 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக அவரது விளக்கமறியற் காலப்பகுதியின் பாகமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஆறு மாதக்காலப்பகுதியின் முடிவின்மேல் அல்லது அதன்முன்னர் எந்நேரத்திலும் புலனாய்வுகள் முடிவுற்றனவெனச் சட்டத்துறைத் தலைமையதிபதி மேல் நீதிமன்றத்துக்குத் தெரிவித்தால், மேல் நீதிமன்ற நீதிபதி விடயத்துக்கேற்ப, சந்தேகநபரை விளக்கமறியற் கட்டுக்காப்புக்கு அல்லது மறியற்சாலைக் கட்டுக்காப்புக்கு மீண்டும் பாரப்படுத்துகின்ற கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(7) மறியற்சாலைக் கட்டுக்காப்பிலுள்ள ஆளொருவர் இச்சட்டத்தின்கீழான ஏதேனும் புலனாய்வில் ஒரு சந்தேகநபராகவிருக்குமிடத்து, மறியற்சாலைகள் ஆணையாளர் தலைமையதிபதி, தண்டனைத்தீர்ப்பு முடிவுறுகையில், சந்தேகநபரை விளக்கமறியலிலிடும் நோக்கங்களுக்காக அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி வேறேதேனும் பொருத்தமான கட்டளைக்காக, அவர் எந்த நீதிவான் நீதிமன்றத்தில் சந்தேகநபரொருவராக்கப்பட்டுள்ளாரோ அவரை இயைபான அந்த நீதிவான் நீதிமன்றத்தின் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டும்.

விளக்கமறியலில் அல்லது தடுத்துவைத்தலில் உள்ள சந்தேகநபர் சட்டத்தரணியொருவரை அணுகக் கூடியவராக விருத்தல்

**40.** இச்சட்டத்தின்கீழ் விளக்கமறியலில் இடப்பட்ட அல்லது தடுத்துவைக்கப்பட்ட சந்தேகநபரொருவர், எழுத்திலான சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, அவரது உறவினர்கள், சட்டத்தரணி அல்லது அவர் விரும்பிய வேறெவரேனும் ஆள் அவருடன் தொடர்பாடுவதற்கும் அவரைப் பார்வையிடுவதற்குமான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் ஏற்புடைமை

**41.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதன வாகவிராத குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின்கீழான ஏதேனும் புலனாய்வு அல்லது வழக்குநடவடிக்கைக்கு ஏற்ற மாற்றங் களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 115 ஆம் மற்றும் 116 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின்கீழான சந்தேகநபரொருவர் தொடர்பாக ஏற்புடைமை எதனையும் கொண்டிருத்தலாகாது.

(3) குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அச்சட்டத்தின் 306 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்காக ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது நீதிமன்றத்துக்குமுன்னர் குற்றவாளியாகக் காணப்படும் அல்லது வழக்குரைக்கும் எவரேனுமாளின் விடயத்தில் ஏற்புடையனவாதலாகாது.

## பாகம் IV

## இச்சட்டத்தின்கீழான புலனாய்வுகளுக்கு வசதியளிப்பதற்குக் குறித்தசில அலுவலர்களின் தத்துவங்களும் கடமைகளும்

இச்சட்டத் தின்கீழான தவறுகள் புரியப் படுவதனைத் தடுப்பதற்குக் குறித்தசில அலுவலர் களுக்குள்ள கடமை

**42.** (1) இச்சட்டத்தின்கீழான தவறொன்று புரியப்படு வதனைத் தடுப்பதற்குத் தோதாகவிருக்கக்கூடியவாறான ஏதேனும் வழிமுறையை எடுத்தல், ஒவ்வொரு பொலிசு அலுவலரினதும் ஆயுதந்தாங்கிய படையின் எவரேனும் உறுப்பினரினதும் அல்லது ஒரு கரையோரக் காவல் அலுவலரினதும் கடமையாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, எவரேனும் அலுவலர் அத்தகைய வழிமுறைகளை –

(அ) நல்லெண்ணத்துடன்;

(ஆ) தவறு புரியப்படுகின்றமையினால் விளைவிக் கப்படக்கூடிய தீங்கிற்கு விகிதாசாரமாக; அத்துடன்

(இ) இச்சட்டத்தின்கீழான தவறொன்று புரியப்படு வதனைத் தடுப்பதற்கு அல்லது இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிந்துள்ள ஆட்களைப் பற்றும் நோக்கத்துக்காக அத்தகைய வழிமுறைகள் அவசியமாகவிருக்கக்கூடிய அளவுவரை மட்டும்,

எடுத்தல் வேண்டும்.

கூட்டுப் புலனாய்வுகள்

**43.** (1) விடயத்தின் சூழ்நிலைகள் அவ்வாறு நியாயப் படுத்தினால், இச்சட்டத்தின்கீழ் சார்த்தப்பட்ட தவறொன்று பற்றியவொரு புலனாய்வை நடாத்துகின்ற நோக்கத்துக்காக, செயலாளரின் கலந்தாலோசனையுடன் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கும், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான இலங்கையிலுள்ள வேறெவரேனும் புலனாய்வுசார் அதிகாரிக் கும் இடையேயான உடன்பாடொன்றின்மூலம் ஒரு கூட்டுப் புலனாய்வுக் குழு, குறித்தவொரு காலப்பகுதிக்காக அமைக்கப்படலாம்.

(2) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, அமைச் சரின் ஒருப்பாட்டுடன், ஒரு வெளிநாட்டரசினால் கோரிக்கை யொன்று விடுக்கப்பட்டுள்ளவிடத்து, பின்வருவன தொடர் பான கூட்டுப் புலனாய்வு அணிகளையும் தாபிக்கலாம்:-

(அ) இலங்கையும் அந்த வேறு வெளிநாட்டரசும் அவற்றுக்குத் திறத்தவர்களாகவுள்ள இருபுடை அல்லது பல்புடை உடன்படிக்கைகளின்கீழ் அல்லது ஒழுங்கேற்பாடுகளின்கீழ் வருகின்ற கருமங்கள்; அல்லது

(ஆ) அத்தகைய உடன்படிக்கைகளோ அல்லது ஒழுங் கேற்பாடுகளோ இல்லாதபோது, விடயத்துக்கு விடயம் என்ற அடிப்படையில்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஒரு கூட்டுப் புலனாய்வு அணி, பின்வரும் சந்தர்ப்பங்களின் போது தாபிக்கப்படலாம்:-

(அ) எவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு புலனாய்வு, சட்டவலுவுறுத்துகை, ஒழுங்குபடுத்துகைப் பணிகள், குற்றவழக்குத் தொடுப்புக்கள் பற்றிய கடமைகள் குறித்தளிக் கப்படும் போதும், புலனாய்வில் ஈடுபட்டுள்ள முகவராண்மைகளினால் அல்லது அரசு களினால் ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் ஒத்திசைவாக்கப்பட்ட நடவடிக்கைகளைத் தேவைப்படுத்துகின்ற அதே விடயப்பொருள் பற்றிய நீதிமுறை நடவடிக்கைகளில் அத்தகைய ஆள் அல்லது ஆட்கள் குழு ஈடுபடுகின்றபோதும்; அத்துடன்

(ஆ) இரண்டாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, இலங்கையிலும் ஏககாலத்தில் வேறு வெளிநாட்டு அரசிலும் புலனாய்வு நடவடிக்கைகள் நிறை வேற்றப்பட வேண்டியுள்ளபோதும்.

(4) கூட்டுப் புலனாய்வுகளின்போது பெற்றுக் கொள்ளப் பட்ட தகவல், புலனாய்வுசெய்யப்பட்டவர்களாகவிருந்த ஆட்கள் தகுதிவாய்ந்த நீதிமன்றங்களில் விளங்கப்படுமிடத்து, அத்தகைய நீதிமன்றங்களினால் பயன்படுத்தப்படலாம்.

புலனாய் வுகளுக்கு வசதியளிப் பதற்கான தத்துவங்கள்

**44.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின் நியதிகளின்படி புலனாய்வு ஒன்றை நடாத்துவதற்குப் பொலிசு நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள ஓர் அலுவலரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டுள்ளவரான பொலிசு அலுவலர் ஒருவர், ஒரு நீதிவானிடமிருந்து பெற்றுக்கொள்ளப் பட்ட கட்டளையொன்றின்மேல், இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்தவராகச் சார்த்தப்படும் எவரேனும் சந்தேகநபரைப் பின்வருமாறு செய்யும்படி கோரலாம்:-

(அ) உதவிப் பொலிசு அத்தியட்சகர் என்ற பதவி வரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள ஒரு பொலிசு அலுவலருக்கு (2) ஆம், (3) ஆம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, சத்தியக்கடுதாசியொன்றை சமர்ப்பிக்கும்படியும்;

(ஆ) அத்தகைய சந்தேகநபரின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கக்கூடியதும் புலனாய் வுக்கு இயைபானதுமான ஏதேனும் ஆவணத்தை அல்லது வஸ்துவை கொடுக்கும்படியும்:

ஆயின்,-

(i) அத்தகைய ஆவணம் அல்லது வஸ்து பெறப்பட்டமை பற்றிய ஒப்புக்கொள்ளல் அத்தகைய சந்தேகநபருக்கு எழுத்தில் வழங்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ii) அத்தகைய ஆவணத்தை அல்லது வஸ்துவை எடுத்தல்பற்றி நீதிவானுக்கு உடனடியாக அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் சத்தியக்கடுதாசி, உதவிப்பொலிசு அத்தியட்சகர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள எந்தப் பொலிசு அலுவலருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றதோ அந்தப் பொலிசு அலுவலர், அத்தகைய சத்தியக் கடுதாசி சமர்ப்பிக்கப்பட்ட நேரத்தில் (3), (4) மற்றும் (5) ஆகிய உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டுள்ளன வென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(3) ஆளொருவர், தவறொன்றைப் புரிவதில் தன்னையே சம்பந்தப்படுத்துகின்ற அல்லது குற்றஞ்சாட்டுகின்ற கூற்றொன்றை அளிப்பதற்குப் பிணிக்கப்படுதலாகாது என்பதுடன், அத்தகைய ஏதேனும் சத்தியக்கடுதாசி அத்தகைய சந்தேகநபருக்கெதிராக ஏல்தகவற்றதாதலும் வேண்டும்.

(4) நேர்காணல் செய்யப்படவேண்டியவரும் அவரது கூற்று பதியப்படவேண்டியவரும் அல்லது அவரிடமிருந்து சத்தியக்கடுதாசியொன்று பெறப்படவேண்டியுள்ளவருமான எவரேனும் சந்தேகநபருக்கு அத்தகைய நேர்காணல் அல்லது பதிதல் செய்யப்படுவதற்குமுன்னர் அல்லது சத்தியக்கடுதாசி முன்னிலைக்குக் கொணரப்படுமுன்னர் சட்டமதியுரை பெற்றுக்கொள்வதற்குத் தாம் விரும்பிய சட்டத்தரணி யொருவரை அணுகுவதற்காக அவருக்குள்ள உரிமைபற்றித் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் செயலாற்றுகின்ற பொலிசு அலுவலர் ஒருவர், சந்தேகநபரொருவர் நேர்காணல் செய்யப்படுவதற்குமுன்னர் இச்சட்டத்தின்கீழ் அவ்வாளுக்கு அவரது உரிமைகளைத் தெரிவித்தல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழ் நடாத்தப்பட்ட ஒவ்வொரு நேர் காணலும் கட்புல-செவிப்புல ரீதியில் பதியப்படுதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய பதிதலானது புலனாய்வின் அலுவலகமுறையான பதிவேட்டின் பாகமாக அமைதலும் வேண்டும்.

(7) தொழில்நுட்ப முறிவு அல்லது வேறு விதிவிலக்கான சூழ்நிலைகள் காரணமாக, (6) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஒரு நேர்காணலைப் பதிதலானது செயல்முறைக்குகந்ததாக இராதவிடத்து, நேர்காணலை நடாத்துகின்ற பொலிசு அலுவலர் –

(அ) அத்தகைய முறிவு அல்லது இயலாமைக்கான காரணங்களை எழுத்தில் பதிதல் வேண்டும்;

(ஆ) செயல்முறைக்குகந்தவரை விரைவாக, பதிதலின்றி நேர்காணலைத் தொடர்வதற்காக ஒரு நீதிவானின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்; அத்துடன்

(இ) பெற்றுக்கொள்ளப்பட்ட கூற்று சந்தேகநபரினால் விளங்கிக்கொள்ளப்படும் ஒரு மொழியில் அவருக்கு வாசித்துக்காட்டப்பட்டு விளங்கப்

படுத்தப்படுவதனையும் அத்தகைய ஆள் அதற்கான அவரது ஒப்புக்கொள்ளலைக் கையொப்பமிடுவதனையும் அல்லது பொறிப் பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(8) கட்புல-செவிப்புலப் பதிவின் பிரதியொன்று தாமதமின்றி நீதிவான் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டுமென்பதுடன், நீதிநலன்கருதி நீதிமன்றம் தீர்மானிக் கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, சந்தேகநபருக்கு அல்லது அவரது சட்டத்தரணிக்குக் கிடைக்கக்கூடியதாக்கப்படுதலும் வேண்டும்.

(9) நீதிமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியாய மான நியாயப்படுத்துகையின்றி (6) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு முரணாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் கூற்று, தன்னிச்சையான அதன் தன்மையும் ஏல்தகவுடைமையும்பற்றி அதிகரித்த நீதிமுறை நுனித்தாராய் வுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

ஒரு வாகனம் கலம் முதலியன வற்றை நிறுத்துவதற்கு வலோற் காரத்தைப் பயன்படுத்தல்

**45.** ஏதேனும் வாகனம், கலன், புகையிரதம், வானூர்தி அல்லது ஆளில்லா வாகனத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆள், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அத்தகைய ஏதேனும் வாகனத்தை, கலத்தை, புகையிரதத்தை, வானூர்தியை அல்லது ஆளில்லா வாகனத்தை நிறுத்துவதற்காக ஒரு பொலிசு அலுவலர், ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் அல்லது கரையோரக் காவல் அலுவலரினால் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைக்குக் கீழ்ப்படியாதவிடத்து, அத்தகைய பொலிசு அலுவலர், ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் அல்லது கரையோரக் காவல் அலுவலர் அத்தகைய வாகனத்தை, கலத்தை, புகையிரதத்தை, வானூர்தியை அல்லது ஆளில்லா வாகனத்தை நிறுத்துவதற்கு கண்டிப்பாக அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வலோற்காரத்தைப் பயன்படுத்தலாம்:

ஆயின், எவ்வாறாயினும், வாகனத்தை, கலத்தை, புகையிரதத்தை, வானூர்தியை அல்லது ஆளில்லா வாகனத்தை நிறுத்துவதற்கான வேறு எல்லா வழிவகைகளும்

பயனற்றனவாகவிருந்தவிடத்து மட்டுமே அத்தகைய ஏதேனும் வலோற்காரம் பயன்படுத்தப்படலாம்.

ஏதேனும் வாகனம், கலன் முதலியவற்றின் கட்டுப் பாட்டைக் கையேற்றல்

**46.** (1) பொலிசு அலுவலரொருவர் இச்சட்டத்தின்கீழ் புலனாய்வு ஒன்றை நடாத்தும் நோக்கத்திற்காக அல்லது தவறொன்றைப் புரிவதைத் தடுக்கும் நோக்கத்திற்காகப் புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்ட ஒரு தவறுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் வாகனத்தின், கலத்தின், புகையிரதத்தின், வானூர்தியின் அல்லது ஆளில்லா வாகனத்தின் அல்லது வானூர்தி முறைமையின் கட்டுப் பாட்டைக் கையேற்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) அத்தகைய கட்டுப்பாட்டை எடுத்தல் பற்றி நீதிவானொருவருக்கு உடனடியாக அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

கலன், வானூர்தி முதலியன வற்றின் புறப்பட்டுச் செல்லுகை அல்லது கடற்பயணம் என்பவற்றை இடை நிறுத்துதல் அல்லது தாமதித்தல்

**47.** (1) இச்சட்டத்தின்கீழான புலனாய்வொன்றை நடாத்தும் நோக்கத்துக்காக, ஒரு பொலிசு நிலை யத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், பின்வருவன வற்றைச் செய்யுமாறு பணிக்கின்ற கட்டளை யொன்றுக்காக, ஏதேனும் வானூர்தி அல்லது கலன் எந்த இடப்பரப்பினுள் அமைந்துள்ளதோ அந்த இடப்பரப்பில் நியாயாதிக்கங்கொண்டுள்ள நீதிவானுக்கு விண்ணப்ப மொன்றைச் செய்யலாம்: -

(அ) அத்தகைய வானூர்தியின் புறப்பட்டுச் செல்லுகையை அல்லது ஏதேனும் கலத்தின் கடற்பயணத்தை நாற்பத்தெட்டு மணித் தியாலங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இடைநிறுத்துமாறு அல்லது தாமதிக்குமாறு;

(ஆ) அத்தகைய ஏதேனும் வானூர்தியைப் பெயர் குறிக்கப்பட்ட விமானநிலையமொன்றில் அல்லது வேறு ஏதேனும் தோதான இடத்தில் தரையிறக்குமாறு; அல்லது

(இ) ஏதேனும் கலத்தை ஏதேனும் கப்பற்றுறை அல்லது துறைமுகம் அல்லது வேறு ஏதேனும் தோதான இடத்துக்குக் கொண்டுவருமாறு:

அத்துடன், நீதிவான் அத்தகைய விண்ணப்பத்தைக் கவனத்துட்கொள்வதன்மேல், கட்டளையொன்றில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் நிபந்தனைக்கமைய, அத்தகைய கட்டளையை வழங்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், பணிப்பு வழங்கப்பட்டதிலிருந்து இருபத்திநான்கு மணித்தியாலங்களினுள் நீதிவானினால் அத்தகைய பணிப்பு அடுத்துப்பின்னர் அங்கீகரிக்கப்படுவதற்கமைய, தேசிய பந்தோபஸ்தின் நலன்கருதி அத்தகைய அவசரநிலை இருக்குமிடத்து, பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள பொலிசு அலுவலரொருவர், (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் நடவடிக்கையை எடுப்பதற்குப் பணிப்புகளை விடுக்கலாம்.

(2) இரண்டாயிரத்து இரண்டாமாண்டின் 34 ஆம் இலக்க, இலங்கைக் குடியியல் வான்செலவு அதிகாரச்சபைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, வான் பாதுகாப்பு விடுவிப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக, ஏதேனும் வானூர்தி தொடர்பில் வழங்கப்பட்ட அத்தகைய ஏதேனும் கட்டளை அல்லது பணிப்புரைப்பற்றித் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

(3) கட்டளை அல்லது பணிப்புரை குடியியல் கலனொன்று தொடர்பில் வழங்கப்படுமிடத்து, 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபைக்கும் அத்தகைய கட்டளை அல்லது பணிப்புரைபற்றி முன்னறிவித்தல் கொடுக்கப்படுதல் வேண்டும்.

மருத்துவப் பரிசோதனைகள்

**48.** (1) கட்டுக்காப்பிலுள்ள சந்தேகநபரொருவரின் அல்லது தவறொன்றுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரின் மருத்துவத்தொழிலரினாலான பரிசோதனை ஒரு புலனாய்வை நடாத்துவதற்காக அவசியமாகவுள்ளதெனப் பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் கருதுமிடத்து, அவர், அத்தகைய சந்தேகநபரின் அல்லது பலியாக்கப்பட்டவரின் சம்மதத்துடன் அத்தகைய சந்தேகநபர் அல்லது பலியாக்கப்பட்டவர் ஓர் அரசாங்க மருத்துவ அலுவலரினால் பரிசோதனை செய்யப்படுவதனைச் செய்விக்கலாம். பரிசோதனையின் பெறுபேறை எடுத்துக் கூறி, அரசாங்க மருத்துவ அலுவலர் பொலிசு அலுவலருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சந்தேகநபர் அல்லது பலியாக்கப்பட்டவர், அவ்வாறு பரிசோதனை செய்யப்படுவதற்குச் சம்மதிக்காதவிடத்து, ஒரு கட்டளையிற் பெயர்குறிப்பிடப்பட்ட ஓர் அரசாங்க மருத்துவ அலுவலர் அத்தகைய சந்தேகநபரை அல்லது பலியாக்கப்பட்டவரைப் பரிசோதனைசெய்து அதன்மீது அறிக்கையிடுவதற்கு அவருக்கு அதிகாரமளிக்கின்ற அத்தகைய கட்டளைக்காக, நியாயாதிக்கங்கொண்டுள்ள ஒரு நீதிவானுக்குப் பொலிசு அலுவலர் விண்ணப்பிக்கலாம். அத்தகைய கட்டளை ஆக்கப்படுமிடத்து, அத்தகைய ஆள் அத்தகைய அரசாங்க மருத்துவ அலுவலரினாலான பரிசோதனையொன்றுக்கு உட்படுதல் வேண்டுமென்பதுடன், அவர் பரிசோதனையின் பெறுபேறுகளை எடுத்துக்கூறி நீதிவானுக்கு அறிக்கையிடுதலும் வேண்டும்.

ஓர் அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு அல்லது வேறு நிபுணருக்குப் பொருட்களைச் சமர்ப்பித்தல்

**49.** (1) ஒரு பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கின்றதென அவர் நியாயமானமுறையில் நம்புகின்ற ஏதேனும் ஆவணத்தை, வஸ்துவை அல்லது பொருளைப் பரிசோதனைக்கும் பகுப்பாய்வுக்குமென அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு அல்லது வேறு எவரேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிபுணருக்கு நேரடியாகச் சமர்ப்பிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், பரிசோதனைக்கும் பகுப்பாய்வுக்குமான வெளிநாட்டு நிபுணரொருவருக்கான சமர்ப்பணத்தின் விடயத்தில், அத்தகைய பரிசோதனை அல்லது பகுப்பாய்வுக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் நீதிவானின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) பரிசோதனை பற்றிய அறிக்கை, சந்தேகநபர் எந்த நீதிவான் முன்னிலைக்குக் கொணரப்பட்டாரோ அல்லது கொணரப்படவுள்ளாரோ அந்நீதிவானுக்கான பிரதியொன்றுடன் அரசாங்கப் பகுப்பாய்வாளரினால் அல்லது வேறு நிபுணரினால் இயைபான பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு நேரடியாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

இலங்கைக்கு வெளியிலான புலனாய்வு

**50.** (1) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் அங்கீகாரத்துடனும் இயைபான வெளிநாட்டிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட முன்னங்கீகாரத்துடனும், இச்சட்டத்தின் நியதிகளின்படி இலங்கைக்கு வெளியே புலனாய்வொன்றை நடாத்துதல் பொலிசு அலுவலரொருவருக்குச் சட்ட முறையானதாதல் வேண்டும்.

(2) இயைபான வெளிநாட்டிலிருந்தும் செயலாளரிட மிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட முன்னங்கீகாரத்துடன், ஒரு வெளிநாட்டரசின் அல்லது வெளிநாட்டரசுகளின் ஒரு நிறுவனத்துடன் அல்லது முகவராண்மையுடன் அல்லது ஒரு வெளிநாட்டரசின் அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு சர்வதேச ஒழுங்கமைப்புடன், இச்சட்டத்தின்கீழ் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே தவறொன்றின் புரிகை பற்றிய கூட்டுப் புலனாய்வொன்றைப் பொறுப்பேற்று நிறைவேற்றுதல் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட பொலிசு அலுவலரொருவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

பொலிசார் பொதுமக்கள் பாதுகாப்புக்கான பணிப்புரைகளை வழங்கலாம்

**51.** (1) இச்சட்டத்தின்கீழான தவறொன்று புரியப் பட்டுள்ளமை தொடர்பான தகவலைப் பொலிசு அலுவலரொருவர் பெற்றுள்ளவிடத்தும், தெளிவானதும் தற்போதையதுமான ஓர் ஆபத்துள்ளதெனவும், அத்தகைய

தவறுடன் இணைந்துள்ள தீங்கிலிருந்து அல்லது மென்மேலான தீங்கிலிருந்து ஆட்களைப் பாதுகாக்கும் நோக்கத்திற்காக ஏதேனும் பணிப்புரை அவசியமாகவுள்ளதெனவும் அப் பொலிசு அலுவலர் அபிப்பிராயப்படுமிடத்தும் பின்வரும் பணிப்புரைகளுள் ஏதேனும் ஒன்றுக்காக அல்லது அதற்கு மேற்பட்டவற்றுக்காக ஒரு பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், நீதிவானொருவருக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்:-

(அ) ஏதேனும் இடத்திலிருந்து குறித்தவொரு புறப்பொருளை, வாகனத்தை, கலத்தை, புகையிரதத்தை, வானூர்தியை, அல்லது ஆளில்லா வாகனத்தை அகற்றுதல்;

(ஆ) வாகனம், கலன், புகையிரதம், வானூர்தி, அல்லது ஆளில்லா வாகனம் அதன் தற்போதைய நிலையில் தொடர்ந்திருப்பதைத் தேவைப்படுத்துதல்;

(இ) மேலதிக அறிவித்தல் வழங்கப்படும்வரை, கலன் அல்லது கப்பலொன்று குறித்துரைக் கப்பட்டவோர் இடப்பரப்பினுள் கடற்பயணத்தை மேற்கொள்ளாதிருத்தல்;

(ஈ) வானூர்தியொன்றைக் குறித்துரைக்கப்பட்ட வான்வெளிக்கு வெளியே அல்லது அதனுள் பறக்காதிருத்தல்;

(உ) ஏதேனும் குறித்த இடத்தில் ஒன்றுகூடாதிருத்தல்;

(ஊ) குறித்தவொரு கூட்டம், பேரணி அல்லது ஊர்வலத்தை நடாத்தாதிருத்தல்; அத்துடன்

(எ) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட செயற்பாட்டில் ஈடுபடாதிருத்தல்.

(2) நீதிவான், அத்தகைய ஏதேனும் பணிப்புரையை வழங்குமுன்னர், அதனை வழங்குவதன் அவசியம் பற்றித்

தன்னைத் திருப்திப்படுத்திக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், தோதானவையெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, அத்தகைய பணிப்புரையை வழங்குவதற்குக் கட்டளையொன்றை ஆக்கலாம்:

ஆயின், தேசியப் பந்தோபஸ்தின் நலன்கருதி அவசரச் சூழ்நிலைகள் எழுகின்றவிடத்து, ஒரு பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், (அ) முதல் (எ) வரையிலான பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் நடவடிக்கையை எடுக்கும்படி, பணிப்பு வழங்கப்பட்டதிலிருந்து இருபத்து நான்கு மணித்தியாலங்களினுள் நீதிவானொருவரினால் அத்தகைய பணிப்புக்கு அடுத்துப் பின்னரான அங்கீகாரம் வழங்கப்படுவதற்கமைய, பணிப்புகளை வழங்கலாம்.

(3) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைபற்றி (அ) முதல் (எ) வரையிலான பந்திகளின்கீழ் அத்தகைய பணிப்புரையை வழங்கிய இயைபான அலுவலரினால் அல்லது அத்தகைய ஏதேனும் பணிப்புரைகளுக்கு முன்னங்கீகாரம் அளித்த நீதிவானினால் உடனடியாகத் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய ஏதேனும் பணிப்புரை, அவசரகால நிலைமைகளையும் அத்தகைய ஏதேனும் பணிப்புரையினால் பாதிக்கப்படக்கூடிய ஆட்களின் மனிதாபிமானத் தேவைப்பாடுகளையும் எதிர்கொள்வதற்கென, அத்தகைய பணிப்புரைக்கான விதிவிலக்குகளை உள்ளடக்கலாம்.

(5) அத்தகைய ஏதேனும் பணிப்புரையின் நடைமுறைக் காலப்பகுதி, ஒரு தடவையில் இருபத்திநான்கு மணித்தியாலங்களை விஞ்சுதலாகாது அத்துடன் மொத்தக் காலப்பகுதியொன்றுக்காக எழுபத்திரெண்டு மணித்தியாலங்களை விஞ்சுதலாகாது.

(6) இப்பிரிவின்கீழான ஏதேனும் பணிப்புரைக்குப் பயன் கொடுப்பதற்குப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி

ஏதேனும் ஆயுதந்தாங்கிய படை உறுப்பினர்களின் உதவியை, இயைபான ஆயுதந்தாங்கிய படையின் ஏவுநரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட முன்னங்கீகாரத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

(7) அத்தகைய பணிப்புரைக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக, அத்தகைய இடப்பரப்பைச் சுற்றித் தடைக்கயிறிடுதல் பொலிசு அலுவலர்களுக்குச் சட்ட முறையானதாதல் வேண்டும்.

(8) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஒரு பணிப்புரைக்கு முரணாக வேண்டுமென்று செயலாற்றுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், ஒரு நீதிவானினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஓராண்டை விஞ்சாத வொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற் றண்டனைக்கு அல்லது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

பாகம் V

## குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தலைப் பின்போடுதலும் குற்றவழக்குத்தொடுப்பையும் விளக்கத்தையும் இடைநிறுத்துதலும்

குற்றவியல் வழக்கு நடவடிக் கைகளைத் தொடுப் பதனைப் பின்போடுதல்

**52.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாகவுள்ள ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், -

(அ) எவரேனுமாளுக்கு இறப்பு அல்லது கடுங்காயம் விளைவிக்கப்பட்டிராதுள்ளவிடத்து; அல்லது

(ஆ) இலங்கை அரசினது அல்லது மக்களினது பந்தோபஸ்து பாரதூரமான முறையில் சமரசப் படுத்தப்படாதுள்ளவிடத்து அல்லது பாதிக்கப் பட்டிராதுள்ளவிடத்து,

சட்டத்துறைத் தலைமையதிபதி, (2) ஆம் உட் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட நிகழ்வுகளை முறையாகக் கருத்திற்கொண்டும், (3) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய் யப்பட்ட நிபந்தனைகளுள் ஒன்றுக்கு அல்லது அதற்கு மேற்பட்டவற்றுக்கு அமையவும், அத்தகைய சந்தேக நபருக்கெதிராகக் குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் தொடுக்கப்படுவதை இருபதாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குப் பின்போடலாம்:

ஆயின், எவ்வாறாயினும், சட்டத்துறைத் தலைமையதி பதிக்கும் பின்போடுதலுக்கு உட்பட்ட தவறைப் புரிந்துள்ளவ ரெனச் சந்தேகிக்கப்பட்ட ஆளுக்குமிடையே முன்னரான ஒத்திசை வான உடன்பாடொன்று இருத்தல் வேண்டும்; இது, இவ்வுட்பிரிவின்கீழ் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுகின்றமை பின்போடப்படுமுன்னர் மேல் நீதிமன்றத்தினால் வலுவளிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், மேலும், அத்தகைய சந்தேகநபருக்கெதிராகக் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுத்தலின் பின்போடுகைக் காலப்பகுதி, சார்த்தப்பட்ட தவறுக்காக விதிக்கப்பட்டிருக்கக்கூடிய மறியற்றண்டனைக் காலப் பகுதியை விஞ்சுதலாகாது.

(2) சட்டத்துறைத் தலைமையதிபதி, (1) ஆம் உட் பிரிவின்கீழ் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுத்தலைப் பின்போடுமிடத்து, அவர் பின்வருவனவற்றை முறையாகக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்:-

(அ) அரச கொள்கை;

(ஆ) தேசிய நலன்;

(இ) பொதுமக்களின் நலன்;

(ஈ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் கருத்துக்கள்;

(உ) தவறுக்குப் பலியாக்கப்பட்டோரின் கருத்துக்கள்; அத்துடன்

(ஊ) குற்றஞ்சாட்டப்பட்ட ஆளினால் அல்லது அவரது சார்பில் அவரின் சட்டத்தரணியினால் செய்யப்படக்கூடிய முறையீடுகள்.

(3) எவரேனும் சந்தேகநபருக்கெதிரான குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைப் பின்போடுவதற்குச் சட்டத்துறைத் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி முடிபுசெய்யுமிடத்து, அத்தகைய சந்தேகநபருக்கெதிராகக் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுத்தலைப் பின்போடுவதற்கான பிரதிபயனாக அத்தகைய ஆள்மீது பின்வரும் நிபந்தனைகளுள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ விதிக்கும்படி அவர் மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்:-

(அ) மேல் நீதிமன்றத்தினால் அறிவுறுத்தப்பட்டவாறு, சட்டத்துறைத் தலைமையதிபதியினால் வழங்கப் பட்டவோர் உரையைப் பயன்படுத்தி, மேல் நீதிமன்றத்தின்முன்னர் பகிரங்கமானமுறையில் கழிவிரக்கத்தையும் மன்னிப்பையும் தெரிவித்தல்;

(ஆ) சட்டத்துறைத் தலைமையதிபதியினால் குறித் துரைக்கப்பட்டவாறு, தவறுக்குப் பலியாக்கப் பட்டோருக்கு இழப்புக்கான எதிரீடு வழங்குதல்;

(இ) புனர்வாழ்வுபற்றிய குறித்துரைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றில் பங்குபற்றுதல்;

(ஈ) அத்தகைய ஆள் ஏதேனும் தவறைப் புரிவதனைத் தவிர்ப்பாரெனப் பகிரங்கமான முறையில் பொறுப்பேற்றல்; அல்லது

(உ) குறித்துரைக்கப்பட்ட சமுதாய அல்லது சமூக சேவையில் ஈடுபடுதல்.

(4) மேல் நீதிமன்றம், (3) ஆம் உட்பிரிவின்கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தைக் கவனத்துட்கொண்டதன்மேல், சந்தேகநபரை மேல் நீதிமன்றத்தின்முன்னர் தோன்றும்படி கட்டளையிடுதல் வேண்டுமென்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை அத்தகைய சந்தேகநபருக்கு அறிவித்தலும், கேட்கப்படுவதற்கும் மேல் நீதிமன்றத்தினால் அவ்வாறு விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குச் சம்மதிப்பதற்கும் வாய்ப் பொன்றை அவருக்கு அளித்தலும் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் சுமத்தப்பட்ட நிபந் தனைகளை நிறைவேற்றுவதற்கு விதிக்கப்பட்ட காலப்பகுதியின்போது அத்தகைய நிபந்தனைகளை அத்தகைய சந்தேகநபர் நிறைவேற்றினால், சட்டத்துறைத் தலைமையதிபதி, புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்ட தவறு தொடர்பில் அத்தகைய சந்தேகநபருக்கெதிராகக் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுத்தலாகாது.

(6) அத்தகைய சந்தேகநபர் செல்லுபடியான சாக்கின்றி அத்தகைய நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகத் தவறினால், சட்டத்துறைத் தலைமையதிபதி, சந்தேகநபருக்கான அறிவித்தலுடன், அவருக்கெதிராகக் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கலாம்.

குற்றவழக்குத்தொடுப்பை இடைநிறுத்துதல்

**53.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாகவுள்ள ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும்,-

(அ) எவரேனுமாளுக்கு இறப்பு அல்லது கடுங்காயம் விளைவிக்கப்பட்டிராதுள்ளவிடத்து; அல்லது

(ஆ) இலங்கை அரசினது அல்லது மக்களினது பந்தோபஸ்து பாரதூரமான முறையில் சமரசப் படுத்தப்படாதுள்ளவிடத்து அல்லது பாதிக்கப் பட்டிராதுள்ளவிடத்து,

சட்டத்துறைத் தலைமையதிபதி, (2) ஆம் உட்பிரிவிற் குறித் துரைக்கப்பட்ட நிகழ்வுகளை முறையாகக் கருத்திற் கொண்டும் அத்துடன் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நிபந்தனைகளுள் ஒன்றுக்கு அல்லது அதற்கு மேற்பட்டவற்றுக்கு அமையவும், இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொரு வருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கப்படுவதை இருபதாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இடை நிறுத்தலாம்:

ஆயின், எவ்வாறாயினும், சட்டத்துறைத் தலைமை யதிபதிக்கும் இடைநிறுத்துகைக்கு உட்பட்ட தவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளுக்குமிடையே முன்னரான ஒத்திசைவானவோர் உடன்பாடு இருத்தல் வேண்டும்; இது, இவ்வுட்பிரிவின்கீழான குற்றவழக்குத்தொடுப்பு இடை நிறுத்தப்படுமுன்னர் மேல் நீதிமன்றத்தினால் வலுவளிக்கப் படுதல் வேண்டும்:

ஆயின், மேலும், அத்தகைய ஆளுக்கெதிராகக் குற்ற வழக்குத்தொடுப்பின் இடைநிறுத்தற் காலப்பகுதி, அவர் எத்தவறுக்காகத் தண்டனைத்தீர்ப்பளிக்கப்பட்டிருக்கக்கூடு மோ அத்தவறுக்கு ஏற்புடையற்பாலதான மறியற்றண்டனைக் காலப்பகுதியை விஞ்சுதலாகாது.

(2) சட்டத்துறைத் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் குற்றவழக்குத்தொடுப்பை இடைநிறுத்துகின்றவிடத்து, 52 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) முதல் (ஊ) வரையிலான பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட விடயங்களை அவர் முறையாகக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி சட்டத்துறைத் தலைமையதிபதி, அத்தகைய ஆளுக்கெதிரான குற்ற வழக்குத்தொடுப்பை இடைநிறுத்துவதற்கு முடிபு செய் கின்றவிடத்து, அத்தகைய ஆளுக்கெதிராகக் குற்ற வழக்குத்தொடுப்பதை இடைநிறுத்துவதற்கான பிரதி பயனாக அத்தகைய ஆளின்மீது 52 ஆம் பிரிவின் (3) ஆம்

உட்பிரிவின் (அ) முதல் (உ) வரையிலான பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிபந்தனைகளைச் சுமத்துவதற்கு அவர் மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(4) ஐம்பத்திரெண்டாம் பிரிவின் (4) ஆம், (5) ஆம், (6) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், இப்பிரிவின்கீழ் குற்றவழக்குத்தொடுப்பை இடைநிறுத்துதல் தொடர்பாக ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது:-

(அ) மேல் நீதிமன்றம் பின்வருமாறு திருப்திப் பட்டாலொழிய, 52 ஆம் பிரிவின்கீழான அல்லது 53 ஆம் பிரிவின்கீழான கட்டளையெதுவும் ஆக்கப்படுதலாகாதென்று:-

(i) சந்தேகநபரின் அல்லது இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றஞ் சாட்டப்பட்ட ஆளின் சம்மதம் கட்டற்ற முறையிலும் தன்னிச்சையாகவும் அளிக்கப் பட்டுள்ளதென்றும்;

(ii) அத்தகைய சம்மதமானது, தடுத்துவைத்தல், அச்சுறுத்தல், பலவந்தம், ஏவிவிடுகை அல்லது தகாத செல்வாக்கு என்பன காரணமாகப் பெற்றுக்கொள்ளப்பட வில்லையென்றும்; அத்துடன்

(iii) உடன்பாட்டின் தன்மையும் சட்ட விளைவுகளும், அத்தகைய உடன் பாட்டை மறுப்பதற்கும் மற்றும் ஒரு சட்டத்தரணியினால் பிரதிநிதித்துவப்படுத் தப்படுவதற்கும் அவருக்குள்ள உரிமை களும் பற்றி அவ்வாளுக்கு விளங்கும்

மொழியொன்றில் அவருக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளதென்றும்;

(ஆ) மேல் நீதிமன்றம் சந்தேகநபரின் அல்லது இச் சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கு குற்றஞ்சாட்டப் பட்ட ஆளின் தனிப்பட்ட சம்மதத்தை திறந்த நீதிமன்றத்தில் பதிதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சம்மதம் தெரியப்படுத்தப்பட்ட தாகவும் தன்னிச்சையானதாகவும் உள்ள தென்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய விசாரணை களைச் செய்யலாமென்று;

(இ) பிரிவுகள் 52 அல்லது 53 என்பவற்றின்கீழ் சுமத்தப்பட்ட நிபந்தனையெதுவும் –

(i) சார்த்தப்பட்ட தவறுக்கு விகிதாசாரப் படியல்லாதவொரு தண்டனையாக அமை தலாகாதென்று

(ii) ஏதேனும் குற்றவொப்புதலைத் தேவைப் படுத்தலாகாது; அல்லது

(iii) சந்தேகநபர் அல்லது இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்கு குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் குற்றவாளி என்ற ஊகத்தை மீறுதலாகாது;

(ஈ) பின்போடுகை அல்லது இடைநிறுத்துகைக் காலப்பகுதி, சார்த்தப்பட்ட தவறின் தன்மைக்கும் பாரதூரமானதன்மைக்கும் விகிதாசாரமானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கட்டளையின் நோக்கத்தை எய்துவதற்கு நியாயமானமுறையில் அவசியமாகவுள்ளதை விஞ்சுதலாகாதென்று;

(உ) சந்தேகநபர் அல்லது இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட

ஆள், எந்நேரத்திலும் சுமத்தப்பட்ட ஏதேனும் நிபந்தனையை வேறுபடுத்துவதற்காக அல்லது இல்லாதாக்குவதற்காக மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன் நீதிமன்றமானது நீதியானதும் ஒப்புரவானதுமென அது கருதுகின்றவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாமென்று; அத்துடன்

(ஊ) வழங்குநடவடிக்கைகள் பின்போடப்படும் போதான அல்லது குற்றவழக்குத்தொடுப்பு இடைநிறுத்தப்படும்போதான காலம், நியாயமானவொரு விளக்கத்துக்கு இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆளுக்குள்ள உரிமையைப் பங்கப்படுத்தும்வகையில் தொழிற்படுதலாகாதென்று.

விளக்கம் முடிவுறும் வரையிலான தடுத்துவைத்தல்

**54.** (1) (அ) இச்சட்டத்தின்கீழான குற்றப்பகர்வொன்று விளக்கமறியல் கட்டுக்காப்பிலுள்ள எந்தவோர் ஆளுக்கெதிராக முன்வைக்கப்பட்டுள்ளதோ அந்தவோர் ஆள், தேசியப் பந்தோபஸ்தின் அல்லது பொதுமக்கள் ஒழுங்கமைதியின் நலன்கருதி அல்லது விளக்கம் முடிவுறாதுள்ளபோது குற்றஞ்சாட்டப்பட்டவரின் உயிருக்குப் பாரதூரமான தீங்குவிளையும் அச்சுறுத்தல் அல்லது அஞ்சுதல் உள்ளவிடத்து, அவர் எவரேனும் சட்டமுறையான அதிகாரியின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுவது அவசியமாகவும் உசிதமாகவும் உள்ளதெனச் செயலாளர் அபிப்பிராயப்படின், ஒரு தடுத்துவைத்தற் கட்டளையை வழங்குவதற்கான அவசியத்திற்கான காரணங்ளை எடுத்துக்கூறி, தடுத்துவைத்தற் கட்டளையின் பிரதியொன்றுடன் சேர்த்து அவர் சட்டத்துறைத் தலைமையதிபதியினூடாக இயைபான மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாமென்பதுடன், அத்தகைய விண்ணப்பத்தையும் அதற்கான ஆட்சேபனைகளையும் கேட்டபின்னர், மேல் நீதிமன்றம், ஒரு நியாயமான விளக்கம் நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கான அத்தகைய பணிப்புகளுக்கமைய, தடுத்துவைத்தற் கட்டளைக்குப் பயன்கொடுத்து கட்டளையொன்றை ஆக்கலாம்.

(ஆ) இருபத்தேழாம் பிரிவின் நியதிகளின்படி தடுத்து வைக்கப்பட்ட ஆளொருவருக்கு ஏற்புடையற்பாலனவான நிபந்தனைகள், (1) ஆம் உட்பிரிவின்கீழ் தடுத்துவைக்கப் பட்ட ஆளுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினைப் பின்பற்றி ஆக்கப்பட்ட ஏதேனும் தடுத்துவைத்தற் கட்டளை மறியற்சாலைகள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு அத்தகைய ஆளின் கட்டுக்காப்பை ஒப்படைத்தல் ஆணையாளர் தலைமையதிபதியின் கடமையாதலும் வேண்டும்; அத்துடன் (54 ஆம் அத்தியாயமான) மறியற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய ஆளின் கட்டுக்காப்புத் தொடர்பாக ஏற்புடை யனவாகாதொழிதலும் வேண்டும்.

இச் சட்டத்தின் கீழான வழக்கு நடவடிக்கைகள் நீதிமன்றத்தில் முன்னுரிமை கொண்டிருத்தல்

**55.** இச்சட்டத்தின்கீழ் எவரேனுமாளினால் புரியப் பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்டவொரு தவறு தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்திலான வழக்குநடவடிக்கைகள், வேறெல்லா அலுவல்களும் முன்னரே கையுதிர்க் கப்படுவதனைச் சூழ்நிலைகள் அவசியமாக்கும்போதுதவிர, நீதிமன்றத்தின் அத்தகைய வேறு அலுவல்களுக்கு மேலாக முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

## பாகம் VI

### கூற்றுக்களின் ஏல்தகவு

நீதிவான் கூற்றுக்களைப் பதிதல்

**56.** (1) இச்சட்டத்தின்கீழான தவறொன்று பற்றிய புலனாய்வை நடாத்துகின்றவொரு பொலிசு அலுவலரினால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது, எவரேனும் சந்தேகநபரை நீதிவான் வினவலாமென்பதுடன் அவரின் கூற்றைப் பதியலாம்.

(2) அத்தகைய கூற்றைப் பதிதலானது பின்வரும் நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகவிருத்தல் வேண்டும்: -

(அ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் ஒரு சட்டத்தரணியை அணுகுவதற்கான அவரது உரிமைகள்பற்றி அவ்வாளுக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய ஆள் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்குத் தன்னிச்சையாக மறுமொழியிறுப்பதற்கு விரும்புகின்றாராவென்பதை நிச்சயிப்பதற்கென அவ்வாள் வினவப்படுதல் வேண்டுமென்பதுடன் நீதிவானானவர், அத்தகைய ஆள் ஏதேனும் வாக்குறுதி, ஏவிவிடுகை அல்லது அச்சுறுத்தலின்றி அத்தகைய கூற்றைத் தன்னிச்சையாக அளிக்கின்றாரென அவர் திருப்திப்பட்டால் மட்டுமே கூற்றொன்றைப்பதிவதற்கு நடவடிக்கையெடுத்தலும் வேண்டும்;

(இ) அவருக்கெதிராகக் குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் தொடுக்கப்படும் பட்சத்தில் அவர் அளிக்கும் கூற்றின் உள்ளீடுகள் அவருக்கெதிரான சான்றாகப் பயன்படுத்தப்படலாமென அவ்வாளுக்கு எச்சரிக்கை விடுக்கப்படுதல் வேண்டும்;

(ஈ) அத்தகைய ஆள் அளிக்கவிரும்பும் கூற்று எத்தகையதாகவிருப்பினும், அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுடனும் அவற்றுக்கான அவரது மறுமொழிகளுடன் சேர்த்து மேலதிகமாகப் பதியப்படுதல் வேண்டும்;

(உ) நேர்காணல் செய்யப்படும் ஆள் நீதிவானினால் பேசப்பட்ட மொழியை விளங்கிக் கொள்ளாதிருக்கும் நிலைமைகளில், அத்தகைய ஆளினாலும் நீதிவானினாலும் விளங்கிக்கொள்ளப்படும் மொழிகளுக்குக்

கேள்விகளையும் மறுமொழிகளையும் மொழி பெயர்ப்பதற்கென உரைபெயர்ப்பாள ரொருவரின் சேவைகள் பெற்றுக்கொள்ளப் படுதல் வேண்டும்; அத்துடன்

(ஊ) நேர்காணலானது கட்புல– செவிப்புலரீதியில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன் பதிதலானது எதிர்காலச் சரிபார்த்தலுக்காக வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

(3) நீதிவான், அத்தகைய கூற்றைப் பதியும் நோக்கத்துக்காக, பொலிசு நிலையத்துக்குப் பொறுப் பாகவுள்ள அலுவலரிடமிருந்து ஓர் அறிக்கையை அல்லது வினாக்கொத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

(4) அத்தகைய கூற்றை அளிக்கும் ஆள், இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிந்தமைக்காகக் குற்றம்பகரப்பட்ட ஆளொருவருக்கெதிராகச் சாட்சியமளிப்பதற்குச் சாட்சி யொருவராகச் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அழைக்கப்படுமிடத்து, ஒன்றில் அக்கூற்றின் முழுமையும் அல்லது அதன் பாகமொன்று, அடையாளமிடப்பட்டு அத்தகைய ஆளின் முதல் விசாரணையின்போது சான்றில் முன்னிலைக்குக் கொணரப்படலாம்.

(5) (அ) சந்தேகநபர் நீதிவானுக்குக் கூற்றொன்றை அளிக்க மறுக்குமிடத்து, நீதிவான் அத்தகைய நிகழ்வை இயைபான பொலிசு அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும்.

(ஆ) சந்தேகநபர் கூற்றொன்றையளிக்க அவ்வாறு மறுக்கின்ற நேரத்தில், அவர் ஒரு தடுத்துவைத்தற் கட்டளையின்கீழ் தடுத்துவைத்தலில் இருப்பின், அல்லது விளக்கமறியற் கட்டுக்காப்பில் இருப்பின், அத்தகைய சந்தேகநபர், விடயத்துக்கேற்ப, தடுத்துவைத்தலுக்கு அல்லது விளக்கமறியல் கட்டுக்காப்புக்குத் திருப்பியனுப்பப்படுதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் அவசியமானவிடத்து,

சந்தேகநபரின் காப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவைப் படக்கூடியவாறான அத்தகைய மேலதிகக் கட்டளையை ஆக்கலாம்.

நீதிவானொருவருக்கு அளிக்கப்பட்ட கூற்றுக்கள்

**57.** (1) இச்சட்டத்தின்கீழ் ஒரு சந்தேகநபரினால் அல்லது எவரேனுமாளினால் நீதிவானொருவருக்கு அளிக்கப்படும் கூற்றொன்று, (2) ஆம் உட்பிரிவிலும் இச்சட்டத்தின் 58 ஆம் பிரிவிலும் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கும், சான்றுக் கட்டளைச்சட்டத்தின் 24 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கும் அமைய, அத்தகைய ஆளுக்கெதிராக ஏல்தகவுடையதாதல் வேண்டும்.

(2)(அ) தவறொன்று புரியப்படுகையில் ஆளொருவர் தம்மைச் சம்பந்தப்படுத்துகின்ற அல்லது குற்றஞ்சாட்டுகின்ற கூற்றொன்றை அளிப்பதற்குப் பிணிக்கப்பட்டவராதலாகாது.

(ஆ) ஒரு கூற்றைப் பதிகின்ற நீதிவானொருவர், நேர்காணல் செய்யப்படுகின்ற ஆளுக்கு, அத்தகைய நேர்காணலுக்குமுன்னர் இச்சட்டத்தின்கீழ் அவருக்குள்ள உரிமைகளைத் தெரிவித்தல் வேண்டும்.

ஒரு நீதிவானுக்கு அளிக்கப்பட்ட கூற்றொன்றின் ஏல்தகவுக்காகத் திருப்தி செய்யப்பட வேண்டிய முந் நிபந்தனைகள்

**58.** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளாரெனச் சார்த்தப்பட்டுள்ள ஆளொருவரினால் நீதிவானொருவருக்கு அளிக்கப்பட்ட கூற்றொன்று –

(அ) அத்தகைய கூற்றைப் பதிந்த நீதிவான், அக்கூற்றைப் பதிவதற்கு நேர்முன்னரும் அதனை உடனடுத்துப்பின்னரும் கூற்றை அளித்த ஆள் சட்ட மருத்துவ அலுவலர் ஒருவரினால் பரிசோதனை செய்யப்படுவதனைச் செய்வித்திருந்தாலொழிய; அத்துடன்

(ஆ) சட்ட மருத்துவ அலுவலரின் அறிக்கை, கூற்றின் ஏல்தகவைச் சரிபார்ப்பதற்கு நடாத்தப்படக்கூடிய உண்மை விளம்பல் விசாரணையின்போது

குற்றவழக்குத்தொடுக்கும் அதிகாரியினால் முன்னிலைக்குக் கொணரப்பட்டிருந்தாலொழிய,

அத்தகைய ஆளுக்கெதிராகச் சான்றில் ஏல்தகவுடைய தாதலாகாது.

## பாகம் VII

### நானாவிதக் கட்டளைகள்

தடைசெய்தற் கட்டளைகள்

**59.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், சனாதிபதி, ஏதேனும் ஒழுங்கமைப்பு இச்சட்டத்தின்கீழான தவறொன்றாக அமைகின்ற ஏதேனும் செயலில் ஈடுபடுவதாக நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ளவிடத்து, சனாதிபதி, (இதனகத்துப்பின்னர் ஒரு "தடைசெய்தற் கட்டளை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, அத்தகைய ஒழுங்கமைப்பைத் தடைசெய்யலாம்.

(2) தடைசெய்தற் கட்டளையொன்று பின்வருவனவற்றைத் தடைசெய்யலாம்: -

(அ) எவரேனுமாள் அத்தகைய ஒழுங்கமைப்பின் உறுப்பினரொருவராக அல்லது அதனோடு இணைந்திருப்பவராக இருப்பதனைத் தடை செய்யலாம்;

(ஆ) அத்தகைய ஒழுங்கமைப்புக்கு உறுப்பினர்களை ஆட்சேர்ப்பதிலிருந்து அத்தகைய ஒழுங்கமைப் பைத் தடைசெய்யலாம்;

(இ) அத்தகைய ஒழுங்கமைப்பின் குறிக்கோள் களை முன்னெடுத்துச்செல்வதில் செயலாற்று வதிலிருந்து எவரேனுமாளைத் தடைசெய்யலாம்;

(ஈ) அத்தகைய ஒழுங்கமைப்பினால் கூட்டங்கள், செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுவதனைத் தடைசெய்யலாம்;

(உ) அத்தகைய ஒழுங்கமைப்பின் வங்கிக் கணக்கு களையும் வேறு நிதிசார் வைப்பகங்களையும் பயன்படுத்துவதனை அல்லது புழக்கத்துக்குக் கொண்டுவருவதனைத் தடைசெய்யலாம்;

(ஊ) அத்தகைய ஒழுங்கமைப்புடன் அல்லது அதன்சார்பில் எவரேனுமாள் ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதனைத் தடைசெய்யலாம்;

(எ) நிதிகளைத் திரட்டுதல் மற்றும் மானியக் கொடைகளையும் மரணசாதனக் கொடை களையும் பெறுவதனைத் தடைசெய்யலாம்;

(ஏ) ஒழுங்கமைப்பின் நிதிகளையும் சொத்துக்களையும் கைமாற்றுவதனைத் தடைசெய்யலாம்;

(ஐ) அத்தகைய ஒழுங்கமைப்பின் சார்பில் ஆதரவு நாடலையும் பரிந்துவேண்டலையும் தடை செய்யலாம்;

(ஒ) அத்தகைய ஒழுங்கமைப்பின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதில், அச்சிடப்பட்ட அல்லது நிகழ்நிலை வெளியிடுதலுட்பட, ஏதேனும் விடயப் பொருளை வெளியிடுவதி லிருந்து எவரேனுமாளைத் தடைசெய்யலாம்;

(ஓ) அலுவலகங்களைத் தாபிப்பதிலிருந்து அல்லது பேணுவதிலிருந்து அத்தகைய ஒழுங்கமைப்பைத் தடைசெய்யலாம்; அல்லது

(ஔ) அவசியமாகக்கூடியவாறு, அத்தகைய ஒழுங்கமைப்புத் தொடர்பான வேறேதேனும் செயற்பாட்டைத் தடை செய்யலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் எந்த ஒழுங்கமைப்புத் தொடர்பில் தடைசெய்தற் கட்டளையொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஒழுங்கமைப்பொன்று தொடர்பில் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் தடை, மட்டுப்பாடு, இடைநிறுத்துகை அல்லது தடைவிதிப்பானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அத்தகைய ஏதேனும் தடைசெய்தற் கட்டளைக்குப் பங்கமின்றி, தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருத்தல் வேண்டும்.

(4) வர்த்தமானியில் தடைசெய்தற் கட்டளையொன்று வெளியிடப்பட்டதனை உடனடுத்து, அத்தகைய தடைசெய்தற் கட்டளை இலங்கையில் பரந்த புழக்கத்திலுள்ள சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலானவொரு செய்தித்தாளில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட தடைசெய்தற் கட்டளையொன்றின்மூலம் இன்னலுறும் எவரேனுமாள் அல்லது ஒழுங்கமைப்பொன்று –

(அ) தடைசெய்தற் கட்டளையை, மீளக்கவனத்துட் கொள்வதற்காக அல்லது இல்லாதாக்குவதற்காக சனாதிபதிக்கு விண்ணப்பிக்கலாம்; அல்லது

(ஆ) தடைசெய்தற் கட்டளையின் அல்லது (அ) என்னும் பந்தியின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் முடிபின் நீதிமுறை மீளாய்வுக்கென மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(6) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட தடைசெய்தற் கட்டளையொன்று ஒழிக்கப்படும்வரை செல்லுபடியாக விருத்தல் வேண்டும்.

மட்டுப்பாட்டுக் கட்டளைகள்

**60.** (1) பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள பொலிசு அலுவலரொருவரினால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மேல், நீதிமன்றத்தின் முன்னர் இடப்பட்ட விடயப்பொருட்களின் அடிப்படையில் –

(அ) ஆளொருவர் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதில் ஈடுபடுகின்றார், ஈடுபட்டுள்ளார் அல்லது ஈடுபடுவதற்கு ஆயத்தஞ்செய்கின்றாரென;

(ஆ) அத்தகைய ஆள் அத்தகைய தவறைப் புரிவதில் அல்லது புரிவதனை வசதிப்படுத்துவதில் நம்பத்தகு மற்றும் பாரதூரமான அபாயத்தை ஏற்படுத்துகின்றாரென; அத்துடன்

(இ) அத்தகைய தவறு புரியப்படுவனைத் தடுக்கும் நோக்கத்துக்காக ஒரு கட்டுப்படுத்தற் கட்டளையை ஆக்குதல் அவசியமாகவுள்ளதென மற்றும் குறைவான மட்டுப்பாடு வழிமுறைகள் பயனுள்ளவையாக இருக்கமாட்டாவென,

நீதிவானொருவர் திருப்திபடுமிடத்து, சூழ்நிலைகளில் அவசியமானவாறான மற்றும் விகிதாசாரப்படியான அத்தகைய நிபந்தனைகளைச் சுமத்துகின்ற மட்டுப்பாட்டுக் கட்டளையொன்றை நீதிவான் ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்றை ஆக்கவேண்டுமாவென்பதைத் தீர்மானிப்பதில், நீதிவான் பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்:-

(அ) உத்தேசிக்கப்பட்ட ஒவ்வொரு மட்டுப்பாட்டினதும் அவசியமும் விகிதாசாரத்தன்மையும்;

(ஆ) முன்வைக்கப்பட்ட அபாயத்தின் தன்மையும் பாரதூரமானதன்மையும்;

(இ) சம்பந்தப்பட்ட ஆளின் அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும்மீது உத்தேசிக்கப்பட்ட மட்டுப் பாடுகளின் சாத்தியமான தாக்கம்; அத்துடன்

(ஈ) மேற்பார்வை, கண்காணிப்பு அல்லது அறிக்கையிடுதல் தேவைப்பாடுகள் என்பன உட்பட, குறைந்த தலையீட்டிலான வழி முறைகளின்மூலம் குறிக்கோளை எய்தமுடியுமா வென்பது.

(3) மட்டுப்பாட்டுக் கட்டளையொன்று, பின்வருவன உட்பட, (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காகக் கண்டிப்பாக அவசியமானவாறான அத்தகைய வழிமுறைகளை மட்டுமே விதிக்கலாம்:-

(அ) குறித்துரைக்கப்பட்ட இடங்களுக்கு அல்லது இடப்பரப்புகளுக்குப் பயணிப்பதன்மீதான மட்டுப்பாடுகள்;

(ஆ) குறித்துரைக்கப்பட்ட காலஇடைவெளிகளில் குறித்துரைக்கப்பட்டவொரு பொலிசு நிலையத் துக்கு வருகைதருவதற்கான தேவைப்பாடுகள்;

(இ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுடன் சம்பந்தப் பட்டவர்களென நியாயமானமுறையில் நம்பப் படும் ஆட்களுடன் அல்லது உருவகங்களுடன் தொடர்புகொள்ளல் அல்லது இணைதல்மீதான மட்டுப்பாடுகள்; அல்லது

(ஈ) அவசியமானவை மற்றும் விகிதாசாரப் படியானவை என நீதிவான் கருதுகின்றவாறான அத்தகைய வேறு வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள்.

(4) மட்டுப்பாட்டுக் கட்டளையெதுவும் –

(அ) அடையாளங்காணப்பட்ட அபாயத்துக்குக் கண்டிப்பாக அவசியமான மற்றும் விகிதா சாரப்படியான அளவுவரை தவிர, நடமாட்டம், கருத்துத்தெரிவித்தல், ஒன்று கூடுதல் அல்லது ஒருங்குசேர்தல் என்பனமீது ஒரு பொதுத் தடையை விதித்தலாகாது; அல்லது

(ஆ) ஒரு பொதுப் புலனாய்வை வசதிப்படுத்தும் அல்லது அதற்கு உதவும் நோக்கத்துக்காக மட்டும் ஆக்கப்படுதலாகாது.

(5) ஒவ்வொரு மட்டுப்படுத்தற் கட்டளையும்-

(அ) ஒருதடவையில் மூன்றுமாதங்களை விஞ்சாத வொரு காலப்பகுதிக்காக ஆக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) கட்டளைக்கான காரணங்களையும் அது எந்த முக்கியமான ஏதுக்களின் அடிப்படையிலானதோ அந்த முக்கிய ஏதுக்களையும் குறித்துரைத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) (7) ஆம் உட்பிரிவின் கீழ் பரிசீலனைக்கு அமைந்ததாதல் வேண்டும்.

(6) அவசரமான சூழ்நிலைகள், மறுதிறத்தவரில்லாமல் கட்டளை ஆக்கப்படுவதைத் தேவைப்படுத்துகின்றனவென நீதிவான், பதியப்பட்ட காரணங்களுக்காகத் தீர்மானித்தா லொழிய, எந்த ஆளுக்கெதிராக மட்டுப்பாட்டுக் கட்டளை யொன்று நாடப்படுகின்றதோ அந்த ஆளுக்குக் கேட்கப் படுவதற்கும் ஒரு சட்டத்தரணியினால் பிரதிநிதித்துவப் படுத்தப்படுவதற்கும் நியாயமான வாய்ப்பொன்று அளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய

பட்சத்தில் இயன்றளவு மிக்க முன்கூட்டிய நேரத்தில் கேட்கப்படுவதற்கானவொரு வாய்ப்பு அவ்வாளுக்கு அளிக்கப் படுதலும் வேண்டும்.

(7) ஒரு மட்டுப்படுத்தற் கட்டளையினால் இன்னலுறும் எவரேனுமாள், அத்தகைய கட்டளையின் மீளாய்வுக்காக அல்லது நீதிமுறைப் பரிசீலனைக்காக மேல் நீதிமன்றத்துக்கு அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(8) மட்டுப்படுத்தற் கட்டளையொன்று இல்லாதொழிக் கப்படுமிடத்து அல்லது நியாயமான ஏதுக்களின்றி ஆக்கப் பட்டுள்ளதாகக் கண்டுபிடிக்கப்படுமிடத்து, பாதிக்கப்பட்ட ஆள் சட்டத்துக்கிணங்கத் தோதான நிவாரணத்தை நாடுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

தடைசெய்யப்பட்ட இடங்கள் தொடர்பான கட்டளைகள்

**61.** (1) நம்பத்தகு விடயப்பொருட்களின் அடிப்படையின் மீது செயலாளர் –

(அ) குறித்துரைக்கப்பட்டவோர் இடம், இச் சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதற்காக அல்லது புரிவதற்கு ஆயத்தஞ் செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்றதென்றும் அல்லது பயன் படுத்தப்படக்கூடிய சாத்தியங் கொண்டுள்ள தென்றும்; அத்துடன்

(ஆ) அத்தகைய தவறைத் தடுக்கும் நோக்கத்துக்காக அத்தகைய இடத்துக்கான அணுகுகையை மட்டுப்படுத்தல் அவசியமானதாகவும் விகிதா சாரப்படியானதாகவும் உள்ளதென்றும் மற்றும் குறைவான மட்டுப்பாட்டுக்கு வழிமுறைகள் பயனுடையனவாக இருக்கமாட்டாதென்றும்,

திருப்திப்படுமிடத்து, செயலாளர், எழுத்திலான கட்டளைமூலம், எழுபத்திரெண்டு மணித்தியாலங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்காக அத்தகைய இடத்தை ஒரு

தடைசெய்யப்பட்ட இடமொன்றாக வெளிப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று –

(அ) அமைவிடத்தையும் விதிக்கப்பட்ட மட்டுப் பாடுகளையும் தெளிவாக அடையாளங்காணுதல் வேண்டும்;

(ஆ) கட்டளைக்கான காரணங்களையும் முக்கியமான ஏதுக்களையும் குறிப்பிடுதல் வேண்டும்; அத்துடன்

(இ) சூழ்நிலைகளில் அவசியமான குறைந்தபட்ச மட்டுப்பாடுகளுக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(3) எழுபத்திரெண்டு மணித்தியாலக் காலப்பகுதிக்கு அப்பாற்பட்ட ஏதேனும் நீடிப்பு, நீதிவானொருவருக்கான விண்ணப்பத்தின்மேல் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும்; அத்தகைய நீடிப்பு அவசியமானதாகவும் விகிதா சாரப்படியானதாகவும் உள்ளதெனத் திருப்திப்பட்டால் மட்டுமே அவர் அத்தகைய நீடிப்பை வழங்குதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழான மட்டுப்பாடுகள், குறித்துரைக் கப்பட்ட இடத்தினுள் நுழைவதன்மீதான வரையறைகளையும் மற்றும் கண்டிப்பாக அவசியமானவிடத்து, நிழற்படவியல், காணொளிப் பதிவு அல்லது வேறு வகையினவான ஆவணப்படுத்துகைமீதான மட்டுப்பாடுகளையும் உள்ளடக்கலாம்; ஆயின், அத்தகைய மட்டுப்பாடுகள் துல்லியமாக வரையறுக்கப்பட்டிருத்தலும் சட்டமுறையான உயர்தொழில்சார், ஊடகவியல்சார், மனிதாபிமான அல்லது அலுவலகமுறையான செயற்பாடுகளுடன் தகாதமுறையில் தலையிடாதிருத்தலும் வேண்டும்.

(5) விடயத்துக்கேற்ப, செயலாளரானவர் அல்லது நீதிவானானவர், வதிபவர்கள், ஊழியர்கள், அவசரக்காலச்

சேவைகள், அத்தியாவசிய சேவை வழங்குநர்கள், மற்றும் எந்த ஆட்கள் சமுகமளித்தல் நியாயமானமுறையில் தேவைப்படுகின்றதோ அந்த வேறு ஆட்கள் என்போருக்கான அணுகுகையை உறுதிப்படுத்துவதற்கு நியாயமான விலக்களிப்புகளை வழங்குதல் வேண்டும்.

(6) இப்பிரிவிலுள்ளதெதுவும், இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால் இன்னலுறும் எவரேனுமாளை, அத்தகைய கட்டளையை மீறாமல், அத்தகைய கட்டளையைப் பரிசீலனைசெய்வதற்கும் தோதான நிவாரணத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் நீதிவானுக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதிலிருந்து தடைசெய்தலாகாது.

## பாகம் VIII

### தண்டனைத்தீர்ப்பளித்தல் வழிகாட்டுநெறிகள்

தீங்குபெருக்குகின்ற காரணிகள்

**62.** இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்ததாகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவரின்மீது விதிக்கப் படவேண்டிய மறியற்றண்டனைக் காலத்தைத் தீர்மானிக்கும்போது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, பின்வரும் காரணிகள், அதிகரிக்கப்பட்ட மறியற்றண்டனைக் காலத்தை விதித்தலை அனுமதிக்கும் தீங்குபெருக்கும் காரணிகளாகக் கருத்திற் கொள்ளப்படலாம்: -

(அ) இலங்கையின் அல்லது வேறு ஏதேனும் வெளிநாட்டின் ஆள்புல ஒருமைப்பாடு அல்லது இறைமைமீது இயைபான தவறைப் புரிதலின் விளைவு;

(ஆ) இலங்கையின் தேசியப் பந்தோபஸ்து அல்லது பாதுகாப்புமீது இயைபான தவறைப் புரிவதன் விளைவு;

(இ) தவறைப் புரிதலின் காரணமாக இழந்த உயிர்களின் எண்ணிக்கை;

(ஈ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே எவரேனும் ஆளின்மீது விளைவிக்கப்பட்ட ஊறுபாடுகள் அல்லது தீங்குகள்;

(உ) தவறுக்குப் பலியாக்கப்பட்டோரின்மீதான தாக்கம் மற்றும் அவர்களுக்கு ஏற்பட்ட விளைவு களின் தீங்குபெருக்கும் தன்மை;

(ஊ) தவறைப் புரிதலானது பொது அமைதியின்மையை விளைவித்துள்ளதா என்பது;

(எ) பொதுமக்களின் பாதுகாப்பின்மீதான விளைவு;

(ஏ) இலங்கை மக்களின் சமாதானமான சகவாழ்வின் மீதான தாக்கம்;

(ஐ) இலங்கை அரசாங்கத்திற்கு, பொதுமக்களுக்கு அல்லது எவரேனுமாளுக்கு விளைவிக்கப்பட்ட நிதிசார் மற்றும் பொருள் வகையிலான இழப்பு;

(ஒ) விளைவிக்கப்பட்ட சேதங்களின் இழப்புக்கான எதிரீடாகவும் அவற்றை மீட்டெடுப்பதற்காகவும் தேவையான நிதிசார் மற்றும் வேறு வளங்கள்; அத்துடன்

(ஓ) தீங்குபெருக்கும் காரணியொன்றாகக் கருத்திற் கொள்ளப்படவேண்டுமென நீதிமன்றத்தினால் கருதப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் காரணி.

**63.** இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்ததாகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவரின்மீது விதிக்கப் படவேண்டிய மறியற்றண்டனைக் காலத்தைத் தீர்மானிக்கும் போது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, பின்வரும் காரணிகள், குறைக்கப்பட்ட மறியற்றண்டனைக் காலத்தை அனுமதிக்கும் தணிகின்ற காரணிகளாகக் கருத்திற் கொள்ளப்படலாம்:- தணிக்கின்ற காரணிகள்

(அ) பகிரங்கமாகப் பயங்கரவாதத்திற்குக் கண்டனம் தெரிவித்தல்;

(ஆ) கழிவிரக்கத்தைத் தெரிவித்தல்;

(இ) தவறைப்புரியும் நேரத்தில் தவறாளரின் வயது;

(ஈ) தடுத்துவைத்தலில் அல்லது விளக்கமறியலில் அல்லது இரண்டிலும் செலவிடப்பட்ட காலப்பகுதி;

(உ) எந்த பலவந்தம் அல்லது வலுக்கட்டாயத்தின்கீழ் தவறு புரியப்பட்டுள்ளதோ அந்த பலவந்தம் அல்லது வலுக்கட்டாயம்;

(ஊ) தவறுக்குப் பலியாக்கப்பட்டோருக்கு குற்றஞ் சாட்டப்பட்டவரினால் தன்னிச்சையாக இழப்புக்கான எதிரீடு வழங்கப்படுதல்;

(எ) எந்த வன்முறை மற்றும் வேறு தவறுகள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டாரோ அந்த வன்முறை மற்றும் வேறு தவறுகளைப் பகிரங்கமாகக் கண்டித்தல்;

(ஏ) இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடு மற்றும் இறைமையைப் பேணிக்காத்தலுக்கும் பாதுகாப்பதற்கும் உறுதிபூணுகை;

(ஐ) நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டமொன்றில் தன்னிச்சையாகப் பங்குபற்றுதல் மற்றும் அதனைப் பூர்த்திசெய்தல்; அல்லது

(ஒ) தணிக்கின்ற காரணியொன்றாகக் கருத்திற் கொள்ளப்படவேண்டுமென நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான வேறு ஏதேனும் காரணி.

## பாகம் IX

## பொது ஏற்பாடுகள்

மத்திய தரவுத் தளத்தைத் தாபித்துப் பேணுதல்

**64.** பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, இச் சட்டத்தின்கீழ் எவரேனுமாளைக் கைதுசெய்தல், கைது செய்யப்பட்ட ஆளை தடுத்துவைத்தல், விளக்கமறியலில் இடுதல், அவருக்கப் பிணையளித்தல், அவரை விட்டுவிடுதல், அவருக்கெதிராகக் குற்றவழக்குத்தொடுத்தல், அவருக்குக் குற்றத்தீர்ப்பளித்தல், அவரை விடுதலை செய்தல், அல்லது அவருக்குத் தண்டனையளித்தல் என்பன தொடர்பான தகவலைக்கொண்டுள்ள ஒரு மத்தியத் தரவுத்தளத்தைத் தாபித்தலும் பேணுதலும் வேண்டும்.

சிறுவர்கள் கட்டளைச் சட்டம் ஏற்புடையதாதல்

**65.** (23 ஆம் அத்தியாயமான) சிறுவர்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட தவறொன்றுக்காகக் குற்றவாளியெனக் காணப்பட்டு குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்ற எவரேனும் சிறுவருக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

அலுவலர்கள் முதலியவர் களைப் பாதுகாத்தல்

**66.** (1) இச்சட்டத்தின்கீழ் விடுக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஒரு பணிப்புரை, பணிப்பு அல்லது கட்டளை அல்லது விடுக்கப்பட்ட ஒரு பணிப்பு, அரசியலமைப்பின் 126 ஆம், 140 ஆம் அல்லது 141 ஆம் உறுப்புரையின்கீழான வழக்குநடவடிக்கைகளில் கேள்விக்குட்படுத்தப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, துடர்ச்சி, குற்றவழக்கு அல்லது வேறு குடியியல் அல்லது குற்றவியல் வழக்குநடவடிக்கை எதுவும், இச்சட்டத்தின்கீழ் விடுக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் பணிப்புரை, பணிப்பு அல்லது கட்டளையைப் பின்பற்றி நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்காக அல்லது காரியத்துக்காக எவரேனும் அலுவலர் அல்லது ஆளுக்கெதிராக அமைவதாதலாகாது.

ஆட்கள் குழுக் களினாலான தவறுகள்

**67.** இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அந்த ஆட்கள் குழு-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின் அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் பிரதான நிறைவேற்று அலுவலரும்;

(ஆ) குழுமமொன்றாகவிருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்; அல்லது

(இ) குழுமமொன்றாகவிராத கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவிருப்பின், அதன் முகாமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பாகவுள்ள அக்குழுவின் ஒவ்வோர் அலுவலரும்,

அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய தவறு தாம் அறியாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்குரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென அத்தகைய ஆள் எண்பிப்பாராயின், அத்தகைய ஆள் அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் ஆகாது.

ஒழுங்குவிதிகள்

**68.** (1) அமைச்சர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காகவும் விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் விடயங்களுட்பட எந்த ஆட்கள் தொடர்பில் சட்டத்துறைத் தலைமையதிபதி 52 ஆம் பிரிவின்கீழ் வழக்குநடவடிக்கைகளின் தொடுப்பைப் பின்போடுவதற்கு அல்லது 53 ஆம் பிரிவின் கீழ் குற்றவழக்குத்தொடுப்பை இடைநிறுத்துவதற்கு விதந்துரைத்துள்ளாரோ அந்த ஆட்களுக்காக அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதி குற்றப்பகர்வுகளை மீளப்பெற்றுள்ளவிடத்து, அமைச்சர் புனர்வாழ்வு

நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :-

(அ) நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதன்மூலம் எய்தப் பட வேண்டிய குறிக்கோள்கள்;

(ஆ) புனர்வாழ்வின் தன்மை;

(இ) வழங்கப்படவேண்டிய பயிற்சியின் தன்மை;

(ஈ) புனர்வாழ்வை அல்லது பயிற்சியை நடாத்தும் அதிகாரி அல்லது அதிகாரிகள்;

(உ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமைவிடம்;

(ஊ) நிகழ்ச்சித்திட்டத்தின் காலஎல்லை; அத்துடன்

(எ) அத்தகைய புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான வேறே தேனும் விடயம்.

(3) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களினுள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக அதன்முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

(5) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் உரியமுறையில் செய்யப்பட்ட எதற்கும்

பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஓர் ஒழுங்குவிதி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பணிப்புகள்

**69.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, சனாதிபதி, காலத்துக்குக்காலம், எந்த முறையில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வலுவுறுத்தப்படவேண்டுமோ அந்த முறை தொடர்பிலான பணிப்புகளை வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புகள், பயனுள்ளவொரு முறையில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக மட்டுமே இருத்தல் வேண்டுமென்பதுடன் சட்டத்தால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளின் தரநெறிகள் மற்றும் நியமங்களுக்கு இணங்கியொழுக இருத்தலும் வேண்டும்.

(3) அத்தகைய ஒவ்வொரு பணிப்பும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

இச்சட்டம் வேறு எழுத்திலான சட்டங்களிலும் மேலோங்கி நிற்றல்

**70.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், பயனுறுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தினதும் அத்தகைய வேறு எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

நீதிமுறைப் பரிசீலனை

**71.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், அரசியலமைப்பின் அல்லது வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நிவாரணத்தை அல்லது பரிகாரத்தை நாடி இச்சட்டத்தின்கீழ் எவரேனும் இயைபான அதிகாரியினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிபு, தீர்மானம், ஆக்கப்பட்ட கட்டளை அல்லது வழங்கப்பட்ட பணிப்புரை அல்லது

பணிப்பினால் இன்னலுறும் எவரேனும் ஆளைத் தடுப்பதாக வாசித்துப் பொருளமைத்துக் கொள்ளப்படுதல் ஆகாது.

1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தை நீக்குதல்

**72.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

நிலை பெயர்கால ஏற்பாடுகளும் பேணல்களும்

**73.** (இதனகத்துப்பின்னர் “நீக்கப்பட்ட சட்டம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் நீக்கம் எவ்வாறிருப்பினும்,-

(அ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று, ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது வேறு அதிகாரியிடம் நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்டதும், நடை பெற்றதும், முன்வைக்கப்பட்டதும் அல்லது செய்யப்பட்டதும், மற்றும் முடிபை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதுமான ஏதேனும் புலனாய்வு, விளக்கம், மேன்முறையீடு அல்லது விண்ணப்பம், நடவடிக்கைமுறை மற்றும் சான்று தொடர்பிலான ஏற்பாடுகள் உள்ளடங்கலாக, நீக்கப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செயல்முறைக்கு உகந்ததாகவிருக்கக் கூடியவரையில், கையுதிர்க் கப்படுதல், தொடரப்படுதல், நடைபெறுதல் அல்லது ஏற்றுக்கவனிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) (i) நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர், நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிந்துள்ளார் அல்லது அதனைப் புரிவதில் தொடர்புபட்டுள்ளார் எனச் சந்தேகிக் கப்பட்டவரும், நியமிக் கப்பட்ட தேதியன்றுள்ளவாறு அவர் தொடர்பில் வழக்குநடவடிக்கைகள்

தொடுக்கப்பட்டிராதவருமான எவரேனும் ஆளுக்கெதிராக நீக்கப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் குற்றவழக்குத் தொடுக் கப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுதலைப் பின்போடுதல் அல்லது குற்ற வழக்குத் தொடுப்பை இடைநிறுத்துதல் தொடர்பாகச் சட்டத்துறைத் தலைமையதிபதியின் தத்துவங்கள் இச்சட்டத்தின்கீழ் பிரயோகிக் கப்படலாம்; அத்துடன்

(ii) அத்தகைய ஏதேனும் தவறுபற்றிய வழக்கு நடவடிக்கைகள், இச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ், செயல்முறைக்குகந்த தாகவிருக்கக் கூடியவரையில், இயைபான அதிகாரியினால் முடிவுறுத்தப்படுதல் வேண்டும்;

(இ) நீக்கப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதி யன்று வலுவிலுள்ளவையும் 2001 ஆம் ஆண்டு யூலை 21 ஆந்தேதிய 1193/31ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளி யிடப்பட்டவையுமான 2001 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, பயங்கரவாதத்தைத் தடுத்தல் (தேசியப் பாதுகாப்புப் பேரவை) ஒழுங்கு விதிகள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆக்கப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டு மென்பதுடன் ஒழிக்கப்பட்டாலொழியவும் ஒழிக் கப்படும்வரையும் அவை வலுவில் தொடர்ந் திருத்தலும் அதற்கிணங்க அவற்றுக்குப் பயன் கொடுக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ஈ) நீக்கப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதியன்று வலுவிலுள்ளவையும், கீழே குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் உட்பட, ஒழுங்கமைப்புகளைத் தடைசெய்தல் தொடர்பானவையுமான எல்லா ஒழுங்குவிதிகளும், இச்சட்டத்தின் நேரொத்த ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப் பட்டுள்ளவையாகக் கருதப்படுதல் வேண்டு மென்பதுடன், அவை தொடர்ந்து வலு விலிருத்தலும் அதற்கிணங்க அவற்றுக்குப் பயன்கொடுக்கப்படுதலும் வேண்டும். அத்தகைய ஒழுங்குவிதிகள் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால் திருத்தப் படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது வேறுப் படுத்தப்படலாம்:-

(i) 2001 ஆம் ஆண்டு யூலை 6 ஆந்தேதிய 1191/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்த மானியில் வெளியிடப்பட்ட, 2001 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு ஒழுங்குவிதிகள்;

(ii) 2011 ஆம் ஆண்டு ஓகத்து 29 ஆந்தேதிய 1721/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்த மானியில் வெளியிடப்பட்ட, 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்தல்) ஒழுங்குவிதிகள்;

(iii) 2011 ஆம் ஆண்டு ஓகத்து 29 ஆந்தேதிய 1721/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்த மானியில் வெளியிடப்பட்ட, 2011 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தமிழ் புனர்வாழ்வு ஒழுங்கமைப்புத் தடை ) ஒழுங்கு விதிகள்;

(iv) 2011 ஆம் ஆண்டு ஓகத்து 29 ஆந்தேதிய 1721/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 2011 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தடுத்துவைக்கப்பட்டோர் மற்றும் விளக்கமறியலில் இடப்பட்டோர்) ஒழுங்கு விதிகள்;

(v) 2011 ஆம் ஆண்டு ஓகத்து 29 ஆந்தேதிய 1721/5ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 2011 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (சரணடைந்தோரின் பராமரிப்பு மற்றும் புனர்வாழ்வு) ஒழுங்குவிதிகள்;

(vi) 2019 ஆம் ஆண்டு மே 13 ஆந்தேதிய 2123/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 2019 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (மட்டுமீறிய ஒழுங்கமைப்புகளைத் தடை செய்தல்) ஒழுங்குவிதிகள்; அத்துடன்

(vii) 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆந் தேதிய 2223/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையும் 2023 ஆம் ஆண்டு யூலை 26 ஆந்தேதிய 2342/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, ஒழுங்கு விதிகளினால் திருத்தப்பட்ட வாறானவையுமான 2021 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (மட்டுமீறிய ஒழுங்கமைப்புகளைத் தடை செய்தல்) ஒழுங்குவிதிகள்.

பொருள் கோடல்

**74.** (1) இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

"வானூர்தி" என்பது, உலங்கு வானூர்தியொன்றையும் உள்ளடக்குகின்றது;

"ஆயுதந்தாங்கிய படைகள்" என்பது, (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் தரைப்படை, (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைக் கடற்படை மற்றும் (359 ஆம் அத்தியாமான) வான்படைச் சட்டத் தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை வான்படை எனப் பொருள்படும்;

"கரையோரக் காவல் அலுவலர்" என்பது, 2009 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, கரையோரக் காவல் திணைக்களச் சட்டத்தின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டதாதல் வேண்டும்;

"குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டம்" என்பது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம் எனப் பொருள்படும்;

"இரகசிய தகவல்" என்பது,-

(அ) எந்தத் தகவலைப் பரப்புவது இலங்கையின் தேசியப் பந்தோபஸ்து மற்றும் பாதுகாப்பின்மீது பாதகமான தாக்கமொன்றைக் கொண்டிருக்கும் சாத்தியத்தைக் கொண்டுள்ளதோ அந்த ஏதேனும் தகவல் எனப் பொருள்படும்;

(ஆ) பின்வருவன தொடர்பாக, பொதுமக்களின் செயற்களத்தில் இல்லாத எந்தத் தகவல் தேசியப்பந்தோபஸ்து அல்லது பொதுமக்கள் பாதுகாப்புமீது பாதகமான

தாக்கமொன்றைக் கொண்டிருக்கும் சாத்தியத்தைக் கொண்டுள்ளதோ அந்த ஏதேனும் தகவல் எனப் பொருள்படும்:-

(i) பொலிசு, ஆயுதந்தாங்கிய படைகள் அல்லது கரையோரக் காவல் திணைக்களத்தின் ஆட்கள் அல்லது அவர்களின் ஆயுதங்கள், படைக்கலன்கள், சாதனங்கள், வாகனங்கள், கலன்கள், வானூர்திகள் அல்லது தொழினுட்பவியல்;

(ii) குறித்துரைக்கப்பட்ட ஆளொருவரின் பணிகள், நடமாட்டங்கள் அல்லது இருப்பிடங்கள்;

(iii) தடைசெய்யப்பட்ட தடுத்துவைத்தல் இடம் ஒன்று அல்லது அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடம் ஒன்று;

(iv) இச்சட்டத்தின்கீழான தவறுகள் பற்றிய புலனாய்வை நடாத்துதல், அத்தகைய புலனாய்வின் கண்டுபிடிப்புகள், கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்ட ஆட்கள் மற்றும் புலனாய்வை நடாத்தும் அலுவலர்களின் ஆளடையாளம்;

(இ) நிறைவேற்றப்படுவதற்கு உட்கருதப்பட்ட அல்லது நிறைவேற்றப்படுகின்ற அல்லது நிறைவேற்றப்பட்டுள்ள ஏதேனும் சட்ட வலுவுறுத்துகை அல்லது இராணுவ வழிமுறை உள்ளடங்கலாக, ஏதேனும் அலுவலகமுறையான செயற்பாட்டை நடாத்துவதன்மீது பொலிசார் அல்லது ஆயுதந்தாங்கிய படைகள் தொடர்பான ஏதேனும் தகவல்;

(ஈ) தேசியப் பந்தோபஸ்து மற்றும் பாதுகாப்புத் தொடர்பான ஏதேனும் இரகசியக் குறியீடு, சொல், கடவுச்சொல் அல்லது மறைக்குறியீட்டாக்க விபரம்;

"சான்றுக் கட்டளைச்சட்டம்" என்பது, (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச்சட்டம் எனப் பொருள்படும்;

"மேல் நீதிமன்றம்" என்பது, அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றம் எனப் பொருள்படும்;

"இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு" என்பது, 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு எனப் பொருள்படும்;

"அமைச்சர்" என்பது, பாதுகாப்பு அமைச்சர் எனப் பொருள்படும்;

"தண்டனைச் சட்டக்கோவை" என்பது, (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவை எனப் பொருள்படும்;

"ஆள்" என்பது, தனியாள், தனியாட்களின் குழு, கழகம் ஒன்று, ஒழுங்கமைப்பு அல்லது ஆட்கள் குழு எனப் பொருள்படும்;

"தடைசெய்யப்பட்ட ஒழுங்கமைப்பு" என்பது, -

(அ) 59 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பரிவின்கீழ் தடை செய்யப்பட்ட ஏதேனும் ஒருங்கமைப்பு;

(ஆ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப் பட்டவையும் ஒழுங்கமைப்புகளைத் தடை செய்தல் தொடர் பனைவையுமான ஒழுங்குவிதிகளின்கீழ் தடை செய்யப்பட்ட ஏதேனும் ஒழுங்கமைப்பு; அத்துடன்

(இ) 1968 ஆம் ஆண்டின் 45 அம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழ் பெயர்குறிக்கப்பட்ட ஏதேனும் உருவகம்,

எனப் பொருள்படும்;

"செயலாளர்" என்பது, பாதுகாப்பு அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் எனப் பொருள்படும்;

"குறித்துரைக்கப்பட்ட ஆள்" என்பது, பின்வருவோர் எனப் பொருள்படும்: -

(அ) சனாதிபதி;

(ஆ) உயர் நீதிமன்ற, மேன்முறையீட்டு நீதிமன்ற, மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவர், நீதிமுறை அலுவலர்கள் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்கள்;

(இ) சட்டத்துறைத் தலைமையதிபதியும் அவரது அலுவலர்களும்;

(ஈ) பகிரங்க அலுவலர்கள்;

(உ) ஒரு வெளிநாட்டரசின் எவரேனும் பிரதிநிதி அல்லது உத்தியோகத்தர் அல்லது அரசாங்கங்களுக்கிடையேயான பண்பைக் கொண்டவொரு சர்வதேச ஒழுங்கமைப்பின் எவரேனும் உத்தியோகத்தர் அல்லது வேறு முகவர்;

(ஊ) பாராளுமன்றத்தின், மாகாண சபையின் அல்லது உள்ளூர் அதிகாரசபையொன்றின் உறுப்பின ரொருவர்;

(எ) அரசியலமைப்பின் உறுப்புரை 41ஆ வுக்கான அட்டவணையிற் குறித்துரைக் கப்பட்ட ஆணைக்குழுக்களின் எவரேனும் தவிசாளர் மற்றும் உறுப்பினர், 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக் குழுக்கள் சட்டத்தின்கீழ் அல்லது 393 ஆம் அத்தியாயமான விசாரணை ஆணைக் குழுக்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப் பட்ட ஓர் ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர்;

(ஏ) நீதிமன்றத்தின் யூரர், சட்டத்தரணி அல்லது வேறு அலுவலர்; அத்துடன்

(ஐ) ஆயுதந்தாங்கிய படைகளின், பொலிசுப் படையின் மற்றும் வேறெவையேனும் படைகளின் எவரேனும் உறுப்பினரும் கரையோரக் காவல் அலுவலர்களும்;

“இலங்கைக் குடியரசின் ஆள்புலம்” என்பது, அரசியலமைப்பின்கீழ் அச்சொல் லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“ஆளில்லா வாகனம்” என்பது, பொறிமுறையாக்கப்பட்ட அல்லது தன்னியக்கமாக்கப்பட்ட நடமாடும் ஒரு சாதனத்தை மனிதன் ஒருவர் அத்தகைய சாதனத்திற்குள்ளிருந்து செலுத்துவதற்கு ஆற்றலைக் கொண்டிராததும் தொலைவிலிருந்து செலுத்தப்படக்கூடியதும் அல்லது செலுத் தப்படக்கூடியதல்லாததும் அல்லது கட்டுப் படுத்தப்படக்கூடியதும் அல்லது கட்டுப்படுத்தப் படக்கூடியதல்லாததும் அச்சாதனம் ஒன்றை உள்ளடக்கும்;

"பலியாக்கப்பட்டவர்" என்பது, 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் "குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்" என்னும் சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"சாட்சி" என்பது, 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப் பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தில் பயன்படுத்தப்பட்டதும் தண்டனைச் சட்டக்கோவையில் அல்லது குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டதும் ஆனால் இச்சட்டத்தில் வரைவிலக்கணம் கூறப்படாததுமான ஏதேனும் சொல் அல்லது சொல்லமைப்பு, முறையே தண்டனைச் சட்டக்கோவையின்கீழ் அல்லது குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின்கீழ் அத்தகைய சொல் அல்லது சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**75.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## முதலாம் அட்டவணை

[பிரிவு 3(2)(ஒ)]

பொருத்தனைகள்

1. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபதாமாண்டு திசெம்பர் 16 ஆந் தேதியன்று ஹேக்கில் செய்யப்பட்ட, வானூர்திகளின் சட்ட விரோதமாகக் கைப்பற்றுதலை ஒடுக்குதலுக்கான சமவாயம்.

2. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தோராமாண்டு செத்தெம்பர் 23 ஆந் தேதியன்று மொன்றியலில் செய்யப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்தின் பாதுகாப்பிற்கெதிரான சட்டவிரோதச் செயல்களை ஒடுக்குவதற்கான சமவாயம்.

3. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்திமூன்றாமாண்டு திசெம்பர் 14 ஆந் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இராஜதந்திர முகவர்கள் உட்பட சர்வதேசரீதியில் பாதுகாக்கப்பட்ட ஆட்களுக்கெதிரான குற்றங்களைத் தடுத்தல் மற்றும் தண்டித்தல் பற்றிய சமவாயம்.

4. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாமாண்டு திசெம்பர் 17 ஆந் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட பணயக் கைதிகளை எடுத்தலுக்கெதிரான சர்வதேசச் சமவாயம்.

5. ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பதாமாண்டு மாச்சு 3 ஆந் தேதியன்று வியன்னாவில் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட அணுசக்திப் பொருட்களின் வரும்படி ரீதியிலான பாதுகாப்பு பற்றிய சமவாயம்.

6. ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தெட்டாமாண்டு பெப்புருவரி 24 ஆந் தேதியன்று மொன்றியலில் செய்யப்பட்ட, சிவில் விமானப் போக்குவரத்தின் பாதுகாப்பிற்கெதிரான சட்டவிரோதச் செயல்களை ஒடுக்குவதற்கான சமவாயத்துக்குக் குறைநிரப்பியாகிய சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்துக்கு சேவையாற்றும் விமான நிலையங்களில் சட்டவிரோதமான வன்முறைகளை ஒடுக்குவதற்கான உடன்பாடு.

7. ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தெட்டாமாண்டு மாச்சு 10 ஆந் தேதியன்று உரோமில் செய்யப்பட்ட, கடற்றுறை கலமோட்டல் பாதுகாப்புக்கெதிரான சட்டவிரோதச் செயல்களை ஒடுக்குவதற்கான சமவாயம்.

8. ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தெட்டாமாண்டு மாச்சு 10 ஆந் தேதியன்று உரோமில் செய்யப்பட்ட, கண்டவோட்டின்மீது அமைந்துள்ள நிலையான தலமேடைகளின் பாதுகாப்பிற்கான சட்டவிரோதச் செயல்களை ஒடுக்குவதற்கான உடன்பாடு.

9. ஆயிரத்துத்தொளாயிரத்து தொண்ணூற்றேழாமாண்டு திசெம்பர் 15 ஆந் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட பயங்கரவாதிக் குண்டுத்தாக்குதல்களை ஒடுக்குவதற்கான சர்வதேசச் சமவாயம்.

## இரண்டாம் அட்டவணை

[பிரிவு 25(1)]

**கைதுசெய்தலும் கட்டுக்காப்பும் பற்றிய அறிவிப்பு**

1. கைதுசெய்யப்பட்ட ஆளின் பெயர்:-

2. கைதுசெய்யப்பட்ட தேதியும், நேரமும் மற்றும் இடமும்:-

3. கைதுசெய்தலுக்கான காரணங்கள்:-

4. கைதுசெய்யப்பட்ட ஆளின் உத்தேசக் கட்டுக்காப்பிடம்:-

5. கைதுசெய்யும் அலுவலரின் பெயரும், அடையாளங்காண் இலக்கமும் பதவிவரிசையும்:-

6. கைதுசெய்யப்பட்ட ஆளின் கிட்டிய உறவினர் அவருக்கு நியாயமான அணுக்கத்தைக் கொண்டிருப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான வேறேதேனும் தகவல்:-

7. அறிவிப்பு வழங்கப்படும் ஆளின் ஆளடையாளம்:-

8. அறிவிப்பின் வழங்குகைத் தேதியும் இடமும்:-

9. அறிவிப்பை வழங்கும் அலுவலரின் பெயரும், பதவிப்பெயரும், கையொப்பமும்:-

## மூன்றாம் அட்டவணை

[பிரிவு 25(3)]

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் கைதுசெய்தல் பற்றிய அறிவிப்பு**

1. கைதுசெய்யப்பட்ட ஆளின் பெயர்:-

2. கைதுசெய்யப்பட்ட தேதி, நேரம் மற்றும் இடம்:-

3. கைதுசெய்யப்பட்டதற்கான காரணங்கள்:-

4. சந்தேகநபர் தடுத்துவைத்தலில் வைத்திருக்கப்படும் இடத்தின் அமைவிடம்:-

5. கைதுசெய்யும் அலுவலரின் பெயர், அடையாளங்காண் இலக்கம் மற்றும் பதவிவரிசை:-

6. தடுத்துவைத்தல் இடத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின் பெயரும், பதவிப்பெயரும் அவரது தொடர்பு விபரங்களும்:-

7. (அ) சந்தேகநபரை உடனடியாக அணுகுவதற்கும்; அத்துடன்

(ஆ) அத்தகைய கைதுசெய்தலும் தடுத்துவைத்தலும் சந்தேகநபரின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனவாவென்பதை நிச்சயிப்பதற்கும்,

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை இயலச்செய்யும் வேறேதேனும் தகவல்.

## நான்காம் அட்டவணை

[பிரிவு 25(3)]

### பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்குக் கைதுசெய்தல் பற்றிய அறிவிப்பு

1. கைது செய்யப்பட்ட ஆளின் பெயர்:-

2. கைது செய்யப்பட்ட தேதி, நேரம் மற்றும் இடம்:-

3. கைது செய்யப்பட்டதற்கான காரணங்கள்:-

4. சந்தேகநபர் எவ்விடத்தில் தடுத்துவைக்கப்படுகின்றாரோ அவ் விடத்தின் அமைவிடம்:-

5. கைது செய்யும் அலுவலரின் பெயர், அடையாளங்காண் இலக்கம் மற்றும் பதவிவரிசை:-

6. தடுத்துவைத்தல் இடத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின் பெயரும் பதவிப்பெயரும் மற்றும் அவரது தொடர்பு விபரங்களும்.

**ஐந்தாம் அட்டவணை**

[பிரிவு 27(2)]

**தடுத்துவைத்தற் கட்டளை**

1. தடுத்துவைத்தற் கட்டளையின் இலக்கம்:-

2. தடுத்துவைத்தற் கட்டளையை வழங்கிய தேதியும் இடமும்:-

3. தடுத்துவைத்தற் கட்டளையை வழங்கக்கோரிய அலுவலரின் ஆளடையாளம் மற்றும் கோரிக்கை செய்த தேதி அத்துடன் ஏற்புடையதானவிடத்து, குறிப்பீட்டு இலக்கம்:-

4. எவ்வாள் தொடர்பில் (சந்தேகநபர்) தடுத்துவைத்தல் அதிகார மளிக்கப்படுகின்றதோ அவ்வாளின் பெயர்:-

5. அதிகாரமளிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடம்:-

6. தடுத்துவைத்தற் காலப்பகுதி:-

7. எக்காரணங்களுக்காகச் சந்தேகநபரைத் தடுத்துவைப்பதற்கு அதிகார மளிக்கப்பட்டுள்ளதோ அக்காரணங்கள்:-